Registered as a news paper in GPO.

T.P.021-2225107
Fax - 021 - 2223922

267, Navalar Road, Jaffna.

Web: www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி வார இதழ்

பக்கங்கள்: இருபது

விலை ரூபா 10.00

மலர்: 01 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 02 (2006.04.15) சனிக்கிழமை ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 16 இதழ்: 01

# தமிழ்மக்கள் மீது வன்முறை திருமலையில் பதற்றநிலை!

திருகோணமலை ---

திருகோணமலையில் சிங்களக் காடையர்கள் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளில் இறங்கியதை அடுத்து நேற்றுமாலை முதல் அங்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமாலை இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது தமிழருக்குச் சொந்தமான இருபது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

திருகோணமலை – கண்டி வீதியில் அனுராதபுரம் சந்தியை அண்மித்த மிகிந்தபுரம் பிரதேசத்தில் சிங்கள இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். நேற்றுமாலை 5.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அறியமுடிகிறது.

மிகிந்தபுரம் பகுதியிலுள்ள வெதுப்பகம் ஒன்றில் பணியாற்றும் மேற்படி இளைஞர் அவர் பணியாற்றும் பகுதியில் வைத்தே கடத்தப்பட்டு வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட முறுகல் நிலைமைகளின்போது மிகிந்தபுரம் பகுதியை அண்மித்த கன்னியா, நடேசபுரம், வரோதய நகர், (08 ஆம் பக்கம் பார்க்க)

## உங்களுடன்.....!

'நமது ஈழநாடு' நாளிதழாக வெளி வர ஆரம்பித்து மூன்றரை ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் - சனிக்கிழமைதோறும் வார இதழாகவும் வெளிவருகிறது.

இதுவரை 'நமது ஈழநாடு' நாளிதழ் யாழ்.குடாநாட்டிலும், வன்னியிலும் உள்ள வாசகர்களிடம் தனியானதொரு அபிமானத்தைப் பெற்றிருக்கிறது.

உள்ளடக்கம் முதல் வடிவமைப்பு வரை வித்தியாசமாக வாசகர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பின் வெளிப்பாடு தான் இது.

தொடர்ந்து வாரமலரும் இதேநோக்கில் நடைபோடும். வாசகர்களின் கைகளில்தான் இந்த வாரமலர் மேலும் மெருகு பெறுவது தங்கியிருக்கிறது.

ஒவ்வொரு வாசகர்களும் தங்கள் எண்ணங்களை எங்களுடன் பகிர்ந்துகொள்வதன்மூலம் - இந்த மலரை இன்னும் வித்தியாசமான முயற்சியுடன் படைக்கமுடியும்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், விடுதலைக்காகவும் இன்னும் இன்னும்

## திருகோணமலையில் கிளைமோர்; 2 படையினர் உட்பட ஐவர் காயம்!

திருகோணமலை ---

திருகோணமலை- 3ம் கட்டைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இரண்டு படையினர் உட்பட 5 பேர் காயமடைந்தனர்.

திருமலை நகரின் வடக்குப் பகுதியில் மூன்று கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அலெஸ் தோட்டம் என்ற இடத்தில் இராணுவத்தினர் பயணம் செய்த வாகனம் பிற்பகல் 2.30மணியளவில் கிளைமோரில் சிக்கியது.

இதில் இரண்டு இராணுவத்தினர், இராணுவ வாகன சாரதி, அப்பகுதியில் நின்று கொண்டிருந்த இருவர் உட்பட 5பேர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க திருகோணமலை பிரதேச சோதனைச் சாவடியில் உள்ள இராணுவத்தினருக்கான பிற்பகல் உணவு எடுத்துச் சென்ற வாகனம் மீது ரிமோட் கொண்ரோல் (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா பேச்சுக்கள் 24, 25 ஆம் திகதிகளில்

அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு ---

அரசாங்கத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் ஜெனிவாவில் இடம்பெறவுள்ளதாக அரச பேச்சுக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏற்கனவே எதிர்வரும் 19 ஆம் திகதிமுதல் 21 ஆம் திகதி வரை (08 ஆம் பக்கம் பார்க்க)



## திருகோணமலையில் பாதுகாப்பு அதிகரிப்பு!

திருகோணமலை ---

திருகோணமலை நகரின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப் பட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

தாங்கியிருக்கிறது.

ஒவ்வொரு வாசகர்களும் தங்கள் எண்ணங்களை எங்களுடன் பகிர்ந்துகொள்வதன்மூலம் - இந்த மலரை இன்னும் வித்தியாசமான முயற்சியுடன் படைக்கமுடியும்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், விடுதலைக்காகவும் இன்னும் இன்னும் புதிய வேகத்தில் நடைபோட உங்கள் அனைவரின் ஆதரவும் எப்போதும் உண்டு என நம்புகிறோம்.


## உறவைக் குலைக்க சதி

இன்று குடாநாட்டை மீண்டும் கொலைகள் ஆட்டிப்படைக்கத் தொடங்கியிருக்கின்றன. ஒரே நாளில் 24 மணிநேரத்துக்குள் தென்மராட்சியில் நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றும் நகரில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொல் லப்பட்டார். இதற்கு முன்னர் ஓட்டோ சாரதி ஒருவர் சுட்டுக்கொல் லப்பட்டார். இப்படியான செயல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவது குடாநாட்டை அச்சத்துள் உறையவைத்துள்ளது.

இந்தக் கொலைகளுக்குக் காரணம் என்னவென்று எவருக்கும் தெரியாதுள்ளது. அரசியல் காரணமா? தனிப்பட்ட விரோதமா? அல்லது இந்தக் கொலைமூலம் ஏதேனும் ஆதாயம் பெறும் முயற்சியா? என்ற குழப்பத்துக்கு விடை கூறப்போவது யாரோ தெரியவில்லை.

ஆனால், நேற்று முஸ்லிம் வர்த்தகரை படுகொலை செய்த சம்பவம் தமிழ் - முஸ்லிம் உறவை சீர்குலைக்க எடுக்கும் முயற்சி என்பதில் சந்தேகமில்லை.



## பாதுகாப்பு அதிகரிப்பு!

திருகோணமலை —

திருகோணமலை நகரின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப் பட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை திருகோணமலை நகரில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்தே முப்படையினர் மற்றும் பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆயிரம் பொலிஸார் திருகோணமலை நகரப் பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருப்பதாகவும் அத்துடன் முப்படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் நேற்று முன்தினம் திருகோணமலை நகருக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை (08 ஆம் பக்கம் பார்க்க)

# படுகொலைகள் தொடர்ந்தால் போர் சூழலை தோற்றுவிக்கும்!

## யாழ்.மாவட்ட அரசியற்துறை எச்சரிக்கை

யாழ்ப்பாணம் —

அதிகரித்துவரும் மக்கள் மீதான படுகொலைகள் தொடருமாயின் விரைவில் மீண்டும் யுத்த நிலைமையை ஏற்படுத்தும் என - யாழ்.மாவட்ட அரசியல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக மக்கள் மீதான படுகொலைகள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிங்கள ஆட்சியாளர்களின் சிந்தனைப் போக்கு - சிறுபான்மை இனங்களை அழிப்பதும், அவர்களின் வாழ்வியலைச் சிதைப்பதும், இனங்களுக்கிடையே மோதல்களை உருவாக்குவதுமே கடந்தகால வரலாறு. இதை எமது மக்கள் வரலாற்று ரீதியாக அறிந்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க - கடந்த சில வாரங்களாக திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மக்கள் மீதான மிகக் கொடூரமான வன்முறைகளையும், படுகொலைகளையும் மேற்கொண்டுவந்த அரச பயங்கரவாதம் - இன்று யாழ். நகரப் பகுதியில் வைத்து முஸ்லிம் சகோதரர் ஒருவரையும் சுட்டுப் படுகொலை செய்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் அரசு சமாதானத்தின் மீது பற்றுறுதி கொண்டு(08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் முஸ்லிம் வர்த்தகர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரப்பகுதியில் வை[illegible] நேற்றுப் பிற்பகல் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்

இந்தச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில் -

யாழ்.பஸ் நிலையத்துக்கருகில் முனீஸ்வரன் வீதியிலுள்ள ஹற்றன் நசனல் வங்கிக் கிளைக்கருகில் வைத்து நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்படி இளைஞரை துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர்.

இந்தச்சம்பவத்தில் யுனைட் முகமட் பஸ்மின் (வயது 25) என்ற முஸ்லிம் இளைஞரே கொல்லப்பட்டவராவார்.

இவரது சடலம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் முஸ்லிம் உறவுகளை சீர்குலைக்க திட்டமிட்டு நடத்தும் படுகொலைகள்

## தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் குற்றச்-சாட்டு

யாழ்ப்பாணம்

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே உள்ள உறவுகளை சீர்குலைக்கும் நோக்குடன் இராணுவத்தினரும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களும் இணைந்து முஸ்லிம் இளைஞனை படுகொலை செய்துள்ளனர் என யாழ்.மாவட்ட தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் குற்றம் சாட்டியுள்ளது.

யாழ்.நகரில் நேற்று சுட்டுக் கொல்லப்பட்ட முஸ்லிம் இளைஞனின் படுகொலை குறித்து வெளியிட்ட அறிக்கையில் -

தமிழர் தாயகப் பிரதேசங்களில் இராணுவம் மற்றும் அதனுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களும் நாளுக்குநாள் படுகொலைகளைச் செய்து வருகின்றன.

கடந்த இரண்டு தினங்களில் ஆறு பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியே இன்றும் யாழ்.நகரப்பகுதியில் வைத்து முஸ்லிம் சகோதரன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இது தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் உள்ள உறவை சீர்குலைக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறான சிங்களப் படையினதும், ஒட்டுக்குழுவினதும் செயற்பாடுகள் அவர்களை விரைவில் இந்த மண்ணைவிட்டு ஓடவைக்கும் என்பது தெளிவாகிறது. இவ்வாறான செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## ஓவியர் தட்சணாமூர்த்தி சடலமாக மீட்பு!

அளவெட்டி

ஓவியர் தட்சணாமூர்த்தி அவரது வீட்டில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அளவெட்டியிலுள்ள அரவது வீட்டில் தனித்திருந்த இவர் இறந்திருப்பதை அயலவர்கள் கண்டு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் - தினகரன், ஈழநாடு, ஈழமுரசு, வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் ஓவியராகக் கடமையாற்றி பாராட்டுக்களையும் பெற்றார்.

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்

சர்வதேச லயன்ஸ் கழகம் யாழ். மாவட்டம் 306 பி1 இன் 2005 - 2006 பிராந்திய மாநாடு தவிர்க்கமுடியாத காரணத்தால் மே 12 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக லயன் வி.எஸ்.சொக்கலிங்கம் தெரிவித்தார்.

* * * *

பருத்தித்துறை

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமுக நிலையம் நாளை நடத்தவிருந்த அமரர் சதாவதானி கதிரவேற்பிள்ளை நினைவுதின நிகழ்வுகள் நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலை காரணமாக கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக சனசமுகநிலையத்தின் தலைவர் அ.தங்கராசா தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## அமரர்.திரு.ஆறுமுகம் வைரமுத்து

(முன்னாள் இ.போ.ச நடத்துனரும், வி.பி.என் அரிசி ஆலை உரிமையாளரும்)



மீசாலையைச் சேர்ந்த முன்னாள் இ.போ.ச நடத்துனரும் வி.பி.என் அரிசி ஆலை உரிமையாளருமாகிய அமரர்.திரு. ஆறுமுகம் வைரமுத்து (வயது 68) என்பவர் நேற்று முன் தினம் (13.04.06) சிவபதம் அடைந்தார். இவரது ஈமக்கிரியைகள் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தத் தகவலினை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறும், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்த அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்

தகவல்
குடும்பத்தினர்

(12) (சி.5255)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், அசின், பிரகாஸ்ராஜ்
மற்றும் பலர் நடித்த
சிவகாசி
இன்று மட்டும் இரவு 8.40 மணிக்கு
ரஜனி, ரேகா நடித்த உழைப்பாளி
கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

ராஜா யாழ்ப்பாணம்
புதுவருட வெளியீடு
பரத், மல்லிகா கபூர்
மற்றும் பலர் நடித்த

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
ப.நேரம்:10.30,2.30,6.30,9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா,
விவேக் நடித்த
கள்வனின் காதலி
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின
அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா
மற்றும் பலர் நடித்த
திருப்பதி

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு
காலை 7.30 இரவு 12.00 விசேட காட்சிகள்
கா.நே-10.30,2.30,6.30,9.30(பு.நே)
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்

அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

சகலவிதமான படப்பிடிப்பு
வேலைகளுக்கும்
சாயி போட்டோ

1010/11, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்.
தொடர்பு:
இரா.பற்குணம்
021-4591348
உரிமையாளர்:
V.கருணாநிதி
077-6003514

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்


புத்தாண்டுப் பரிசு
பாரம்பரிய கலை ஆவணப் பதிவு நாடா..............
இசைநாடகம் / சிந்துநடைக்கூத்து
ஒலிப்பேழை / இறுவட்டு அறிமுகவிழா
காத்தவராயன் சிந்துநடைக்கூத்து, இசைநாடகங்களான ஞானசவுந்தரி, சம்பூர்ண அரிச்சந்திரா, பவளக்கொடி, நல்லதங்காள், கோவலன் கண்ணகி, சத்தியவான் சாவித்திரி, சாரங்கதரன், ஸ்ரீவள்ளி, நந்தனார், பூதத்தம்பி

தலைவர்
கருமதிருதி வைத்திய கலாநிதி வை. தியாகராசா
(தலைவர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்)

இடம்
யாழ். இந்து மகளிர் கல்லூரி
விசாலாட்சி மண்டபம்

காலம்
16.04.2006
ஞாயிறு மு.ப 09.30 மணி

முதன்மை விருந்தினர்: திரு.கே.கணேஸ் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்
- பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர்)
- பேராசிரியர் அ.சண்முகதாஸ்
- பேராசிரியர் க.கந்தசாமி (பீடாதிபதி உயர்பட்டப்படிப்புகள் பீடம். யாழ்.பல்கலைக்கழகம்)
- பேராசிரியர் செ.சிவலிங்கராசா (தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- திரு. க.தேவராசா (பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம்)
- திருமதி செ.மகாலிங்கம் (மேலதிக கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
- கலாநிதி. க.குணராசா (தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்)
- திரு. க.சிவஞானம் (ஆணையாளர், யாழ்.மாநகரசபை)
- திரு.அ.சிவசுவாமி (மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர்கள்
- ரோசிரியர் க.குகபாலன் (தலைவர், புவியியல்துறை யாழ்ப்பாணம்)
- திரு.க.கேதீஸ்வரன் (திட்டப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
- திரு.வே.சாம்பசிவம் (பிரதித்திட்டப்பணிப்பாளர், "நேர்ப்" திட்டம்)
- திரு.B.A அருமைநாயகம் (உதவி பொது முகாமையாளர் வடபிரதேசம், இ.வங்கி, யாழ்.)
- திரு.நா.வரதராஜா (வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
- திருமதி எஸ்.தெய்வேந்திரம் (பிரதேச செயலர், நல்லூர்)
- திரு C.A மோகனதாஸ் (பிரதேச செயலர், சங்கானை)
- திருமதி வே.பேரின்பநாதன் (அதிபர், இந்துமகளிர் கல்லூரி)
- திருமதி கோகிலா மகேந்திரராசா (வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம்)
- திரு.எஸ்.ஸ்ரீநிவாசன் (பிரதேச செயலர், தென்மராட்சி)
- திரு.எஸ்.திருவாகரன் (பிரதேச செயலர், உடுவில்)
- செல்வி. கிருபா வீரசிங்கம் (வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)
- திரு.D.M.பற்றிக் டிரஞ்சன், (பிரதேச செயலாளர் யாழ்ப்பாணம். நெடுந்தீவு)
- தி.சி.சத்தியசீலன் (பிரதேச செயலர், கரவெட்டி)
- திரு.எஸ்.செல்வராசா (வலயக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி)
- திரு.ஆர்.வரதீஸ்வரன் (பிரதேச செயலர், பருத்தித்துறை)
- திரு.வ.இராதாகிருஷ்ணன் (வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர், தீவகம்)
- திரு. எஸ்.முரளீதரன் (பிரதேச செயலர், தெல்லிப்பழை)
- திரு.இ.ஜெயசீலன் (பிரதேச செயலர், மருதங்கேணி)
- திருமதி. ஆர்.வரதலிங்கம் (பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)
- திருமதி A. சாந்தசீலன்(பிரதேச செயலர், கோப்பாய்)
- திரு. K. ஸ்ரீமோகன் (பிரதேச செயலர், ஊர்காவற்றுறை)
- திரு.மு.நந்தகோபாலன் (பிரதேச் செயலர், வேலணை)
- திரு.பே.நாகரத்தினம் (உரிமையாளர், பேரம்பலம் அன்சன்ஸ்)
- திரு.ச.கைலாசபிள்ளை (உரிமையாளர், நியூகமல் செரமிக்)
- திரு. க.சோமசேகரம் J.P (இளங்கலைஞர் மன்றம், யாழ்ப்பாணம்)
- திரு. ம.பிரதீபன் (உதவித்திட்டப் பணிப்பாளர் கச்சேரி,யாழ்ப்பாணம்)

நிகழ்ச்சி நிரல்
- மங்கள விளக்கேற்றல்
- அக வணக்கம்
- கழக கீதம்
- வரவேற்புரை: திரு.பொன்.தர்மேந்திரன்
- ஆசியுரை: நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
  வண. பி.எம் இம்மானுவல் அடிகளார்
- தலைமையுரை
- வாழ்த்துரைகள்
- வெளியீட்டுரை: பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் (கலைப்பீடாதிபதி யாழ் பல்கலைக்கழகம்)
- பிரதிகள் வழங்கல்:
- 11 நாடகங்களின் ஒலிப்பேழைகளையும் பெறுதல்
  திரு.யோ.யூராசா (பணிப்பாளர், அருள்மிகு அந்தோனியார் தெய்வக்குழந்தைகள் இல்லம், புங்குடுதீவு)
  திரு.வீ.மகாலிங்கம் (பூபாலசிங்கம் புத்தகசாலை)
- கலைஞர் கௌரவிப்பு
- துணை அனுசரணையாளர் கௌரவிப்பு
- முதன்மை விருந்தினர் உரை
- பதிலுரை: கலாபூஷணம் செ.மெற்றாஸ்மயில்
- நன்றியுரை: திரு.நா.விமலநாதன் (ஆசிரியர்)

தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இப்படிக்கு
விழாக்குழு சார்பில்
கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில் [செயலாளர்]

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
விஜிதா கபே & கூல்பார், 247, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
சிறி மாதவன், 97, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
ஆறுமுகம் ரெக்ஸ்ரைல், 20, பெரியகடை யாழ்ப்பாணம்

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
டேவிட் பீரிஸ் மோட்டார் கொம்பனி லிமிட்டெட்டின் அதிகாரம் பெற்ற சேவை முகவர்
சந்நிதி முருகன் மோட்டஸ் / வேக்சொப் சேவிஸ்
ஓட்டோ மோட்டார் சைக்கிள் ஸ்பெயர் பாட்ஸ், பஜாஜ் உதிரிப்பாகங்கள்,
M.R.F ரயர் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
241, பருத்தித்துறை வீதி,வீரகாளிஅம்மன் கோவிலடி யாழ்.
102, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[2243]

# புலிகள் போர் நிறுத்தத்தை மீறினால் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம்

## இராணுவத்தளபதி தெரிவிப்பு



கொழும்பு —

விடுதலைப் புலிகள் மீண்டும் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும், விதிமுறைகளையும் மீறும் பட்சத்தில் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இராணுவம் தமது கடமையைச் செய்துகொள்ள நேரிடும் என இராணுவ தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

கடந்த சில தினங்களாகப் படையினர் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. புலிகள் அரசியல் தீர்வு முயற்சியிலா அல்லது இராணுவ தீர்விலா நம்பிக்கை கொண்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. எனினும், எமது படையினர் எதற்கும் தயாரான நிலையிலேயே உள்ளனர்.

புலிகள் ஜெனிவா பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள விரும்பாமையால் தற்போது ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும், இராணுவத்தினர் மீதான தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.


கடந்த சில தினங்களில் புலிகள் படையினர் மீது கிளைமோர் தாக்குதல்களை மேற்கொண்டு, படையினருக்கு உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தி உள்ளனர். இதன் மூலம் புலிகளுக்கு ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் எந்தவித அக்கறையும், ஈடுபாடும் இல்லை என்பது தெளிவாகிறது.

அரசாங்கம் சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடனும், பொறுமையுடனும் செயற்பட்டு வருவதால்தான் மூன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் பேச்சுக்களை மீள ஆரம்பித்துள்ளது.

படையினர் மீது புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பல அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றனர். அவ்வாறு புலிகளின் தாக்குதலுக்கு எதிராகப் படையினர் பதில் தாக்குதல் நடாத்தினால் அப்பாவி தமிழ் மக்கள் பாதிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்ததோடு, கடந்த வாரத்தில் மட்டும் புலிகளின் தாக்குதலில் 20 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# அமைதியைக் கட்டியெழுப்ப இருதரப்பும் உதவவேண்டும்!

## கொபி அனான் வேண்டுகோள்



கொழும்பு —

இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களை நிறுத்தி இயல்புநிலை நீடிக்க இருதரப்பினரும் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி.அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு அவரது செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கையில் அமைதி நீடித்து நிலைக்க அனைத்துத் தரப்பினரும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரசியல் செயற்பாட்டாளர்கள் படுகொலைகள் மற்றும் அரச படையினர், பொலிஸார் மீதான கண்ணிவெடித் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றமை கவலைக்குரியது.

ஜெனீவாவில் அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுக்கள் ஏப்ரல் 19 முதல் 21 ஆம் திகதி வரை திட்டமிட்டபடி நடைபெறும் என்ற நம்பிக்கையுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவும், அமைதி நீடித்திருப்பதற்கான இருதரப்பு நம்பிக்கையை கட்டியெழுப்பவுமான செயற்பாடுகள் தொடங்கப்படவேண்டுமென்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடற்படையினர் ஷெல் வீச்சு: சம்பூரில் இருவர் படுகாயம்

திருகோணமலை —

திருகோணமலை சம்பூரில் கடற்படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர்.

சம்பூர் பிரதேசத்தின் மேற்குக் கரைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 6.05 மணியளவில இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

சம்பூர் கடற்கரைப் பிரதேசத்தின் அண்மித்த கடற்படைக் கலங்கள் - தமிழ் மக்களின் குடியிருப்புக்களை இலக்குவைத்து ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தின.

இதில் சம்பூர் பகுதியைச் சேர்ந்த தவராசா, கோணலிங்கம் சாவித்திரி ஆகிய இருவருமே படுகாயம் அடைந்தனர். மேலும் பலர் காயம் அடைந்ததாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் குறித்து இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டத் தலைவரிடம் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் முறைப்பாடு செய்துள்ளார்.

# பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு முடிவு

கொழும்பு —

2003 ஆம் ஆண்டு இரத்துச் செய்யப்பட்ட அரச சேவைகள் ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்த அமைச்சரவை அறிக்கைக்கு கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அனுமதி கிடைத்துள்ளது.

இதற்கமைய 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர், சேவையில் இணைந்த அனைத்து அரச சேவையாளர்களுக்கும் ஓய்வூதியம் கிடைப்பதுடன், விதவைகளுக்கான நிதியத்தின் அங்கத்துவமும் கிடைக்கும்.

2003 ஆம் ஆண்டு அப்போதிருந்த அரசாங்கம் 2003 ஜனவரி முதலாம் திகதியில் அரச சேவையாளர்களின் ஓய்வூதியத் திட்டத்தை இரத்துச் செய்துவிட்டு அதற்குப் பதிலாக பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தைத் தொடங்கியது.

அன்றிலிருந்து அரச சேவையாளர்களின் சம்பளத்தில் 8 வீதம் இந்த ஓய்வூதியத்துக்காக அறிவிடப்பட்டு வந்தது. அரசாங்கத்தின் சார்பில் 12 வீதம் இதற்காக ஒதுக்கப்பட்டது.

இந்த முறையை இரத்துச் செய்துவிட்டு புழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் 2003 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருவதுடன் முன்னைய தீர்மானத்துக்கமைய வெளியிடப்பட்ட சுற்றறிக்கையும் இரத்தாகவுள்ளது.

# சமாதான சூழலை ஏற்படுத்த நோர்வே அரசு வலியுறுத்து!

கொழும்பு —

இலங்கையின் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளால் போர்நிறுத்த உடன்படிக்கை மோசமாகப் பாதிக்கப்பட்டு, நாடு யுத்தத்தை நோக்கி செல்வதால்- உடனடியாக நாட்டில் சமாதான சூழலை ஏற்படுத்துமாறு நோர்வே அரசாங்கம் - இலங்கை அரசிடமும், விடுதலைப்புலிகளிடமும் கடந்த புதன்கிழமை கடிதம் மூலம் கோரியுள்ளது.


அண்மைய நாட்களில் நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாகத் தமது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ள நோர்வே அரசாங்கம் -புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்கு இரண்டு தரப்பும் சமாதான வழியில் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தக் கடிதம் கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரால் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் கலாநிதி பாலித ஹோகன்னவிடமும்,

விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப்பணிப்பாளர்புலித்தேவனிடமும் ஒப்படைக்கப்பட்டன. (தே)

# ரவிராஜ் மீதான தாக்குதல்மூலம் தமிழரின் சுதந்திரத்தை உணரலாம்

## சந்திரசேகரன் தெரிவிப்பு



கொழும்பு —

இலங்கையில் தமிழ்மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கான ஆபத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் மீது காடையர்கள் மேற்கொண்ட தாக்குதல் மூலம் புரித்துகொள்ள முடியுமென நாடாளுமன்ற உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணித் தலைவருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நாடாளுமன்ற உறுப்பினரொருவர் தமிழராக இருப்பதால், இந்த நிலை ஏற்படுகின்றதென்றால், சாதாரண தமிழ் மக்கள் நடமாடுவதற்கு எவ்வாறான ஆபத்துள்ளதென்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

போர் நிறுத்தத்தையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் கேள்விக் குறியாக்கும் இத்தகைய சம்பவங்கள் அன்றாடம் நடந்து கொண்டிருப்பது சமாதான முயற்சிகளுக்கு இடையூறாகவே அமையும்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் அதன் பின்னணியிலுள்ளவர்களை இனம் கண்டு, இவ்வாறானதொரு நடவடிக்கை எதிர்காலத்தில் நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு 24 ஆம் திகதி

கொழும்பு —

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் மாநாடு எதிர்வரும் 24 ஆம் திகதி ரோக்கியோவில் நடைபெறவுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. எனினும், இது குறித்த உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இந்தக்கூட்டத்தில் இலங்கைக்கான ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி, நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க செயலாளர் நிக்கலஸ் பேன்ஸ், ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் ஜெனிற்றா பெரேரோ வோல்ட் ஆகியோர் இந்தக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

தற்போதைய இலங்கை நிலைமைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

# முஸ்லிம் வர்த்தகர் மட்டக்களப்பில் கொலை

கொழும்பு —

மட்டக்களப்பு பாலமுனையில் முஸ்லிம் வர்த்தகரான கந்தர் லெவ்வை முபீன் (வயது 36) சுட்டுக் கொல்லப்பட்டார்.

பாலமுனையில் தனது வீட்டில் கடந்த புதன்கிழமை இரவு 8 மணியளவில் கடிதம் எழுதிக்கொண்டிருந்தபோது உள்நுழைந்த அடையாளம் தெரியாத இருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் முபீன் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் பாத்திமா பர்சானா (வயது 10), கதிஜா பீவி (வயது 55) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் மட்டக்களப்பு மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் காத்தான்குடி பொரிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அதிபர் பதவி உயர்வுக்கு விண்ணப்பம் கோரல்

கொழும்பு —

இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தவர்களை தரம் I மற்றும் தரம் II இற்குப் பதவி உயர்த்துவதற்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சுக் கோரியுள்ளது.

அதிபர் சேவை உயர்வுகள் தகைமை மற்றும் மூப்பு அடிப்படையில் வழங்கப்படவுள்ளன. கடந்த 31/02/2005ஆம் திகதியன்று 05 வருடகால சேவையைப் பூர்த்தி செய்த இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு -2 தரம் 2 இல் உள்ள அதிபர்கள் இந்தப்பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்கள் தத்தமது வலயக்கல்விப் பணிமனைகள் ஊடாகக் கல்வி அமைச்சுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் மேமாதம் 05 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்பட வேண்டுமெனக் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

# பாடசாலைத் தவணைக்காலம் அரசாங்கத்தால் மாற்றியமைப்பு

கொழும்பு —

பாடசாலை தவணைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகே சுற்று நிருபம் மூலம் சகல கல்வி வலயங்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதன்படி கடந்த வருடம் நடைபெற்ற உயர்தர பரீட்சையில் விஞ்ஞான பெறுபேறுகளில் ஏற்பட்ட வேறுபாடுகளால், இந்த வருடம் ஏப்ரலில் நடத்தப்படவிருந்த உயர்தரப் பரீட்சையைப் பிற்போடுமாறு பல்வேறு தரப்பினர் முன்வைத்த கோரிக்கையை கவனத்தில் எடுத்தும், புது வருடத்தை முன்னிட்டும் கல்வி அமைச்சு நியமித்த குழுவின் சிபாரிசுக்கமைய இந்த வருடம் உயர்தரப் பரீட்சை மேமாதம் 22ஆம் திகதி முதல் நடைபெறும்.

இந்த முறையினால் உயர்தரப் பரீட்சை நிலையங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள், பயன்படாத பாடசாலைகள் என இரண்டு பிரிவுகளாக உள்ளடக்கி பாடசாலை விடுமுறைத் தினங்கள் ஒரே விடு முறைக் காலங்களாகப் புதிய திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி முதலாம் தவணை 02.01.2006 ஆம் திகதி ஆரம்பமாகி 07.04.2006ஆம் திகதி நிறைவுபெறும்.

இரண்டாம் தவணை 24.04.2006 ஆம் திகதி முதலாம் கட்டம் ஆரம்பித்து, 19.05.2006 ஆம் திகதி வரை நடைபெற்று, பின் இரண்டாம் கட்டம் 19.06.2006 ஆம் திகதி ஆரம்பமாகி, 22.08.2006 வரை நடைபெறும்.

மூன்றாம் தவணை 04.09.2006 ஆம் திகதி ஆரம்பமாகி 08.12.2006வரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொண்டிங்கின் சதத்தின் மூலம் வெற்றிபெற்றது அவுஸ்ரேலியா



பதுல்லா

பங்களாதேஷ் - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே பதுல்லாவில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி தனது முதலாவது இனிங்ஸில் 427 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து ஆடிய அவுஸ்ரேலிய அணி தனது முதலாவது இனிங்ஸில் 269 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

மீண்டும் தனது இரண்டாவது இனிங்ஸில் ஆடிய பங்களாதேஷ் அணி 148 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதனால் அவுஸ்ரேலிய அணி 307 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கியது.

கடந்த புதன்கிழமை ஆட்டநேரமுடிவில் அந்த அணி 212 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

பொண்டிங் 72, கில்கிறிஸ்ட் 9 ஓட்டங்களுடன் நேற்றுமுன்தினம் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இதில் கில்கிறிஸ்ட் மேலதிகமாக 3 ஓட்டங்களை மட்டும் பெற்று 12 ஓட்டங்களுடன் ரபீக்கின் பந்தில் போல்டானார்.

அடுத்து வோன் களமிறங்கினார். அவர் 5 ஓட்டங்களை மட்டும் பெற்று ரபீக்கின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து லீ, பொண்டிங்குடன் இணைந்தார். இந்த ஜோடி சிறப்பாக ஆடி அணியை வெற்றிப்பாதைக்குக் கொண்டுசென்றது. அந்தவேளை, 3 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த லீ,



மொட்ராசா வீசிய பந்தை காலித் மசூத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் ஜிலெஸ்பி களமிறங்க, அவுஸ்ரேலிய அணி வெற்றி இலக்கை எய்தியது. அந்த அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 310 ஓட்டங்களைப் பெற்றதால், 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.





இதில் பொண்டிங் சிறப்பாக ஆடி 13 பவுண்டரிகள் அடங்கலாக 118 ஓட்டங்களைப் பெற்றும், ஜிலெஸ்பி 7 ஓட்டங்களுடனும் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் ரபீக் 4, மொட்ராசா, இனாமுல்-ஹக் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# புதுத்தெம்புடன் அணிக்கு திரும்புவாராம் சச்சின்

## கிரேக் சப்பல் நம்பிக்கை





லண்டன்

டெண்டுல்கர் புதுத்தெம்புடன் அணிக்கு திரும்புவாரென பயிற்சியாளர் சப்பல் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -

முழங்கையில் காயமேற்பட்டு குணமடைந்த பின்பும் டெண்டுல்கர் சிறப்பாக ஆடினார். இதேபோல் இந்த முறையும் விரைவில் காயத்திலிருந்து மீண்டு தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்துவார். அவர் புதுத்தெம்புடன் அணிக்குத் திரும்புவார்.

கிரிக்கெட்டிலிருந்து தற்போது டெண்டுல்கர் ஓய்வுபெறத் தேவையில்லை. எப்படி ஆடவேண்டும் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். யாரும் அறிவுரைகள் சொல்லத் தேவையில்லை. அணிக்கு டெண்டுல்கருடைய தேவை அதிகமுள்ளது.

இளம் வீரர்களுக்கு அவர் முன்னுதாரணம். உலகக் கிண்ணப் போட்டியில் டெண்டுல்கர் ஆடவேண்டுமென்பதே இலக்கு. இதற்கு இன்னும் முழுமையான உடல் தகுதியைப் பெற அதிக கால அவகாசம் உள்ளது. அவர் இல்லாததால்தான் ரெய்னாவின் திறமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்திய அணி தற்போது சிறப்பாகச் செயற்படுவதற்கு இளம் வீரர்களின் துடிப்பான ஆட்டமே காரணம். யுவராஜ் சிங் தற்போது பந்துவீச்சிலும் திறமையை வெளிப்படுத்தி வருகிறார். பதான் சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக உருவெடுத்துள்ளமை அணிக்கு வலிமையைக் கொடுத்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

விளையாட்டு

# யங்ஹென்றீசியன் உதைபந்தாட்டம் றோயல் அணி காலிறுதிக்கு தகுதி

இளவாலை

யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்தால் அதன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் றோயல் அணி காலிறுதியாட்டத்தில் விளையாடுவதற்கு தகுதி பெற்றது.

கடந்த சனிக்கிழமை யங்ஹென்றீஸ் மைதானத்தில் றோயல் அணியை எதிர்த்து சென்.றொக்ஸ் மோதியது.

இதில் ஆட்டம் தொடங்கியபோதே இரு அணியினரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதனை நிரூபித்துக்கொண்டிருந்த வேளை, 19ஆவது நிமிடத்தில் கோல் வலயத்துக்குள் வைத்து பந்தை பரிமாறிக்கொண்டிருந்தவேளை, றோயல் அணி வீரர் தர்மகுலசிங்கம் (வெள்ளை) மிக அழகாக கோல் ஒன்றைப் போட்டார். இதுவே அவர்களின் வெற்றிக்கோலாகவும் அமைந்தது.

அதைத் தொடர்ந்து ஆட்டம் மேலும் விறுவிறுப்பு அடையத் தொடங்கியது. இதனால் முதல் பாதியாட்டத்தில் றோயல் அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தவேளை, பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தாக அமைந்த ஆட்டத்தில் இரு கோல்காப்பாளர்களும் மிகச் சிறப்பாக பந்தைப் பிடித்து அனுப்பியபடி இருந்தனர். இதனால் இரு அணிகளாலும் இடைவேளையின் பின்னர் எந்தக் கோலையும் போடமுடியவில்லை.

இதனையடுத்து ஆட்டநேரமுடிவில் றோயல் அணி, சென்.றொக்ஸ் அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதியாட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது. (12)

# ரேக்கி கிண்ண முதல்சுற்றில் கொக்குவில் மத்தி வெற்றி

யாழ்ப்பாணம்

இலங்கை கிரிக்கெட்டின் 3ஆம் பிரிவுக்கான சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளும் யாழ்.மாவட்ட அணியைத் தெரிவு செய்வதற்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 13 விளையாட்டுக் கழகங்களிடையே 50 ஓவர்கள் கொண்ட லீக் முறையிலான ரேக்கி கிண்ண முதல் சுற்றுப் போட்டிகள் யாழ்.மாவட்டத்தில் பல மைதானங்களில் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று ஆட்டமொன்றில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி, தெல்லிப்பளை கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 141 ஓட்டங்களால் வெற்றிகொண்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் - முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய விளையாட்டுக் கழக அணி 48 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் றொபேசன் 47, நிதர்சன் ஆட்டமிழக்காமல் 30, பிரதீபன் மற்றும் சசிகரன் ஆகியோர் தலா 26, ஐங்கரன் 21, சிற்சபேசன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் திலீபன், ராஜகாந்தன், அச்சுதன் ஆகியோர் தலா 2, பிரபாகரன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 36 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 76 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். அந்த அணி சார்பாக ஜீவசங்கர், பிரகலாதன் ஆகியோர் தலா 7, ஆகுலன் 6, அச்சுதன் 5 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் கமல்ராஜ் 3, சிற்சபேசன், கிருபவன் ஆகியோர் தலா 2, நிதர்சன், பிரதீபன், மதூசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தச் சுற்றுப்போட்டியில் தான் கலந்துகொண்ட இரு போட்டிகளிலும் கிறாஸ்கொப்பர்ஸ் அணி தோல்வியடைந்தமையால் காலிறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியை இழந்தது. (58)

# உலகக்கிண்ண போட்டி வரை டெஸ்ட் போட்டிக்கு முழுக்கு

## அப்ரிடி அறிவிப்பு

கராச்சி



உலகக்கிண்ணப் போட்டிவரை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆடப்போவதில்லை என்று பாகிஸ்தான் அணியின் அதிரடி ஆட்டக்காரர் அப்ரிடி அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் அப்ரிடி ஒருநாள் போட்டிகளில் அதிரடியாக ஆடி ஆட்டத்தின் போக்கை மாற்றும் ஆற்றல் படைத்தராக விளங்குபவர். அவர் சமீப காலங்களில் சோபிக்கவில்லை.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப்போட்டி வரை டெஸ்ட் போட்டிகளிலிருந்து விலகுவதாக அவர் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக கராச்சியில் அப்ரிடி நிருபர்களிடம் கூறியதாவது -

நான் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் கவனம் செலுத்த விரும்புகிறேன். அதற்... அடுத்த உலகக் கிண்ணப் போட்டிவரை டெஸ்ட் போட்டியில் ஆடுவதில்லை என்று முடிவு எடுத்துள்ளேன். அதிக போட்டிகளில் ஆடுவதால் ஒட்டுமொத்த ஆட்டத்திறன் பாதிக்கப்படுகிறது. அத்துடன், குடும்பத்தினருடன் போதியளவு நேரத்தைச் செலவிடமுடிவதில்லை.

என்னைப் பொறுத்தவரை எனக்கென்று ஒரு தரத்தை நிர்ணயித்து இருக்கிறேன். எதிர்பாராதவிதமாக சமீப காலங்களில் எனது ஆட்டத்திறன் எனக்குத் திருப்தி அளிக்...வில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# ஷேவாக், கைவ் இருவரையும் அணியிலிருந்து நீக்கவேண்டும்

## முன்னாள் இந்திய கப்டன் கபில்தேவ்



அலகாபாத்

இந்திய கிரிக்கெட் அணியில் மோசமாக ஆடிவரும் சேவாக், கைவ் இருவரையும் அணியிலிருந்து நீக்க வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது -

அண்மைக்காலமாக சேவாக் மற்றும் கைவ் இருவரும் துடுப்பாட்டத் திறமையை இழந்து தவிக்கிறார்கள். இந்த மோசமான ஆட்டம் அணிக்கு பலவீனத்தை ஏற்படுத்திவிடும். திறமை இல்லாத வீரர்களால் அணிக்கு வெற்றியைத் தேடித்தரமுடியாது.

எந்த ஒரு வீரரும் சிறப்பாக விளையாடுவதற்கு தேவையான தகுதிகளை பெற்றிருக்க வேண்டும். மோசமாக ஆடிவருவதால் சேவாக், கைவ் ஆகிய இருவரையும் அணியிலிருந்து உடனடியாக நீக்க வேண்டும். அவர்கள் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக ஆடி திறமையை நிரூபித்து அணிக்கு திரும்பினால் போதும்.

கங்கூலி இப்போது உள்ளூர் போட்டிகளில் நன்றாக ஆடிவருகிறார். இதன் மூலம் அவர் இழந்த ஆட்டத்திறனைப் பெற்றுள்ளார். இதனால் அணியில் மீண்டும் அவரைச் சேர்க்கலாம். டெண்டுல்கர் தோள்பட்டை வலியிலிருந்து நீங்கி மீண்டும் சிறப்பாக விளையாடுவார் என அவர் கூறினார்.

# 100ஆவது டெஸ்டில் ஜக் கலிஸ், பொலக்

செஞ்சூரியன்

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

இந்த இரு அணிகளிடையே 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் நடைபெறவுள்ளது. இதன் முதல் டெஸ்ட் இன்று செஞ்சூரியன் நகரில் நடைபெறவுள்ளது.

இதில் களமிறங்குவதன் மூலம் தென்னாபிரிக்க அணி... ...னணி துடுப்பாட்ட வீரர் கலிஸ் மற்றும் பந்துவீச்சாளர் பொலக் ஆகியோர் 100ஆவது டெஸ்டில் ஆடியவர்கள் என்ற பெருமையைப் பெறுவார்கள்.

உலக கிரிக்கெட்டில் இந்த டெஸ்ட் போர்டிகளில் ஆடும் 39ஆவது வீரர் கலிஸ் ஆவார்.

# அரசின் கண்மூடித்தனமான செயற்பாடுகள் இலங்கையை அவலத்திலேயே தள்ளும்

## எச்சரிக்கிறார் சிவநேசன் எம்.பி

யாழ்ப்பாணம் —

மாமனிதர் விக்னேஸ்வரனின் திட்டமிட்ட படுகொலையைத்தொடர்ந்து தமிழர் தாயகத்தின் தலைநகரான திருமலையைத் திட்டமிட்டு அழித்து, தமிழ்பேசும் மக்களைக்கொன்று குவிக்கும் அரச பயங்கரவாதத்தை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவநேசன் எம்.பி. தெரிவித்தார்.

மாமனிதர் வ.விக்னேஸ்வரனின் இறுதி வணக்க நிகழ்வில் கலந்து திரும்பிய தமிழ்த் தேசிய நாடாளு மன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் வாக னத்தை மறித்துத் தாக்கிச் சேதப்படுத் தியதுடன், அவரையும் தாக்கிக் காயப் படுத்தியமை இனவெறியின் தாக்கு தலாகவே கருதவேண்டியுள்ளது.

இதன் பின்னர் திட்டமிட்டு குண் டொன்றை வெடிக்கவைத்து அதனைச் சாட்டாகப் பயன்படுத்தி, வாகனங்க ளில் சிங்களக் காடையர்களை இரா ணுவம், பொலிஸார் துணையுடன் நகரில் குவித்து, தமிழ் மக்களின் வாழ்விடங்களில் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களைப் பொது மக்கள் மீது நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது 14 தமிழர்கள் கொல் லப்பட்டும் 45 பேர் படுகாயத்துக்கும் உள்ளாக்கப்பட்டு, தமிழர்களின் வியா பார நிலையங்கள் இருபதுக்கு மேல் எரித்தும், கொள்ளையடிக்கப்பட்டும் இருப்பது தமிழ் பேசும் மக்களின் போராட்ட உணர்வைத் தூண்ட அரசு மேற்கொண்ட நடவடிக்கையாகவே பார்க்கிறோம்.

இனவாத சிந்தனையுடன் திட்ட மிட்டுச் சிங்கள மக்களின் மத்தியில் குடியிருக்கும் தமிழ் மக்களைச் சுற்றி வளைத்து இராணுவமும், பொலி சாரும் சூழ்ந்திருக்க தாக்குதலை நடத்திக் கொலை வெறித்தாண்டவம் ஆடியிருப்பது - அரசின் அநாகரிக மான அரச பயங்கரவாத நடவடி க்கை என்பதைச் சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இலங்கை அரசு யாரோ செய்யும் தாக்குதல்களுக்குத் தமிழ் பொது மக்கள் மீது தாக்குதலை நடத்திக் கொன்றொழிக்க முனைவதும், அதற் குப் பேரினவாதிகளைத் தூண்டிவிடு வதையும் தமிழ் மக்கள் பொறுமை யுடன் பார்த்துக்கொண்டிராமல், அவர்களை வலிந்து போருக்கு அழைக்கும் அரசின் செயலாகவே அவதானிக்க முடிகிறது.

ஜெனிவாவில் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையை எவ்வாறு இல் லாது செய்வது என்பதோடு, தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவறாகச் சர்வதேச சமூகத்துக்குக் காண்பிக் கும் உபாயமாக இந்த நடவடிக்கை களைச் சுட்டிக்காட்டிப் பழைமை யான நகர்வு நடவடிக்கையை அரசு மேற்கொள்ள முனையும் சிந்த னையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

ஜெனிவாப் பேச்சுவார்த்தை முடித்து வரும்போது விமான நிலையத்தில் கடந்த காலங்களில் இல்லாதது போல் புதுமையான நடவடிக்கையை மேற் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிக ளின் பிரமுகர்களை அவமானப் படுத்த முயற்சித்த அரசு - அவர்களுக் கான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்க முடியாத நிலையிலிருந்து கொண்டு, தமிழ் மக்களைத் தாக்கி பேச்சுவார்த்தையை குழப்பும் எண் ணம் கொண்டு செயற்படுகிறது.

இது இலங்கையில் சமாதானச் சூழல் உருவாகுவதையோ, தமிழ் மக்களுக்கான உரிமை களையோ, சுதந்தி ரத்தை வழங்கு வதையோ



விரும்பாத அரசின் போக்காக அவதானிக்க முடிகிறது.

எனவே, அரசு மக்களின் மீது தொடர்ந்தும் தாக்குதலை நடத்துவது உடன் நிறுத்தப்படுவதுடன், தமது படைக்கு ஏற்படும் தாக்குதல்கள் யாரால் நடத்தப்படுகிறது என்பதைக் கண்டறிந்து, நடவடிக்கை மேற் கொள்வதே நாகரீகமான செயல்.

இதனைச் சர்வதேச சமூகமும் அவதானித்து அரசபடைகள் மக்கள் மீது நடாத்தும் அடாவடித்தனங்களை நிறுத்த அரசுக்கு அழுத்தம் கொடுப் பதன் மூலமே இலங்கையில் அமைதி நிலையைப் பேணிப் பாதுகாக்க முடியும் என்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 30 சிறுவர் கழகங்கள் குடா நாட்டில் அமைப்பு

யாழ்ப்பாணம் —

சிறுவர் உரிமைகளை மேம் படுத்தும் வகையில் இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் யாழ். குடாநாட்டில் 30 சிறுவர் கழகங் களை அமைக்கவுள்ளது.

இதன்படி யாழ்ப்பாணத்தில் எட்டு சிறுவர் கழகங்களும், பருத்தித் துறையில் ஆறு சிறுவர் கழகங்க ளும், ஊர்காவற்துறையில் பத்து சிறுவர் கழகங்களும், சாவகச்சேரி யில் ஆறு சிறுவர் கழகங்களும் அமைக்கப்படவுள்ளதாகள அனர்த்த கால ஏற்பாட்டு குழுவின் இணைப் பாளர் எஸ்.ஞானசொரூபன் தெரி வித்தார்.

அனர்த்தகாலப் பணிகளின் போது இந்த சிறுவர் கழகங்கள் ஈடுபடுத்தப்படும் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

## நீரிறைக்கும் இயந்திரங்கள் இலவசமாக விநியோகம்

மாதகல் —

விவசாய செய்கையை ஊக் குவிக்கும் வகையில் விவ்சாயிக ளின் நன்மை கருதி மாதகல் விவ சாயிகள் சம்மேளனத்துக்கு எவ்.ஏ. ஓ. நிறுவனம் இரண்டு நீரிறைக்கும் இயந்திரங்களை இலவசமாக வழங் கியுள்ளது.

இந்த நீரிறைக்கும் இயந்திரங் களைத் தேவைப்படும் விவசாயிகள் - குறைந்த கட்டணத்தில் வாட கைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

## விற்பனையாளரை நியமிக்க பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம் —

கந்தர்மடம் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தின் அருகில் இயங்கும் யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 9 ஆம் இலக்க கிளையில் விற்பனையாளர் நீண்ட காலமாக இல்லாத காரணத்தால் நிவாரணம் மற்றும் பொருட் கொள் வனவுக்குச் செல்லும் மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கு கின்றனர்.

நான்கு கிராமசேவகர் பிரிவுகளின் சமுர்த்தி முத்திரைக்கான உணவுப் பொருள் வழங்கல் மற்றும் இரண்டு கிராமசேவகர் பிரிவில் இடம்பெயர்ந் தோர் நிவாரணப் பொருட்கள் மற்றும் நலிவுற்றோர் நிவாரணப் பொருட்கள் என்பவற்றைக் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பெறுமாறு பிரதேச செயல கம் அறிவித்துள்ள நிலையில், குறித்த நிவாரணப் பொருட்களை மக்களால் உரிய நேரத்தில் இலகுவாகப் பெற முடியாதுள்ளது.

குறித்த பலநோக்கு சங்க நிர் வாகத்தினர் குறித்த கிளை தொடர் பாக தேவையான பணியாளரை உடன் நியமித்து மக்களின் தேவை யை பூர்த்தி செய்யவேண்டும் என அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (110)

## கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழா

நெடுந்தீவு —

நெடுந்தீவு தென்னிர்திய திருச்சபை பகற் பராமரிப்பு நிலைய பழைய மாணவர் ஒன்றியம் நடாத்தும் கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு தென்னிந்திய திருச்சபை கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பழைய மாணவர் ஒன்றிய தலைவர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில்பிரதம விருந்தினராக மருதனாமடம் கிறிஸ்தவ இறையியற் கல்லூரி விரிவுரையாளர் அருட்திரு ஈனோக் புனிதராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வின்போது உயிர்ப்பின் கீதங்கள், நடனம், கவியரங்கம், நாடகம் போன்றவையும், வெள்ளிவிழா நிகழ்வுகளில் வெற்றியீட்டியவர்க ளுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது. (113)

## பழைய புத்தகத்தை வாங்குமாறு மாணவர்கள் மீது நிர்ப்பந்தம்


யாழ்ப்பாணம் —

யாழ். நகரப் பகுதியில் அமைந் திருக்கும் பாடசாலையில் கடந்த 30 ஆம் திகதி தவணைப் பரீட்சை நடை பெற்றுக் கொண்டிருந்த வேளையில் 2003/2004 ஆம் ஆண்டுப் பகுதிக் கான குறித்த பாடசாலையின் புத்தக த்தை ரூபா 300 இற்கு அனைவ ரும் பெற வேண்டும் எனக் கூறி விற் கப்பட் டுள்ளதாக பெற்றோர் தெரிவித் தனர்.

தாங்கள் அச்சடித்த புத்தகம் அதிக மாக உள்ளது என்ற காரணத்தால் இரண்டாண்டுகள் கழித்து இவை விற்கப்பட்டுள்ளது.

ஒரு மாணவனின் நேரடிக்கல் விச் செலவைத் தவிர பன்மடங்கு பெரிய தொகை ஏனைய தேவைக் குச் செலவு செய்யவேண்டி உள்ள தாகக் கூறும் பெற்றோர் - மாணவர்க ளின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொள்ளாது செயற்படுவது குறித்து கவலை தெரிவித்தனர்.

இனிவரும் காலங்களில் பொரு ளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட தம்மை மேலும் பாதிக்கச் செய்யும் செயல்க ளில் ஈடுபடுத்த வேண்டாம் என அவர் கள் தெரிவித்தனர். (110)



யாழ். குருநகர் உத்தரிய அன்னை ஆலய முன்றலில் ஆலய இளைஞர் கழகத் தால் காட்சிப்படுத்தப்பட்ட பாஸ்கா காட்சியைப் படத்தில் காணலாம். (206)

## உதைபந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான உதைபந்தாட்டச் சுற் றுப் போட்டிகள் எதிர்வரும் 17, 18, 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் யாவும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும் யாழ். பொது விளையாட்டரங்கிலும் நடைபெறும் என யாழ். மாவட்ட செய லாளர் தெரிவித்தார்.

## சித்திர பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம் —

விடுமுறைக் காலத்தில் மாண வர்களிடையே சித்திர ஆர்வத்தைத் தூண்டும் வகையில் ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப் பயிற்சி நிறுவனம் இளம் ஓவியக் கலைஞர்களை ஒன்றி ணைத்து எதிர்வரும் 17, 18, 19 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக் கம் நண்பகல் 12 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் விடு முறைக்கால இலவச சித்திரப் பயிற் சிப் பட்டறையை நடத்தவுள்ளது.

எனவே, இந்தப் பயிற்சியில் பயில விரும்பும் தரம் 7 இற்கு மேற் பட்ட மாணவர்கள் வரைதலுக்குரிய உபகரணங்களுடன் வருகை தரு மாறு இந்த நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளனர்.

## ஆசிரிய ஆலோசகர்களுக்கான 5 நாள் வதிவிடப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம் —

வடக்கு-கிழக்கு மாகாணப் பாட சாலைகளில் ஆலோசனையும், வழி காட்டலும் நிகழ்ச்சித்திட்டத்தை நடை முறைப்படுத்தும் ஆசிரிய ஆலோசகர் உள்ளிட்ட ஆளணியினருக்கு வதி விடப் பயிற்சி எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஐந்து நாட்கள் கோப்பாய் ஆசி ரியர் கலாசாலையில் நடைபெறவுள் ளது.

தேசிய கல்வி நிறுவனத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள வதிவிட பயிற்சியில் - சிறுவர் உளநல ஆரோக் கியம் என்ற விடயம் தொடர்பான பயிற்சி வழங்கப்படவுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் வலய ரீதியாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள், வளநிலைய முகாமையாளர்கள், கல்வியியற் கல் லூரிகளின் ஆலோசகர்கள், வழிகாட் டல் சேவையாளர்கள் ஆகியோர் இந்த ஐந்து நாள் பயிற்சிக்கு அழைக் கப்பட்டுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறிக்கு மேற்படி பிரிவிலுள்ளவர்களைத்தவறாது கலந்து கொள்ளுமாறு மாகாண பிரதிக் கல் விப் பணிப்பாளர் கே.முருகுப்பிள்ளை தெரிவித்தார்.

## ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் இத்தாலிய மொழித் திரைப்படம்

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழகத் திரைப் பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.நகர ஜும்மாப் பள்ளி வாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மண்டபத்தில் "UMBER TO.D" எனும் இத்தாலிய மொழித் திரைப்படம் - ஆங்கிலத் துணைத் தலைப்புடன் அகன்ற திரையில் காண் பிக்கப்படவுள்ளது.

புகழ்பெற்ற இத்தாலிய நவ யதார்த்தவாத இயக்குநர் விக்ரோ றியா - டி- சீக்காவினது நெறியாள் கையில் உருவான இந்தத் திரைப் படத்தை ஆர்வமுள்ளோர் எவரும் வருகை தந்து கண்டு பயன்பெற லாமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித் தனர்.

படக்காட்சியின் இறுதியில் எழுத் தாளர் அ.யேசுராசா தலைமையில் காண்பித்தபடம் பற்றிய கலந்துரை யாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது.



நல்லூர் பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடத்துக்கு அடிக்கல்லை யாழ். மாநகரசபைக்கு அருகில் உள்ள காணியில் அரச அதிபர் கே.கணேஷ் நாட்டி வைப்பதைப் படத்தில் காணலாம்.

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வயது வேறுபாடின்றி மக்கள் இணைவு



கிளிநொச்சி

தமிழீழ தாயக விடுதலைப் போராட்டத்தில் 16 பேர் ஒரேதினத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற சமகால அரசியல் கருத்தாடல் நிகழ்வில் இளைஞர்கள், வயது முதிர்ந்தவர்கள் எனப் 16 பேர் தம்மை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டனர்.

விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட அவர்கள் அரசின் இழுத்தடிப்புகளுக்கு இனியும் விட்டுக்கொடுக்கமுடியாது. விரைவில் நாம் விடுதலையை வென்றெடுக்க வேண்டும். சமாதானம் என்று அரசு நடத்தும் ஏமாற்று நடவடிக்கையிலிருந்து நாம் தப்பி விடுதலையை வென்றெடுக்கவே விடுதலைப் போராட்டத்தில் இணைந்ததாக தெரிவித்தனர்.

கடந்த சிலநாட்களில் மன்னாரில் 217 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 107 பேரும் விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர்.

திருமலையில் தமிழ் மக்கள் மீது அரசாங்கமும், படைத்தரப்பும் வெறியாட்டம் நடத்தும் நிலையில் தமிழ் மக்கள் தங்களை விடுதலைப் போராட்டத்தில் பெருமளவில் இணைத்துக் கொள்வது குறிப்பிடத்தக்கது.

## நினைவுத்தூபி திறப்புவிழா!

கிளிநொச்சி

கிளிநொச்சி - ஸ்கந்தபுரத்தில் இலங்கை, இந்தியப் படைகளால் கொலை செய்யப்பட்ட மக்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி அன்னை பூபதி நினைவுதினமான எதிர்வரும் 19 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்று இரவு ஸ்கந்தபுரம் டானியல் அரங்கில் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ)

## மடு கல்விப் பணிமனைக்கு நிகொட் திட்டத்தில் புதிய கட்டடம்

### மடு கல்விப்பணிப்பாளர் ம.தேவேந்திரன் தெரிவிப்பு

மன்னார்

மடு கல்விப் பணிமனைக்குப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது என மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ம.தேவேந்திரன் தெரிவித்தார்.

மடுவலய கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - மடு கல்வி வலயத்தில் உள்ள 41 பாடசாலைகளில், 36 பாடசாலைகள் தற்போது இயங்குகின்றன. பாடசாலைகளில் அபிவிருத்திப் பணிகள் இடம் பெற்றாலும், நிறைவான நிலையை அடையவில்லை.

எமது கல்வி வலயத்துக்கு கூட நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையில் நிகொட் திட்டத்தின் கீழ் ஒன்றரைக் கோடி செலவில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (கு)

## அஞ்சல் அலுவலகம் புதுக்குடியிருப்பில் திறப்பு

புதுக்குடியிருப்பு

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கான அஞ்சல் அலுவலகம் கடந்த திங்கட்கிழமை காலை திறந்துவைக்கப்பட்டது.

அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெயரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து, தேசியக் கொடியை புதுக்குடியிருப்பு கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் புகழரசன் ஏற்றிவைக்க, தபால் கொடியை வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் வி.குமரகுரு ஏற்றிவைத்தார்.

பெயர்ப் பலகையை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.பார்த்தீபன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து கட்டடத்தை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு வீதியில் சிவன் ஆலயத்துக்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்ட இந்த அஞ்சல் அலுவலகம் கடந்த அரை நூற்றாண்டு காலமாக உப அஞ்சல் அலுவலகமாக இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## சேதமடைந்த பாலத்தை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

புதுக்குடியிருப்பு

புதுக்குடியிருப்பு - கேப்பாபுலவு- முள்ளியவளை வீதியில் சேதமடைந்த பாலத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி 400 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக முல்லை மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் வே.சிவமயம் தெரிவித்தார்.


தற்போது பாலம் அமைந்துள்ள பகுதியில் தாம்போதி அமைத்து வீதி புனரமைக்கப்படவுள்ளதாகவும், இதன் ஆரம்ப கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். முதலாவது தாம்போதி 300 அடி நீளத்திலும், இரண்டாவது தாம்போதி 535 அடி நீளத்திலும் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வெ)

## தண்ணீர் தாங்கிக்கு அடிக்கல்

கிளிநொச்சி

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கத்தினரால் தண்ணீர் தாங்கி ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது.

பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் வட்டக்கச்சி இராமநாதபுரம் வாழ் புலம்பெயர் மக்களின் நிதி உதவியுடன் இந்தத் தண்ணீர் தாங்கி அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை வட்டக்கச்சி மகாவித்தியாலய முதல்வர் க.கனகசிங்கமும், பழைய மாணவர்களும் நாட்டி வைத்தனர். (09)





அண்ணாநகர் பரமேஸ்வரன் வித்தியாலய விளையாட்டு போட்டிகள் அண்மையில் நடைபெற்றது. அண்ணா நகர் கிராம சேகவர் ஸ்ரீஸ்கந்தராஜா மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், அங்கு இடம்பெற்ற மாணவர்களின் அணி நடை நிகழ்வையும் படங்களில் காணலாம். படம்- கனகரவி

## தமிழ்ச் சங்கம் நடத்திய மனனப் போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு

முல்லை மாவட்ட தமிழ்ச் சங்கம் நடத்திய மாவட்ட மட்டத்திலான கொன்றைவேந்தன், திருக்குறள் மனனப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஆறாம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் மகாவித்தியாலத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

முதலாம் பிரிவு :-

ஆத்திசூடி கொன்றை வேந்தன் மனனப் போட்டி -

முதலாம் இடம் - சி.கௌசிகன், (மு.மாங்குளம் ம.வி,) இரண்டாம் இடம் - க.நிதர்சனா, (மு.செம்மலை ம.வி) மூன்றாம் இடம் தி.தரணிகா, (மு.துணுக்காய் அ.த.க பாடசாலை)

இரண்டாம் பிரிவு :-

ஆத்திசூடி கொன்றை வேந்தன் மனனப் போட்டி -

முதலாம் இடம் கி.பிரியங்கன், (மு.யோகபுரம் ம.வி) இரண்டாம் இடம் நா.அச்சுதன், (மு.யோகபுரம் ம.வி) மூன்றாம் இடம் அ.புனிதா (மு.மாங்குளம் ம.வி)

மூன்றாம் பிரிவு :-

திருக்குறள் மனனப்போட்டி -

முதலாம் இடம் அ.தேம்பாஜினி, (மு.ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை) இரண்டாம் இடம் ச.தேனுகா, (மு.துணுக்காய் அ.த.க பாடசாலை) மூன்றாம் இடம் த.மிதுஜினி (மு.துணுக்காய் அ.த.க பாடசாலை)

நான்காம் பிரிவு:-

திருக்குறள் மனனப் போட்டி -

முதலாம் இடம் ம.மரியலிஸ்ரா, (மு.குமுழமுனை ம.வி) இரண்டாம் இடம் ம.திலீபனா, (மு.ஐயங்கன்குளம் அ.த.க பாடசாலை) மூன்றாம் இடம் ஆ.கம்சனா. (மு.புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி) ஆகியோருக்கே பரிசில்கள் வழங்கப்பட்டன.

## மலசலகூடம் அமைக்க கொடுப்பனவு வழங்கல்

மல்லாவி

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மலசல கூடங்கள் அமைப்பதற்கென சென்ற வருடம் தெரிவு செய்யப்பட்ட 67 பேருக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

கடந்த ஐந்தாம் திகதி மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து வழங்கப்பட்ட இந்தக் கொடுப்பனவை 60 பேர் பெற்றுக் கொண்டனர். கொடுப்பனவுகள் பெறாத ஏனைய எழுவரும் முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாமென சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்தனர்.

## வீடமைப்புத் திட்டத்துக்கு பொருட்கள் வழங்கல்

இராமநாதபுரம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும், ''சோஆ'' நிறுவன உதவியுடனும் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் விநாயகர் குடியிருப்பு மக்களுக்கென வீடமைப்புத்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 55 குடும்பங்களுக்கு 27ஆயிரம் ரூபா பெறுமதியான மரங்கள், தகரங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், ஒரு குடும்பத்துக்கு 10 சிமெந்துப் பைக்கற்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக வழங்கப்பட்ட பொருட்களுக்கான வேலைகள் யாவும் செய்து முடிக்கப்பட்டதும், இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பொழுதுபோக்கு மையங்களுக்கு வடமராட்சி கிழக்கில் அடிக்கல்!

கிளிநொச்சி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் சிறுவர் பொழுதுபோக்கு மையக் கட்டடங்கள் அமைப்பதற்கான அடிக்கற்கள் நாட்டும் நிகழ்வுகள் இரண்டு - வடமராட்சி கிழக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

நேற்றுமுன்தினம் பகல் 11 மணியளவில் இடம்பெற்ற முதலாவது நிகழ்வு - உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தேவிகா தலைமையில் கௌதாரிமுனை பொதுநோக்கு மண்டபத்துக்கு அருகாமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிராம சேவையாளர் சி.சுப்பிரமணியம், பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் பஞ்சாட்சரம், ஊரக மேம்பாட்டுக்குழுத் தலைவர் பொ.லோகேஸ்வரன் ஆகியோர் அடிக்கற்களை நாட்டினர்.

இதேபோன்று பரமன்கிராய் என்னுமிடத்தில் சிறுவர் பொழுதுபோக்கு மையத்துக்கான மற்றுமொரு புதிய கட்டடத்துக்கான நாட்டும் நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு இணைப்பாளர் தேவிகா தலைமையில் நண்பகல் 12 மணியளவில் பரமங்கிராய் பொது மண்டபத்துக்கு அருகாமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கிராம சேவையாளர் செ.மாசிலாமணி, ஊரக மேம்பாட்டுக்குழுத் தலைவர் சி.நவரட்ணம் ஆகியோர் அடிக்கற்களை நாட்டினர்.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நலன் திட்ட நிதிய நிறுவனமான யுனிசெப் நிறுவன நிதிப்பங்களிப்புடனேயே இந்தப் பொழுதுபொக்கு மையக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாதர்சங்கத்தைச் சார்ந்தவர்கள், ஊரகமேம்பாட்டுக்குழு கிராம அபிவிருத்துச் சங்கத்தலைவர், பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் இணைப்பாளர், பணியாளர்கள், உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# ஏழெட்டு தொகுதிகளை கைப்பற்ற மலிவான சலுகைகள் அறிவிப்பு!

## தி.மு.க குறித்து வைகோ



மயிலாடுதுறை —

தமிழகத்தில் ஏழெட்டு தொகுதிகளையாவது கைப்பற்றும் நப்பாசையில் தி.மு.க மலிவான சலுகைகளை அறிவித்துள்ளது என்று வைகோ தெரிவித்தார்.

மயிலாடுதுறை பிரசாரக் கூட்டத்தில் வைகோ பேசியதாவது -

தமிழகத்தில் மக்கள் ஜனநாயகக் கூட்டணித் தொண்டர்கள் பம்பரமாக சுழன்று தேர்தல் பணியாற்றி வருகின்றனர். ஆனால், எதிரணியில் குத்து வெட்டு இன்னும் ஓயவில்லை. தொகுதியிலுள்ள விவகாரங்களும் இன்னும் முடியவில்லை.

தி.மு.க அரசு தமிழக கஜானாவை காலி செய்து வைத்திருந்த நேரத்தில் ஆட்சிப் பொறுப்பேற்ற அ.தி.மு.க அரசு - இயற்கை இடர்பாடுகளான வரட்சி, சுனாமி, வெள்ளம் ஆகியவற்றை சந்தித்து நிதி நெருக்கடியை சீர்செய்து மின்னல் வேகத்தில் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

சுனாமி பாதிப்பிலிருந்து தமிழகம் மீள 9 ஆயிரத்து 860 கோடி ரூபாவை மத்திய அரசிடம் மாநில அரசு கோரியது. ஆனால், 860 கோடி ரூபாவை மட்டுமே மத்திய அரசு வழங்கியது.

மத்திய அரசு ஒருபோதும் மாநில அரசுகளை வஞ்சிக்க கூடாது. இது அ.தி.மு.க அரசை வஞ்சித்ததல்ல. தமிழகத்தில் வாழ்கிற ஆறு கோடி மக்களையும் வஞ்சித்தமைக்கு சமம். மத்திய அரசு போதுமான நிதியைக் கொடுக்காத போதும் தமிழக அரசு அனைவரும் பாராட்டும் விதத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டது.

சுனாமியின் போது சேதப்பகுதிகளை பார்வையிட பிரதமர் வருவதாக இருந்தது. அப்படி பிரதமர் வந்தால் பிரதமருடன் தமிழக முதல்வரும் சேர்ந்து போவார்கள் என்பதால் காங்கிரஸ்காரர்கள் கட்சித் தலைவியை வரவழைத்தனர். காங்கிரஸ் காரர்கள் பிரதமரையும் மதிக்க வேண்டும்.

ஒக்ரோபர் 23 ஆம் திகதி பிரதமர் தமிழகத்துக்கு வருவதாகவும் அன்று மாலை 4 மணிக்கு கோபாலபுரம் சென்று தி.மு.க தலைவரை சந்திப்பதாகவும் அறிவிப்பு வெளியானது.

அப்போது மதுரையிலிருந்த கருணாநிதி - பிரதமர் வருவதாகக் கேள்விப்பட்டேன். ஆனால், முக்கிய வேலையாக கொடைக்கானல் செல்கிறேன் என்று கூறி ஓடாத படத்துக்கு கதை எழுதப் போய்விட்டார். வீட்டுக்கு வரும் பகைவரைக் கூட வரவேற்பதுதான் தமிழ் பண்பாடு. கருணாநிதியின் இந்த மதியாத போக்கை தமிழர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

கையில் எம்.பிக்கள் இருந்தால் எப்படி வேண்டுமானாலும் செயற்படலாம் என்ற இறுமாப்புடன் செயற்படுகிறார்.

தமிழகத்தில் ஏழெட்டு தொகுதிகளையாவது கைப்பற்றும் நப்பாசையில் தி.மு.க மலிவான சலுகைகளை அறிவித்துள்ளது. நான் எந்த வழக்குகளையும் சந்திக்கத் தயார். வழக்குகளைப் பார்த்து தயங்கியதில்லை.

எதற்காக என்மீது அஸ்திரத்தை ஏவுகிறார் என்பது எனக்கு தெரியும். எதையும் நான் அப்படியே விட்டு விடமாட்டேன்.

நான் எதையும் சந்திக்கத் தயார். தமிழகத்தின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு மீண்டும் பொற்கால ஆட்சி ஜெயலலிதா தலைமையில் அமைந்திட ஜனநாயக மக்கள் கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச்செய்ய கேட்டுக் கொள்கிறேன். என்று வைகோ தெரிவித்தார்.

# விஜயகாந்தை வெல்லவைப்பதே குறிக்கோள் என்கிறார் பிரேமலதா



விருத்தாசலம் —

பொதுமக்களின் விருப்பப்படிதான் தே.மு.தி.க தேர்தலில் தனித்துப் போட்டியிடுகிறது. வெற்றி பிரகாசமாக உள்ளது என விஜயகாந்தின் மனைவி பிரேமலதா கூறினார்.

விருத்தாசலம் தொகுதியில் தே.மு.தி.க சார்பில் அந்தக் கட்சியின் தலைவர் விஜயகாந்த் போட்டியிடுகிறார். அதனையொட்டி தேர்தல் பணிகளைக் கவனிக்க விஜயகாந்தின் மனைவி விருத்தாசலம் வந்தார். அங்கு தேர்தல் அலுவலகத்தை திறந்துவைத்த பின் நிருபர்களிடம் அவர் கூறியதாவது -

தமிழகத்தில் எல்லாத் தொகுதிகளிலும் தே.மு.தி.க சார்பில் கட்சி பொறுப்பாளர்கள் இருக்கிறார்கள். விருத்தாசலம் தொகுதியில் எதிர் வரும் முதலாம் திகதி முதல் 6 ஆம் திகதிவரை பிரசாரம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. விஜயகாந்தும் எல்லா கிராமங்களுக்கும் சென்று வாக்கு கேட்பதற்குத் திட்டமிட்டுள்ளார்.

தொகுதியில் உள்ள 237 கிராமங்களிலும் வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து வாக்கு சேகரிப்போம். தலைவர் விஜயகாந்தை வெற்றி பெறச் செய்வதே எனது குறிக்கோளாக உள்ளது என பிரேமலதா கூறினார்.




# ஜெயலலிதாவிடம் அ.தி.மு.க சிக்கியது விபத்து என்கிறார் சிதம்பரம்



சிதம்பரம் —

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆட்சியை மாற்றும் நல்ல பழக்கம் தமிழக மக்களிடையே உள்ளது என மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

பிரசாரக் கூட்டத்தில் சிதம்பரம் பேசியதாவது -

5 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற கருணாநிதி ஆட்சியில் தொழிற்சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பல்வேறு நல்ல திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால், தமிழக மக்கள் மாற்று ஆட்சியை கொண்டு வந்தனர்.

2001தேர்தலில் அ.தி.மு.க வெற்றி பெறுவதற்கு முதல் காரணம் தமிழக மக்களிடம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆட்சியை மாற்றும் பழக்கத்தால் ஏற்பட்டது. மற்றொரு காரணம் அ.தி.மு.க கூட்டணியில் தி.மு.க, பா.ம.க, கம்யூனிஸ்ட் கட்சிகள் இடம் பெற்றிருந்தன. கூட்டணி ஆதரவு பெற்றுத்தான் ஜெயலலிதா வெற்றி பெற்றார்.

ஜெயலலிதா முதல்வராக பதவி பிரமாணம் ஏற்பட்டபோது கூட்டணிக் கட்சித்தலைவர்களை மதிக்கவில்லை தமிழகத்தில் அரசியல் பண்பு குறைந்ததற்கு காரணம் அ.தி.மு.க கூட்டணியில் தி.மு.க, பா.ம.க, கம்யூனிஸ்ட் கட்சிகள் இடம்பெற்றிருந்தன. கூட்டணி ஆதரவு பெற்றுத்தான் ஜெயலலிதா வெற்றிபெற்றார்.

ஆனால், திடீரென நண்பர் திருமாவளவனை கூட்டணியில் சேர்த்துக் கொண்டு தலித் மக்களுக்கு நல்லது செய்தது போன்று காட்டிக்கொள்கிறார் ஜெயலலிதா.

கர்நாடகம், கேரளம், ஆந்திரம், குஜராத் ஆகிய மாநிலங்கள் முன்னேற்றம் அடைந்துள்ளன. தமிழகம் முன்னேற்றம் அடையவில்லை. வரும் 15 ஆம் திகதி 5 மாநிலங்களையும் ஒப்பிட்டு புள்ளி விபரங்களுடன் சென்னையில் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து பட்டியல் போட்டு வெளியிடவுள்ளேன்.

தமிழகத்தில் மீண்டும் ஜனநாயக ஆட்சி நடைபெற ஜனநாயக முற்போக்கு கூட்டணிக்கு வாக்களியுங்கள் என்றார் சிதம்பரம்.

# நடிகர் சரத்குமாரின் விலகலால் தி.மு.கவுக்கு பாதிப்பில்லையாம்!

## மு.க ஸ்டாலின் தெரிவிப்பு

நாகர்கோவில் —

நடிகர் சரத்குமார் விலகியுள்ளதால் தி.மு.க கூட்டணியின் வெற்றிக்கு பாதிப்பு இல்லையென தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

கன்னியாகுமரியில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் -

தனிப்பட்ட சில காரணங்களைத் தெரிவித்து நடிகர் சரத்குமார் தி.மு.கவிலிருந்து விலகியுள்ளார். கடந்த மார்ச் மாதத்தில் திருச்சியில் நடைபெற்ற தி.மு.க மாநாட்டில் பேசிய அவர் - இறுதிவரை தி.மு.கவில் இருப்பேன் என்று தெரிவித்திருந்தார்.

சரத்குமார் தனது முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கருணிநிதி தெரிவித்தார். அவரது கருத்தையே தி.மு.கவினர் வழிமொழிகிறார்கள்.

சரத்குமார் விலகியதால் பாதிப்பு ஏற்படுமா என்பது தேர்தல் முடிவுக்குப் பிறகு தெரியவரும்.

வைகோவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு குறைந்துள்ளது. அதை திசை திருப்பும் முயற்சியாகவே பிரசார மேடைகளில் தனிப்பட்ட நபர்களைத் தாக்கிப் பேசுகிறார்.

தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்று அ.தி.மு.கவினர் பல தில்லுமுல்லுகளை செய்துகொண்டிருக்கின்றனர். தேர்தல் ஆணையகத்துக்கு இது குறித்து தெரியப்படுத்தி உள்ளோம். தமிழகத்தில் தேர்தல் ஆணையகம் நியாயமாகச் செயற்படவேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

தி.மு.கவின் அடிப்படை உறுப்பினராக இருந்து பல்வேறுபட்ட பொறுப்புக்களை வகித்துள்ளேன்.

மக்கள்தான் என்னை அமைச்சராக, சென்னை மேயராகத் தேர்வு செய்தனர். கருணாநிதி எந்தப் பதவியிலும் என்னைத் தூக்கிவைக்கவில்லை.

கட்சியிலுள்ளவர்கள் என்னை சில பொறுப்புகளுக்கு தேர்வுசெய்துள்ளனர் எனவே, தி.மு.கவில் குடும்ப அரசியல் பேச்சுக்கே இடமில்லை.

கவர்ச்சித் திட்டங்களை அறிவித்துள்ளதால் தி.மு.க கூட்டணிக்கு இழப்பு வந்து விடவில்லை. இந்தக் கூட்டணிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது.

அதன் மூலம் கருணாநிதியின் சொல்வாக்கு நிறைவேறும். தி.மு.க தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை காலத்துக்கு ஏற்ற அறிவிப்புக்கள். தொலைநோக்கு திட்டமான சேது சமுத்திரத் திட்டத்தை நீதிமன்ற உத்தரவைப் பெற்று செயல்படுத்த வேண்டிய நிலை அ.தி.முக ஆட்சியில் ஏற்பட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு சார்பில் ஒரு வீடு கூட கட்டிக் கொடுக்கப்படவில்லை. தன்னார்வ நிறுவனங்கள்தான் வீடுகளை கட்டித் தந்துள்ளன. அவற்றின் மூலமாக அரசு விளம்பரம் தேடிக் கொண்டது என்றார் ஸ்டாலின்.

# வைகோ மீது தயாநிதி மாறன் மானநஷ்ட வழக்கு தொடுப்பு!

சென்னை —

அவதூறாக பேசியதற்காக ஒரு கோடி ரூபா நஷ்டஈடு கேட்டு ம.தி.மு.க பொதுச்செயலர் வைகோ மீது மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் மானநஷ்ட வழக்கு தொடர்ந்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்தில் மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சராக உள்ள தயாநிதி மாறன் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதாகக் கூறி சில பொய்யான குற்றச்சாட்டுக்களை வெளியிட்டார்.

அவரது பேச்சு அவதூறானது. மத்திய அமைச்சராக இருக்கும் எனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் அவர் பேசியுள்ளார். வேண்டுமென்றே பொய்யான தகவலை எனக்கு எதிராக அவர் பொதுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இதனால் எனக்கு மனவேதனை ஏற்பட்டுள்ளது. ஒருவர் தனது பேச்சுரிமையைப் பயன்படுத்திப் பேசும் போது மற்றவரின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் அவரது பேச்சு அமையக்கூடாது. எனவே, எனக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அவதூறாகப் பேசிய வைகோ நஷ்டஈடு தருமாறு உத்தரவிடவேண்டும்.

அ.தி.மு.க தலைவரை திருப்திப்படுத்த என்னைப் பற்றி அவதூறாகப் பேசியுள்ளார். அ.தி.மு.க ஆட்சியில் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்துக்கும் மேலாக சிறையில் இருந்ததை மறந்து விட்டு அந்தக் கட்சியுடன் தேர்தல் கூட்டணி வைத்திருக்கிறார்.



என்னைப் பற்றி பொதுக் கூட்டத்தில் அவர் பேசியதில் பொது நலன் ஏதுமில்லை.

எனவே, ஒரு கோடி ரூபாவை நஷ்டஈடாகத் தருமாறு அவருக்கு உத்தரவிட வேண்டும்.

அவரது அவதூறான பேச்சை வெளியிட்ட தினமலர் பத்திரிகை, ஜெயா தொலைக்காட்சி ஆகியவையும் ஒரு லட்சம் ரூபாவைத் தரவேண்டும் என்றும் உத்தரவிடவேண்டும் எனவும் மனுவில் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# தயாநிதி மாறனின் வழக்கை அச்சமின்றிச் சந்திப்பேன்!

## வைகோ தெரிவிப்பு

சீர்காழி —

தயாநிதி மாறன் வழக்கை அச்சமின்றிச் சந்திப்பேன் என்று வைகோ கூறினார்.

இது தொடர்பாக சீர்காழியில் வைகோ பேசியதாவது -

என்மீது நீதிமன்றில் போடப்பட்டுள்ள வழக்கை அச்சமின்றிச் சந்திப்பேன். அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஆனால், மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அவர்கள் கூறி - 24 மணி நேர கெடு வைத்தபோது இந்த 24 மணி நேர கெடுவுக்குள் மன்னிப்புக் கேட்கத் தவறினால் 1 கோடி ரூபா மானநஷ்ட வழக்குப் போடுவதாக அமைச்சர் பேசினார்.

அப்போது நான் சொன்னேன் - அன்புக்குக் கட்டுப்படுவேன். பாசத்துக்குக் கட்டுப்படுவேன். தொண்டனுக்குத் தொண்டனாக அவனுக்குத் தொண்டும் ஊழியமும் செய்வேன் என்று. அப்படித்தான் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் - இவ்வாறு வைகோ பேசினார்.

## பேச்சுக்கள் முறிவடைந்தால்

# எதையும் எதிர்கொள்வதற்கு இருதரப்பும் தயார் நிலையில்!

கொழும்பு—

இரண்டாம்கட்ட சமாதானப் பேச்சு வார்த்தை தோல்வியில் முடிவடைந்தால் அதன்பின்னர் தோன்றும் எந்தவொரு நிலையையும் எதிர்கொள்ள அரசும், விடுதலைப் புலிகளும் ஆயத்தமாக இருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் சமாதானப் பேச்சுவார்த்தை குழப்பப்பட்டு யுத்தத்துக்கு ஆயத்தமானால் இந்தச் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு படையினர் அதி உச்ச ஆயத்த நிலையில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசு மற்றும் விடுதலைப்புலிகள் யுத்தத்துக்குள் இறங்கினால் அது 4 ஆம் கட்ட ஈழப்போரின் ஆரம்பமாக இருக்கும்.

விடுதலைப்புலிகள் ஜெனிவாவில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றினாலும் அதன் இறுதிவரை தங்கியிருப்பது நிச்சயமில்லையெனவும் சில தரப்புகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

முதல் சுற்று பேச்சுவார்த்தையின் போது ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடுகள் அரசால் நிறைவேற்றப்படவில்லை என குற்றம் சுமத்தி சமாதானப் பேச்சுவார்த்தையின் இடையில் விலகிச் செல்லலாம் என அந்தத் தரப்புகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

குறிப்பாக முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் இறுதியில் வெளியிடப்பட்ட உடன்பாட்டு அறிக்கையில் குறிப்பிட்டபடி வடக்கு-கிழக்கில் ஆயுதம் தாங்கிய துணைக்குழுக்களிடமிருந்து அரசால் ஆயுதங்கள் களையப்படாத காரணத்தை தெரிவித்து விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து விலகிச் செல்லலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவ்வாறு அல்லாவிடின் வடக்கு - கிழக்கில் துணைக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களை களைவது தொடர்பாக இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகள் கால அவகாசம் வழங்குவர் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

அவ்வாறு நேர அவகாசத்தை வழங்கி அதற்கு முன்பு வடக்கு - கிழக்கிலுள்ள துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படாவிடின்- தாம் யுத்தத்துக்கு செல்வோம் என விடுதலைப்புலிகள் தெரிவிக்கவுள்ளதாகவும் அந்தப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது போன்ற தெளிவற்ற நிலை நிலவுவது விடுதலைப்புலிகள் யுத்தத்தில் இறங்குவதற்கு காரணமாக அமையும் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தே)

## மோட்டார் சைக்கிளில் சென்றவர் விபத்தில் பலி

கிளிநொச்சி—

கிளிநொச்சி -வெலிக்கண்டல் பாலத்தடியில் நடந்த வாகன விபத்தில் பொது மகன் ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் அடையாளம் காணப் படாத நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி - பரந்தன் முல்லைத்தீவு வீதியில் வெலிக்கண்டல் பாலத்தடியில் நேற்றிரவு 7.30 மணியளவில் லொறியும், மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின.

அதில் படுகாயமடைந்து உயிரிழந்த மோட்டார் சைக்கிள் பயணி சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்தார். என்பிஎச்சி 3913 என்ற இலக்கமுடைய பசன் மோட்டார் சைக்கிளில் அவர் பயணித்த போதே விபத்துக்குள்ளா கினார். இவரது சடலத்தை அடையாளம் காட்டுமாறு தமிழீழ காவற்துறையினர் கேட்டுள்ளனர். (கு)

## தமிழ் - முஸ்லிம் உறவுகளை சீர்குலைக்க படையினரும் ஒட்டுக்குழுக்களும் முயற்சி!

### யாழ். பொது அமைப்புகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்—

யாழ். குடாநாட்டில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே குரோதத்தை வளர்த்து வன்முறைக்குள் தள்ளி பரிவினையைத் தோற்றுவிக்க இராணுவத்தினரும், அவர்களுடன் இணைந்து செயற்படும் ஒட்டுக்குழுக்களும் முயற்சி செய்துவருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாகவே யாழ். நகரில் முஸ்லிம் சகோதரரை படுகொலை செய்துள்ளதாக குடாநாட்டில் உள்ள பல்வேறு பொது அமைப்புக்களும் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளன.

மட்டக்களப்பு தமிழ்-முஸ்லிம் உறவுகளிடையே நிலவி வந்த நல்லுறவைச் சீர்குலைத்து, இன மோதலை உருவாக்கிய ஒட்டுக் குழுக்கள்- யாழ்ப்பாணத்திலும் இராணுவத்துடன் இணைந்து முஸ்லிம் சகோதரரின் படுகொலையை அரங்கேற்றியுள்ளன.

கிழக்கில் தமிழ் - முஸ்லிம் உறவை சீர்குலைக்க எடுத்த முயற்சி போல் யாழ்ப்பாணத்திலும் இவ்வாறான படுகொலைகளைச்செய்து எமது உறவை சீர்குலைக்கலாம் என ஒட்டுக்குழுவினர் நம்புகின்றனர்.

எமது உறவை விரும்பாத தீய சக்திகளின் கோழைத்தனமான படுகொலைகளை முடிவுக்கு கொண்டு வருவதுடன், எதிர்காலத்தில் எமக்குள் நல்லுறவை மேலும் வலுப்படுத்தி சுதந்திரமான வாழ்வுக்காக ஒன்றிணைந்து எமது தொடர்பை சர்வதேச சமூகத்துக்கு அம்பலப் படுத்த அணிதிரள்வோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்மக்கள் மீது...

துவரங்காடு, அன்புவழிபுரம் கிழக்கு ஆகிய பகுதிகளுக்குள் புகுந்த சிங்களக் காடையர்கள் தமிழர்களின் வீடுகள், நடேசபுரம் நடேசர் கோயில் என்பவற்றைத் தாக்கி தீவைத்ததுடன், தமிழர்கள்மீதும் பலத்த தாக்குதலை நடத்தினர். இதனால் பலர் பலத்த காயங்களுக்குள்ளாகினர். 51 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் உயிரிழந்ததாகவும் அறியமுடிகிறது.

மேலும் மிகிந்தபுரத்தை அண்மித்த பாரதிபுரத்தில் இயங்கிவந்த இளைஞர் அபிவிருத்தி அகம் என்ற உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனம் சிங்களக் காடையர்களால் அடித்து நொருக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

இந்த சம்பவத்தின்போது அங்கு கடமையிலிருந்த இரண்டு தமிழ் இளைஞர்கள் நிறுவனத்தின் பின்புறமாக தப்பியோடியதால் உயிர் தப்பினர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து கன்னியா, நடேசபுரம், புதுக்குடியேற்றம், வரோதயநகர் பகுதி பொதுமக்கள் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகள் மற்றும் வரோதயநகர் பாரதி தமிழ் வித்தியாலயம், அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயம், செல்வநாயகபுரம் தமிழ்வித்தியாலயம் என்பவற்றில் தங்கியுள்ளனர்.

நகரின் புறநகர் பகுதியான அன்புவழிபுரம் லிங்கநகர் பகுதியிலும், பாலையூற்றுப்பகுதியிலும் நேற்று மாலை ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக தமிழ்க் குடும்பங்கள் பல பாதுகாப்பான இடங்கள் நோக்கி இடம் பெயர்ந்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

நேற்றிரவு உவர்மலை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு எதிரேயுள்ள சிங்கள பெரும்பான்மை இனத்தவரின் வீட்டுக்கு அண்மித்த பகுதியில் வேறு பகுதியிலிருந்து அழைத்து வரப்பட்ட சிங்களக் காடையர் கும்பல் ஒன்று - சில மாதங்களுக்கு முன் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட வீரக்கொடி என்பவரின் கொலைக்கு பழிவாங்கும் நோக்குடன் தமிழர்கள் வாழும் உவர் மலைக்குள் புகுந்து தாக்குதல் நடத்த இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து - உவர்மலைப்பகுதி நேற்றிரவு முதல் பெரும் பதற்ற நிலைமைக்கு உள்ளாகியது.

நேற்று மாலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிகிந்தபுர பகுதியில் வைத்து ஒருவர் கொலை செய்யப்பட்டமை மற்றும் அலெஸ் தோட்டப்பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் என்பவற்றையடுத்து நேற்று மாலை 6 மணிமுதல் இன்று காலை 6 மணி வரையான காலப்பகுதிக்குள் திருகோணமலை, உப்புவெளி, சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது

கொல்லப்பட்ட வெதுப்பக ஊழியரின் சடலம் நேற்றிரவு திருகோணமலை பொதுவைத்தியசாலை பிரேத அறைக்கு கொண்டுவரப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற மோதல்களையடுத்து நேற்றுமுன் தினமும், நேற்றுக்காலையும் சிறிதளவு இயல்பு நிலைமைக்கு திரும்பியிருந்த திருகோணமலை நகரம் நேற்று நண்பகலுக்கு பின் மீண்டும் பதற்றம் நிறைந்து காணப்பட்டது. (10)

## திருகோண...

நேரில் பார்வையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் சைக்கிள்-ஹையேஸ் விபத்தில் இளைஞர் பலி

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியில் தேவாலயத்துக்கு முன்பாக நேற்று பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றும் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கச்சேரி-நல்லூர் வீதியில் தேவாலயத்துக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் மோட்டார் சைக்கிளொன்றும், ஹையேஸ் வானொன்றும் மோதியதில் மோட்டார் சைக்கிளை செலுத்திவந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இவருடன் வந்த மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச்சம்பவத்தில் கச்சேரி-நல்லூர் வீதியைச்சேர்ந்த சிவராசா மயூரன்(வயது 25) என்பவர் உயிரிழந்ததுடன், அதே இடத்தைச் சேர்ந்த சுரேஸ் (வயது 22) என்பவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் தொடரும் வன்முறைகள் இணைத்தலைமை நாடுகள் கண்டனம்

கொழும்பு—

இலங்கையில் இடம்பெற்றுவரும் வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் , நோர்வே மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இணைத்தலைமை நாடுகள் சார்பில் ஐரோப்பிய ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில்-

இலங்கை நிலைமைகள் தொடர்பாக கவலை கொள்வதாகவும், அண்மைய வன்முறைகளுக்கு கண்டனம் தெரிவிப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜெனிவாவில் பெப்ரவரி பேச்சுக்களுக்கமைய அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் வன்முறைகள், படுகொலைகள் மற்றும் ஆயுதநடவடிக்கைக்கு முடிவு ஏற்படுத்த வேண்டும் என்றும் இணைத்தலைமை நாடுகள் வலியுறுத்தியுள்ளன. இரு தரப்பினரும் நம்பிக்கையையும், அமைதி நீடிப்பதற்கு ஏதுவான சூழ்நிலையையும் உருவாக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரோக்கியோவில் எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பாக இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ளது. என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நேற்று யாழ்.நகர்ப்பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட முஸ்லிம் வர்த்தகர்.

## சோபையிழந்த புத்தாண்டு!

யாழ்ப்பாணம்—

யாழ். குடாநாட்டில் நேற்று புத்தாண்டு கொண்டாட்டங்கள் அமைதியான முறையில் நடைபெற்றன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற படுகொலைகள் காரணமாகவும், யாழ். குடாநாட்டிலும், திருகோணமலையிலும் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களால் மக்கள் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் பெரிதும் ஆர்வம் காட்டவில்லை.

ஆயினும், மக்கள் ஆலயங்களுக்குச் சென்று விசேட வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

## படையினரின் கிரனேட் வீச்சில் இருவர் காயம்

சாவகச்சேரி—

சாவகச்சேரிப் பகுதியில் இராணுவ முகாமிலிருந்து எறியப்பட்டு விழுந்து வெடித்த கிரனேட்டால் இரு பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

இவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில்:-

கண்டி வீதியிலுள்ள சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைப் பணியாளர்கள் இருவர் கடையைப் பூட்டிவிட்டு வீதியில் நடந்து சென்றுகொண்டிருக்கையில் அருகிலுள்ள இராணுவ முகாமிலிருந்து எறியப்பட்ட கிரனேட் ஒன்று இவர்களின் காலுக்குள் விழுந்து வெடித்ததில் இருவரும் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் கண்டி வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த என்.பத்மநாதன் (வயது 53) மற்றும் கே.தனபாலசிங்கம் (வயது 58) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

## ஜெனிவா...

பேச்சுவார்த்தை இடம்பெறும் எனத் தீர்மானிக்கப்பட்டபோதும், புலிகளின் கிழக்குத் தளபதிகளின் வன்னி விஜயம் குறித்த போக்குவரத்து தொடர்பில் இழுபறி நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் கிழக்குப் போக்குவரத்தில் ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்து பேச்சுவார்த்தைக்கு புதிய திகதியை நிர்ணயிக்குமாறு விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் எதிர்வரும் 23, 24, 25 ஆம் திகதிகளை அரசாங்கம் வழங்கியிருந்தவேளையில் விடுதலைப் புலிகள் 24, 25 ஆம் திகதிகளைத் தெரிவுசெய்திருந்தனர்.

அரசாங்கம் இதனை ஏற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

## யாழ்....

இந்த இளைஞரை சுட்ட மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் அணிந்திருந்த சப்பாத்துக்கள் மற்றும் தலைக்கவசம் என்பன் இராணுவத்தினரின் சீருடையை ஒத்திருந்ததாக சம்பவத்தை நேரில் கண்டோர் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் இடம்பெற்றதையடுத்து நடைபாதை வியாபாரிகள் தமது விற்பனைப் பொருட்களைக் கட்டிக்கொண்டு வெளியேறினர்.

அத்துடன் யாழ்.பஸ் நிலையத்தில் நின்ற பொதுமக்களும் சிதறி ஓடியமையால் நேற்று யாழ். நகரப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டதோடு சிறிது நேரம் பதற்றமும் நிலவியது.

## படுகொலைகள்...

செயற்படவில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றன.

இது மிகவிரைவில் மீண்டும் ஒரு யுத்த சூழ்நிலையையே தோற்றுவிக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## திருகோணமலை...

மூலம் கண்ணிவெடி இயக்கச் செய்து தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து காயமடைந்தவர்கள் உடனடியாக திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர் .

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மீண்டும் பழைய நேரம்: பக்கம் -04



ஈழநாடு

வாரமலர்

துணைப் படைகள் : பக்கம் -05



மலர்:01 2006.04.15 சனிக்கிழமை இதழ்:01

# பேச்சு மூலமான தீர்வு சாத்தியமற்ற கட்டத்தில்

விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகளான கேணல் சொர்ணமும். கேணல் பானுவும் – கண்காணிப்புக் குழுவின் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சனுடன் படகு மூலம் இன்று முல்லைத்தீவுக்கு வரவுள்ளனர்.

தமது கிழக்குப் பகுதி தளபதிகள் மத்திய குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு – நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே இரண்டாம் கட்ட ஜெனிவா பேச்சுக்களுக்கு செல்ல முடியும் என புலிகள் வலியுறுத்திவந்தனர்.


ஆனால், அரசு வான்வழிப் போக்குவரத்து வசதிகளையும் புலிகளுக்கு வழங்காமல் – தமது சொந்தப் பாதுகாப்பில் புலிகள் கடல் வழியாகப் பயணித்தால் தாக்கி அழிப்போம் என்றும் எச்சரித்திருந்தது.

அதேவேளை, புலிகள் தமது தளபதிகளுக்கு உரிய போக்குவரத்து ஒழுங்குகள் செய்யாவிடின் – சொந்தப் பாதுகாப்புடன் பயணிப்போம் என்றும், கடற்படையினர் தடுத்தால் – தாக்குவதுடன், அவர்களின் போக்குவரத்தையும் முடக்குவோம் என்றும் எச்சரித்தனர்.

மொத்தத்தில் இருதரப்புமே கடலில் ஒரு சண்டைக்கான முழுத் தயார்ப் படுத்தலிலும் இறங்கியிருந்தது. திருகோணமலையில் வடக்கு கடற்பரப்பில் கடற்படை தமது ஒட்டுமொத்த வளங்களையும் குவித்து கடற்போக்குவரத்தைத் தடுக்க தயார் நிலையில் இருந்தது.

புல்மோட்டைக் கடலில் கடும் சண்டை வெடித்ததாகவும் கூட செய்திகள் வெளியாகியிருந்தன. கிட்டத்தட்ட இரண்டு தரப்புமே போர் ஒன்றின் விளிம்பில் வந்து நின்ற நிலையில்தான் –நேற்று முன்தினம் கிளிநொச்சிக்குச் சென்ற கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹென்றிக்சன் பலத்த இழுபறிக்குப் பின்னர் – மாற்று யோசனைகளைப் புலிகளிடம் முன்வைத்தார்.

இதன் அடிப்படையில்தான் – கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹென்றிக்சனுடன். தனியார் படகு மூலம் தளபதிகள் கேணல் சொர்ணம். கேணல் பானு ஆகியோர் இன்று முல்லைத்தீவு வருவதெனவும் – 22ஆம் திகதி திரும்பிச் செல்வதென்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.



கிழக்குத் தளபதிகள் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் ஆலோசனை நடத்திய பின்னரே – ஜெனிவா பேச்சுக்களுக்கான புதிய திகதி நிர்ணயிக்கப்படவிருக்கிறது.

ஜெனிவாவில் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் நடைபெறுமா என்ற நிலை மாறி, புலிகள் அதற்குத் தயாராகவே இருப்பதாக பச்சைக்கொடி காண்பித்திருக்கின்றனர்.

ஆனால், இந்தப் பேச்சுக்கள் எந்தளவுக்கு முன்னேற்றகரமாக அமையும் என்பது கேள்விக்குரியதாகவே அமைகிறது.ஏனென்றால், – முதல் கட்டப் பேச்சுக்களின் போது எட்டப்பட்ட தீர்மானம் எதையுமே அரசு நடைமுறைப்படுத்தவில்லை,

துணை ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்த தவறியமை, இயல்பு நிலையை உருவாக்கத் தவறியமை, இராணுவக் கெடுபிடிகள் தளர்த்தப்படாமை என்று முதல் கட்டப் பேச்சுக்களின் பின்னர் அரசு – தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய வகையில் நடந்து கொள்ள வில்லை: இப்படிப் பட்ட நிலையில் முதற் கட்டப் பேச்சுக்களின் தீர்மானங்களே அமுல்படுத்தப்படாமல், தமிழர் தாயகப் பகுதிகளில் படுகொலைகள், தாக்குதல்கள், இராணுவக் கெடுபிடிகள் எல்லாமே தொடர்கின்ற நிலையில் – அடுத்த கட்டப் பேச்சுக்களும் இதையேதான் சுற்றி நிற்கப் போகின்றன.

வெறுமனே ஒவ்வொரு கட்டங்களாக பேச்சுக்களை நடத்திக் கொண்டிருப்பது அதன் வெற்றியல்ல. ஒவ்வொரு பேச்சுக்களிலும் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள்



நடைமுறைப்படுத்தப்படுவதில் தான் அதன் வெற்றி தங்கியிருக்கும்.

இந்த வகையில் முதற்கட்டப் பேச்சுக்களின் பெறுபேறு என்பது முழுமையான தோல்வி என்றே கூற வேண்டும். எனவே, அடுத்தடுத்த கட்டங்களிலும் செக்கு மாடு போல ஒரே வட்டத்துக்குள் சுற்றிக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் கிட்டாது.

இரண்டாவது கட்டப் பேச்சுகளில் மீண்டும் துணை ஆயுதக்குழுக்கள் விவகாரம், இராணுவ கெடுபிடிகள் போன்ற விவகாரங்கள் தான் அலசப்படப் போகிறது.

அதாவது, இலங்கை அரசு தான்கொடுத்த வாக்குறுதிகளையும் மீறி புலிகளை மீண்டும் மீண்டும் அதே வட்டத்துக்குள் இழுத்து வைத்துக் கொண்டிருக்கவே முற்படுகிறது.அதற்காகவே முதற்கட்ட பேச்சுக்களின் இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தாமல்– புலிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இலங்கை அரசுக்கு தெரியும் ஒரு வட்டத்துக்கு வெளியே பேச்சுக்கள் சென்றால் அது தமது அரசியல் இருப்புக்கு ஆபத்தானது என்று.

எனவே, புலிகளை துணை ஆயுதக் குழுக்கள் விவகாரத்திலிருந்து விலகிச் செல்ல விடாதென்றே பொதுவான கருத்து நிலவுகிறது. ஏனெனில், துணை ஆயுதக் குழுக்கள் மூலம் தான் அரசியல் தீர்வு நோக்கி புலிகளை முன்னேறவிடாமல் தடுக்க முடியும் என்றும் –

புலிகளாகவே யுத்தத்தைத் தொடக்குவதற்கான பிரதான காரணியாகவும் இவர்களையே பயன்படுத்த முடியும் என்பது அரசுக்கு நன்குதெரியும்.

எனவே அடுத்த கட்டப் பேச்சுக்கள் கூட தொடங்கிய இடத்திலிருந்து – மீண்டும் அதே இடத்தில் முடிவதாகவே இருக்கும். ஏனெனில்,அரசின் போக்கிலும் – நிலைப்பாட்டிலும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

எனவே, அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் கூட வெற்றி பெறும் என எதிர்பார்த்தால் அது முழுமையாக ஏமாற்றத்தையே கொடுக்கும். சமாதானப் பேச்சுக்கள் முன்னேற இருந்த வாய்ப்புக்களையெல்லாம் தூக்கிப் போட்டு மிதித்துவிட்ட அரசு – இனிமேல் அப்படி நடந்து கொள்ள ாது என எதிர்பார்க்க முடியாது.

இந்தநிலையில், புலிகளின் கிழக்குத் தளபதிகளின் கடல் பயண விவகாரத்தால் கடலில் ஏற்படவிருந்த பாரிய யுத்தம் ஒன்றுதான் இப்போது தவிர்க்கப்பட்டிருக்கிறதே தவிர, பேச்சுக்கள் மூலமான தீர்வுகள் கிட்டும் என்ற நம்பிக்கையில் எந்தத் துளிர்ப்பும் இல்லை என்பதே யதார்த்தம்.

## இன அழிப்புக்கே உதவும்

தமிழ் மன்னன் இராவணேஸ்வரனின் வீரம் செறிந்த ஆட்சிக் காலத்தில் தமிழீழத்தின் தலைநகர் திருகோணமலை அனுமனால் கொள்ளிவைக்கப்பட்டு எரியூட்டப்பட்டது.

அன்றிலிருந்து இன்றுவரை அவன் பரம்பரையினால் திருகோணமலை பல தடவைகளில் எரியூட்டப்பட்டு முற்றாக அழித்தொழிக்கவும், ஆக்கிரமித்துத் தம் வசமாக்கவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்த 1948–ஆம் ஆண்டு காலத்திலேயே உணவில் தன்னிறைவு காண்பதற்கு என்று கூறி திருகோணமலைப் பகுதிகளில் அல்லை, கந்தளாய்க் குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அம்பாறை கல்லோயாத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. உணவில் தன்னிறைவு என்ற பெயரில் முதல் பிரதம மந்திரியான டி.எஸ்.சேனநாயக்க – கிழக்கு மாகாணத்தை திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் சிங்கள மயமாக்கத் தொடங்கினார். டி.எஸ்.சேனநாயக்கவைத் தொடர்ந்து சிங்களப் பேரினவாதிகள் வடக்கிலும் கிழக்கிலும் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றி – தமிழ் மண்ணை சிங்கள மயமாக்கித் தமிழ் இன ஒழிப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ் கிராமங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டன. வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்காகவே மணலாறு என்ற தமிழ்ப் பகுதியின் குறுக்காக ஒரு குடியேற்றத்திட்டத்தை உருவாக்கி வெலிஓயா என்று பெயரிட்டு சிங்கள மயமாக்கலைச் செயற்படுத்தினர்.

வவுனியாவுக்கு அருகிலும் சிங்களக் குடியேற்றத்திட்டமொன்றை அந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரியாமலேயே அரசாங்க அதிகாரிகளே உருவாக்கினர். அது தான் இன்று பதவியா திட்டமாகப் பரிணமித்து நிற்கின்றது.

திருகோணமலை தமிழ் மண் என்றும், திருகோணமலையே தமிழ் ஈழத்தின் தலைநகர் என்றும் விக்னேஸ்வரன் போன்ற தமிழ் இனஅபிமானிகள் குரல் கொடுத்து வந்தது – சிங்கள இன வெறியர்களுக்குப் பெரும் எரிச்சலை ஏற்படுத்தியது.

திருமலை நகரில் நட்ட நடுவீதியில் திடீரெனப் புத்தர் சிலை முளைத்த போது அதை எதிர்த்து நின்றவர்களில் தலைமகனாக நின்றவர் விக்னேஸ்வரன்.

விக்னேஸ்வரனை ஒழித்துக் கட்டினால் தான் திருகோணமலையைத் தமிழர் உரிமை கோராமல் செய்யமுடியுமென்று சிங்களப் பேரினவாதிகள் முடிவு கட்டிவிட்டனர். இதற்கு உடந்தையாக சில கோடரிக்காம்புகளையும் தேடிக் கொண்டனர்.

1955 ஆம் ஆண்டில் சிங்களமே ஆட்சி மொழி என்ற கூச்சலோடு இனவெறி கிளப்பிவிடப்பட்ட சமயத்தில் – திருமலை மணிக்கூட்டுச் சந்தியில் துக்கதினம் அனுஷ்டிப்பதற்காக கறுப்புக் கொடியை ஏற்றிய நடராஜன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திருகோணமலையைச் சிங்களமயமாக்கும் திட்டத்தில் நடராஜனின் உயிரே முதல் பலியாக எடுக்கப்பட்டது. தமிழ் நாட்டில் மொழிப் போராட்டத்தில் தாளமுத்து, நடராஜன் என்போர் பலியெடுக்கப்பட்டனர். இலங்கையில் சிங்கள இனவெறிக்கு திருமலை நடராஜன் முதல் பலியானார். இன்று விக்னேஸ்வரன் வரை சிங்கள இனவெறியும் இனப்படுகொலையும் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

விக்னேஸ்வரனின் படுகொலை சிங்கள ஆதிக்க சக்திகளின் இனப்படுகொலையின் ஒரு அம்சமே என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும். விக்னேஸ்வரன் கொலையும் அதற்கு முன்னரே தமிழீழத்தில் நடந்து வந்த கொலைகளும் இனப்படுகொலையின் அம்சங்கள் என்பதை உணராமல் – கிளைமோர் குண்டுத்தாக்குதல்கள் மீது பழியைப் போட்டுத் தப்பிக்கொள்ள நினைப்பது இன ஒழிப்புக்கே உதவியாக அமையும்.

**கோபு**

# வினை விதைத்தவன்

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம் பெற்று வரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த சர்வதேச சமூகம் உதவ வேண்டுமென கோரிக்கை விடுத்திருக்கிறார் அரசாங்க சமாதான செயலகத்தின் புதிய பணிப்பாளர் பாலித கொகன்ன.

திருகோணமலையில் கடந்த 11ஆம் திகதி கடற்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலை அடுத்தே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். உண்மையில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் நிகழும் வன்முறைகளுக்கு யார் காரணமென்பதும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடத்தப்படும் தாக்குதல்களுக்கு எவர் காரணமென்பதும் புதிய சமாதான செயலருக்கு ஒன்றும்



தெரியாததல்ல.

யாழ்ப்பாணத்தின் நீர்வேலிப் பகுதியில் கடந்தவருடம் இரண்டு அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சீருடை தரித்த ஆயுதம் தாங்கியவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னரேயே படையினர் மீதான தாக்குதல்களை பொங்கியெழும் மக்கள் படை முன்னெடுத்தது. இதன் பின்னர் நிலைமைகள் மோசமடைந்த பின்னர், நோர்வே சமாதான தூதுவர் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் தலைவரை சந்தித்த வேளை, படையினருக்கெதிரான தாக்குதல்கள் அனைத்தையும் அவர் நிறுத்துவதாக தெரிவித்ததோடு, பொங்கியெழும் மக்கள் படையும் தாக்குதல்களை நிறுத்துவதாக அறிவித்தது.

ஆனால், பேச்சுக்கான திகதி குறிக்கப்பட்ட கையோடு மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் பகுதி மீது நடத்தப்பட்டதாக்குதலில் மேஜர் கபிலன் என்ற போராளி உயிரிழந்தார். இதன் பின்னரும் புலிகளின் உறுப்பினர்கள் துணைக் குழுக்களால் கொல்லப்பட்டே வந்தனர்.

இந்த நிலையில், ஜெனிவாவில் இடம் பெற்ற முதல் சுற்றுப் பேச்சில் துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதாக உடன்பட்டு கூட்டறிக்கையும் வெளியிட்ட அரச தரப்பு பிரதிநிதிகள் நாடு திரும்பியதும், நாளொரு வண்ணமாக மாறுபட்ட அறிக்கைகளை விட்டதுடன், துணை இராணுவக் குழுக்களே இல்லையென்றனர். இதிலும் அரச பேச்சுக் குழுவில் பங்குகொண்ட இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க துணை இராணுவக்குழுக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்கும் இடத்தை புலிகள் தெரியுமென்றால் தரலாமென தெரிவித்தார்.

அத்துடன், பேச்சுக்களுக்குப் பின்னரேயே விடுதலைப்புலிகள் மீதான ஒட்டுக்குழுக்களின் தாக்குதல்கள் அதிகரித்தன. திருமலை, மட்டக்களப்பு பகுதிகளில் இந்தத் தாக்குதல்கள் அதிகரித்ததுடன், திருமலை - மூதூரில் படையினர் ஆட்லறித் தாக்குதலையும் மேற்கொண்டனர். இதன் போது போராளி ஒருவர் உயிரிழந்ததுடன், அந்தப் பகுதி தமிழ் மக்களின் வீடுகளும் சேதமடைந்தன. மக்களும் இடம்பெயர்ந்து கோவில்களிலும் தங்கினர்.

இவ்வாறான நிலையிலேயே திருகோணமலைத் தமிழ் மக்கள் பேரவைத்தலைவர் விக்னேஸ்வரன் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து கடந்த 7 ஆம் திகதி காலை சுட்டுக்கொல்லப்பட்டார். தமிழர்களின் விடுதலை தொடர்பாக கதைப்பவர்கள் எவராக இருந்தாலும், சுட்டுக்கொல்லப்படுவார்கள் என்பதற்கு மாமனிதர் விக்னேஸ்வரன் இன்று இரையாகியுள்ளார். குமார் பொன்னம்பலம், டி.சிவராம் வரிசையில் இன்று திருமலையில் விக்னேஸ்வரன்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் இராணுவக் காவலரண் இருந்தது. அத்துடன், இந்தப் பகுதிக்குள் கண்காணிப்பு எந்த நேரமும் மேற்கொண்டபடியே இருக்கும். அவ்வாறெனில், படையினருக்குத் தெரியாமல் இந்தப் படுகொலைச் சம்பவம் நடந்திருக்க வாய்ப்பே இல்லை. இந்தச் சம்பவத்தின் பின்னர்.கொலையாளிகளைக் கண்டுபிடிக்க விசேட குழுக்கள், விசாரணைகள் என உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும், இறுதியில் எல்லாம் பூச்சியத்திலேயே வந்து நிற்கும்.

இவ்வாறு தமிழ் மக்கள் மீதும், தமிழ் உணர்வாளர்கள் மீதும் அரசும், அதன் துணைக்குழுக்களும் மேற்கொண்ட தாக்குதலின் விளைவே - இன்று படையினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களாகும்.

தமிழ் உணர்வாளர் மாமனிதர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டபின்னர், துணை இராணுவக்குழுக்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நோர்வே தூதுவர் ஊடாக தெரிவித்திருப்பது வெறும் கேலிக்கூத்தான விடயமாகவே உள்ளது.

துணைக் குழுக்கள் இல்லையென அரசின் பிரதிநிதிகள் கூற, அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென ஜனாதிபதி கூறியுள்ளது - உலகத்தை வேண்டுமென்றால் ஏமாற்றுவதாக இருக்கலாம். ஆனால், சிங்கள அரசும், அது சார்ந்த கட்டமைப்புக்கள் மூலமாகவும், பல்வேறு துன்பங்களை அனுபவித்த - அனுபவித்துவரும் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது.

இந்த நிலையில் - இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிலவும் வன்முறைகளுக்கு அரசாங்கமே பதிலை வழங்கவேண்டும். அதைவிடுத்து, சர்வதேச சமூகத்திடம் ஆதரவைக் கோருவதென்பது தமது பிழையை தாமே மறைப்பது போன்றதாகும். வினை விதைத்தவன் வினை அறுப்பானென தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதனையே இலங்கை அரசும் எதிர்நோக்கியுள்ளது எனக் கூறுவது பொருத்தமாகும்.

**கரன்**

### கிளிநொச்சி வைத்தியசாலையில்

# அவசரகால சிகிச்சைப் பிரிவில் இருபத்துநான்கு மணிநேரம்

எனது நண்பர் ஒருவர் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாகவும், சிறுநீர் பிரச்சினை சம்பந்தமாகவும் அனுமதிக்கப்பட்டிருந்தார். வைத்தியசாலையில் மருந்தைப் பெற்றுக்கொண்டு வெளியேற எண்ணியிருந்த அவரை டாக்டர் இதமாக அணுகி – வாட்டில் நின்றால்தான் நோயைக் குணமாக்கலாம் என்றார். இதன் பிரகாரம் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

நண்பரைப் போல பல நோயாளர்கள் வாட்டுக்கு வருகை தந்தும், வந்தும் கொண்டிருந்தார்கள். ஒரு 13 வயதுச் சிறுமி எட்டாம் ஆண்டு படிக்கிறாள். வரலாற்றுப் பாடத்தில் குறைந்த புள்ளிகளைப் பெற்றதால். அதைத் தாங்க இயலாது அலரிக் கொட்டை சாப்பிட்டுள்ளார். அவருக்கு பரிகாரங்கள் பல செய்யப்பட்டன. சாவிலிருந்து மீண்டுள்ளார்.

ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் தாதியர்கள், டொக்டர்கள் அந்தச் சிறுமியின் அப்பா, அம்மாவிடம் செத்தவீட்டு செலவுக் காசை நலன் புரிக்குக் கட்டித்தான் வெளியேறவேண்டும் என்று "பகிடி"யாக கூறினார்கள்.

இன்னோர் கட்டிலில் 16 வயதுச் சிறுமியும் அலரிக் கொட்டை சாப்பிட்டுவிட்டு. சாவின் விழிம்பில் இருந்து தப்பி உறங்கிக் கொண்டிருந்தாள். அவரின் அம்மா லண்டனில் வசிக்கின்றார். இளைய மகளின் சாமத்தியச் சடங்கு செய்வதற்கும், அலரிக் கொட்டை தின்ற பிள்ளைக்குத் திருமணம் செய்து லண்டனுக்கு அழைத்துப் போகவும் வந்திருந்தார்.

இவருக்குக்கூட ஆஸ்பத்திரி தாதிமார் சமையற் கூடத்தில் 25 தேங்காய் துருவிக் கொடுத்து விட்டுத்தான் வெளியேற வேண்டும் என்று "நக்கலாக" பேசிக்கொண்டனர்.

இதன்பின்பு ஒரு இளம் பெண் பாம்பு கடித்து விட்டதென்று குய்யோ முறையோ என்று குளறிக்கொண்டு கட்டிலில் கிடந்தாள்.

சூழவுள்ள தாதிமார்களும், வைத்தியர்களும் "உங்களுக்கு ஒன்றுமில்லை. பயப்பட வேண்டாம். பயந்தால் விஷம் தேகத்தில் ஏறும். நீங்கள் எ தற்கும் பயப்படவேண்டாம். நாங்கள் இருக்கிறம். மருந்து இருக்கிறது" என்று ஆறுதல் கூறி அன்பாக நடந்து கொண்டார்கள்.

செத்து விடுவேன் என்று எண்ணிய அந்த இளம்பெண் சொற்ப நேரத்தின் பின்பு சிரிப்பு இழையோட மற்றவர்களுடன் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

அடுத்ததாக 40 வயது மதிக்கத்தக்க ஒருவர் தமரோன் கிருமிநாசினி குடித்துவிட்டு வந்திருந்தார். அவருக்கு அபிஷேகம் "பாத்ரூமில்" இடம்பெற்றது.ஒரு வகைப் பானத்தைக் கரைத்து குடிக்க வைத்தார்கள். அவர் குடிக்க மறுக்கும்போது பலாத்காதரத்தை பிரயோகித்து குடிக்க வைத்தார்கள். அவர் ஒரு கட்டத்தில் இதிலும் பார்க்க தமரோன் பரவாயில்லை என்று கூறினார். இவரும் சாவின் விளிம்பில் இருந்து காப்பாற்றப்பட்டார்.

சின்னச் சின்ன விடயங்களில் சிறார்கள் ஏன் இந்த முடிவைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பது இன்று ஆராயப்படவேண்டிய விடயமாகும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பொறுப்புணர்ச்சியுடன் வளர்க்க முற்படுவதோடு அவருக்கு பொறுப்புக்களைக் கொடுத்து, நாட்டின் நல்ல பிரஜையாக்க வேண்டுமென்பது இன்றைய கடைமையாகும்.

உண்மையிலேயே கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் டொக்டர்களும், தாதிமார்களும் போற்றுதற்குரியவர்கள்.

**மணிசேகரன்**

# ஜெனிவா பேச்சு சாத்தியமா?

சிறிலங்காவின் சமாதானத்தை எதிர்பார்த்தவர்கள் இன்று கேள்விக் குறியோடு ஏக்கப் பார்வை பார்க்கின்றார்கள்.

திருகோணமலையில் அமைதியைக் கிழித்துக் கொண்டு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் கடற்படையினரின் கண்காணிப்பு நிறைந்த பகுதியில் வங்கியொன்றின் வாசலில் தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரனின் தலையில் பாய்ந்த துப்பாக்கிக் குண்டுகள் உயிரைப் பறித்தன.

இந்தத் துப்பாக்கிக் குண்டுகளின் எதிரொலி- யாழ்ப்பாணத்தில் முகமாலைக்கு அருகில் மிருசுவிலுக்குக் கிட்ட கிளைமோர் குண்டுகளாக வெடித்தன. படையினர் ஐவர் பலியானார்கள். தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த இருவரும் உயிரிழந்தனர்.

இதன் பின்னர் திருகோணமலையில் கந்தளாய்ப் பகுதியில் மீண்டும் ஓர் கிளைமோர் வெடி எதிரொலித்தது. கடற்படையினர் பன்னிருவர் பலியானதாகச் செய்திகள் தெரிவித்தன.

இந்த வெடிகுண்டுகளில் காயமடைந்தோர் பலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

போர்நிறுத்த ஒப்பந்த அமுல் பற்றி ஜெனிவாவில் சிறிலங்கா அரச பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த சந்திப்பில்-சிறிலங்காவில் துணைப்படைகளாக இயங்கும் ஆயுதக்குழுக்களிடமுள்ள ஆயுதங்களைக் களைய வேண்டும் என ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. என்றாலும், இந்த மாநாட்டிலிருந்து நாடு திரும்பிய அரசு தரப்புப் பிரதிநிதிகள் சிலர் துணைப்படைகள் பற்றியும் ஆயுதங்களைக் களைவது பற்றியும் அந்த மாநாட்டில் சொல்லாதவகைகளை வீடு திரும்பியதும் சொன்னார்கள்.

இவர்களுடைய கருத்துக்கள் ஆயுதக்குழுக்களுக்கு சற்று உஷாரைக் கொடுத்தன. இதனால் இந்தக் குழுக்கள் கிழக்கில் சில இடங்களில் வெடிச் சத்தங்கள் ஒலித்தன.

நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என்று கூச்சல் போட்டவர்கள் கிளைமோர் குண்டுகளுக்குப்பின் குரலை இன்னும் உயர்த்திய சத்தம் கேட்கவில்லை;

சாத்வீகப் போராட்ட காலத்தில் படையினரின் வெடிச்சத்தம் கேட்டு மக்கள் அடங்கினர். விமானக் குண்டுவீச்சுக்கு பதுங்கு குழிகளை நாடி ஓடினர்.

இன்று படையினரின் கண்காணிப்பில் ஒரு வெடி வெடித்தால் எதிரொலியாக பல வெடிகளின் சத்தம் கேட்கும். பலியெடுப்பதிலும் விகிதங்கள் அதிகம்.

ஜெனிவா மாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி அடுத்த சந்திப்பு இந்த மாதம் 19 ஆம் திகதி நடக்க வேண்டும்.

ஜெனிவாவில் அரச பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவதற்கு முன் கிழக்கிலுள்ள விடுதலைப் புலிகளின் தளபதிகள் வன்னியில் தலைமைப் பீடத்துடன் கலந்துரையாட வேண்டும். இதற்கு வழமைபோல் ஹெலிக்கொப்டர் வசதி செய்து தருவதற்கு மகிந்த அரசின் புதிய பாதுகாப்புச் செயலரான மகிந்தவின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ மறுப்புத் தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

கடல் பயணத்துக்கும் தங்களின் கடற்படைக் கப்பலில் செல்லும்படி அரசு சொன்னது. இதைவிடுதலைப் புலிகள் ஏற்கவில்லை.

இனி ஜெனிவாவில் நடைபெறவேண்டிய மாநாடு திட்டமிட்டபடி இந்த மாதம் 19ஆம் திகதி நடைபெறுமா? விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகள் வன்னிக்குப் பாதுகாப்பாகச் சென்று தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசனை



செய்தபின் திரும்பிக் கிழக்குக்குச் செல்ல வேண்டும்.

இதன்பின் சரியான பாதுகாப்புடன் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளின் துணையுடன் ஜெனிவாவுக்குப் புறப்பட வேண்டும்.

கொழும்பிலிருந்து ஆர்ப்பாட்டம் செய்யும் அரசியல்வாதிகள் புலிகளுக்கு இந்த வசதிகளைச் செய்து கொடுக்கக்கூடாது என்று கூச்சலிடலாம்.

கொழும்பிலுள்ள இனவெறி ஊடகங்களும் புலிகளுக்கு வசதிகள் செய்யக் கூடாது. விமான நிலையத்தில் அவர்களுக்குச் சலுகைகள் கூடாது என்று எழுதலாம்.

ஆனால், ஜெனிவாவில் மாநாடு நடைபெற வேண்டும். விடுதலைப் புலிகளும் அதில் பங்கு பெற வேண்டும். விடுதலைப் புலிகள் இல்லாமல் ஜெனிவாவில் சமாதானப் பேச்சு நடைபெற்றும் பயனில்லை.

கடந்த வாரத்தில் கொழும்பில் தென்னிலங்கை அரசியல் கட்சிகளும், ஊடகங்களும் புலி எதிர்ப்புப் பிரசாரங்களையே மேற்கொண்டிருந்தன.

ஜே.வி.பி யும் ஹெல உறுமயவும் வழமை போல் நோர்வே எதிர்ப்பு பிரசாரமும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தின.

அரசாங்கம் மகிந்த சிந்தனையில் செயற்படுகின்றதா? கோத்தபாய சிந்தனையில் செயற்படுகின்றதா என்று தெரியவில்லை. விடுதலைப் புலிகளுக்கு எந்த வசதியும் செய்து கொடுக்கக் கூடாது. பேச்சுக்கு வரச் சொன்னால் சொல்லும் இடத்துக்கு அவர்கள் வரவேண்டும் என்ற அதிகார மனப்பான்மை -ஆளுந்தரப்பில் வெளிப்படையாகத் தெரியவருகிறது. இவை நாட்டில் மீண்டும் சமாதானம் ஏற்படுவதற்கான நல்ல அறிகுறியாகத் தென்படவில்லை.

துணைப்படைகளையே ஆளுந்தரப்பு நம்பியிருக்க வேண்டுமென்பது சில ஊடகங்களின் கருத்தாக இருக்கிறது. சில கட்சிகளும் சில ஊடகங்களும் மீண்டும் ஒரு போர் மூளுவதற்குத் தூபம் போடுவதாகவே தெரிகிறது. விடுதலைப் புலிகள் மீது பழியைப் போட்டுப் போரை எப்படித் தொடங்குவது என்பதில்தான் இப்போது தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

மகிந்தவின் பாகிஸ்தான் விஜயம் புலிகளை எதிர்கொள்வதற்கு உற்சாகத்தைக் கொடுத்திருந்தாலும், ரணிலின் இந்திய விஜயம் அரசியலில் சில மாற்றங்களைச் செய்வதற்குத் தூண்டுதலைக் கொடுத்திருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

ஜெனிவா மாநாட்டின் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளைச் செயற்படுத்த வேண்டுமென்ற அவசியம் இருப்பதாக அரசு காட்டிக் கொள்ளவில்லை.

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை ஜெனிவாவிலோ எங்கேயோ நடந்தாலும் துணைப்படைகளின் ஆயுதக்களைவு பற்றியும் ஜெனிவா மாநாட்டில் மேற்கொண்ட முடிவுகளையும் செயற்படுத்துவது பற்றி அரசுதரப்பு பேசுவதற்குத் தயாராக இல்லை.

வடக்குக் கிழக்கு அபிவிருத்தி பற்றித்தான் அடுத்த சுற்றுப் பேச்சில் முக்கியத்துவம் கொடுக்கப்படுமென அரசு தரப்புத் தகவல் தெரிவித்திருக்கிறது.

துணைப்படையின் ஆயுதக்களைவு போன்ற விடயங்களைத் திருப்பித் திருப்பிப் பேசிப் பயனில்லையென்று கோத்தபாய ராஜபக்ச முன்னரே ஊடகமொன்றுக்குத் தெரிவித்திருந்ததாகச் செய்திகள் வெளிவந்தன.

ஜெனிவாவில் நடைபெறுவதற்குத் திட்டமிட்டபடி இரண்டாவது சுற்றுப் பேச்சில் கலந்து கொள்வதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருக்கிறார்கள்.

ஆனால், இதற்கு முன்னர் கிழக்கிலுள்ள தங்கள் தளபதிகள் பாதுகாப்பாக வன்னிக்கு வந்து தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசனை செய்து திரும்பிச் செல்லவேண்டும்.

ஜெனிவா செல்லும் விடுதலைப் புலிகளின் குழுவினர் எதுவித சிரமுமில்லாமல் கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும்போது முதல் சுற்றுப் பேச்சில் எடுத்த முடிவுகள் செயற்படுத்தப்பட்டனவா என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்படும் முடிவுகள் செயற்படுத்தப்படாவிடின் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதில் அர்த்த மில்லையென்பதைப் புலிகள் எடுத்துச் சொல்வார்கள்.

விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகள் தமது படகுகளில் வன்னிக்கு செல்ல வேண்டுமென்று புலிகள் தெரிவித்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் தமது படகுகளில் கிழக்கிலிருந்து வன்னிக்குச் செல்வார்களானால்- அந்தப் படகுகள் அழிக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்திருந்தது. போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் இதை அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஜெனிவாப் பேச்சுக்கு முன் இந்தக் கலந்துரையாடல் நடக்க வேண்டும். கண்காணிப்புக் குழு மூலம் இதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அப்படி செய்யப்படாததால், கண்காணிப்புக்குழு ஒரு வழியாக ஒழுங்கு செய்திருக்கிறது.

கிழக்குத் தளபதிகள் பாதுகாப்பாக வன்னிக்கு வந்து திரும்பிச் சென்றால் ஜெனிவாப் பேச்சு நடக்கும். இல்லையேல் கிழக்கின் படகுப் பயணமே மீண்டும் போர் வெடிப்பதற்கு வழி வகுக்குமென்று எதிர்பார்க்கலாம்.

**எஸ்.எம்.ஜி**

* * *

# குடும்பம் + அரசியல் = கருணாநிதி

தமிழக அரசியல் களம் எப்போதுமே பரபரப்பானது. தேர்தல் காலங்களில் மட்டுமன்றி, அடிக்கடி நிகழும் அதிரடி நிகழ்வுகளால் தமிழகம் உலகின் பார்வையை தன்பக்கம் ஈர்ப்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லைத்தான்!

இருந்தாலும், சாதாரண சாப்பாட்டுக்கும் - விருந்துச் சாப்பாட்டுக்கும் உள்ளவேறுபாட்டுக்கு ஒப்ப தேர்தல்கால பரபரப்பு வழமைபோல இந்த முறையும் சூடு பிடித்து வருகின்றது.

தமிழக மக்களின் வறுமையையும், அறியாமையையும் தமது அரசியல் பிழைப்புக்கான முதலாகக் கொண்டுள்ளவை- தமிழக அரசியல் கட்சிகள் என்பதில் இரு கருத்துக்கு இடமேது? சுமார் ஆறரைக் கோடி மக்கள் தொகையுடைய தமிழ் நாட்டில் அறுபது சதவீதமானோர் வறுமை நிலையினர். இதில் மூன்றில் ஒரு பங்கினரின் வாழ்க்கைத் த்ரமோ படுமோசம்.

இன்னமும் குறிப்பாகக் கூறவேண்டுமானால்-அவர்களின் வாழ்விடமே வீதிதான். வீதி ஓரத்தில் சமைத்து உண்டு உறங்கி என்று அந்த மக்கள் படும் துயரங்களைக் காண்போர் இரத்தக் கண்ணீர் வடிப்பர். இதைவிடவும், கீழிறங்கி எழுதுவதென்றால் உண்மையான அதிர்ச்சியான ஆனால்- நேரடிச் சாட்சியாக நான் எழுதக் கூடிய வரிகள் அந்த மக்களின் வாழிடமான தெருவின் அதே மூலையிலேயே மலங்கழிக்கவும் செய்கிறார்கள்.

இது ஏதோ அறியாத- தெரியாத சிறுவர்களின் செயலல்ல. வயது வந்தவர்கள் முதல் முதியவர்கள், பெண்கள் வரை சகலருமே இதைத்தான் செய்கிறார்கள் என்பது - இந்தியர்கள் அல்ல, தமிழ் நாட்டவரையும் தாண்டி உலகத் தமிழர்கள் யாவருமே வெட்கப்பட வேண்டிய ஒன்று. என்ன ஒரு வித்தியாசம் - சிறுவர்கள் பட்டப்பகலில் செய்கிறார்கள். ஏனையோர் விடியு முன்னே செய்கிறார்கள் அவ்வளவுதான்.

இந்த மக்களுக்கு குடிசைகள் தான் வீடு. பெருமழை என்ன, தூறினாலே ஒழுகும். சமையல் செய்யும்போது தீப்பொறி சிறிது பட்டாலும் முழுக் குடிசைகளும் பற்றி எரியும். உடமைகள் மட்டுமன்றி உயிர்களும் அழியும். இதைவிட நெருக்கம் மற்றும் சுகாதார சீர்கேடுகளால் பரவும் நோய்களால் படும் அவலம் பேரவலம். நோய்தீர அரச மருத்துவமனைக்குச் சென்றால்- அலட்சியப்படுத்தும் ஒரு கூட்டம், ஏகதொனியில் அதட்டும் ஒரு கூட்டம்.

லஞ்சம் தந்தால்தான் பிணத்தைக்கூட விரைந்து தரும் ஒரு கூட்டம். சரி, அரச மருத்துவமனை வேண்டாம். தனியார் மருத்துவ மனைக்குப் போகலாம் என்றாலோ ஏழைகளுக்கு ஏணி வைத்தும் எட்டாத கட்டணம்.

**ஷா**

ஆக மொத்தத்தில் மனிதாபி மான பணிகூட ஏழைகளுக்கு எட்டாக்கனிதான். இது ஏதோ எழுந்தமானமாக எழுதுவதல்ல. யாரோ சொல்லக் கேட்டு எழுதப்பட்டதும் அல்ல. நேரிலே கண்டு, கேட்டு, உணர்ந்து எழுதும் உண்மை வரிகள்.

நிலைமை இப்படி இருக்க - இவற்றுக்கு சரியான, விரைவான தீர்வுகளை காண்பது தமது கடமையாகக் கருதி - மக்கள் முன்னே சென்று வாக்கு கேட்காமல் ஒருவர் கலர் டி.வி தருவராம்..., ரூபாவுக்கு இரண்டு கிலோ அரிசி தருவராம்..., நிலம் தருவாராம். இன்னொருவர் நிலாப்பிடித்து தருவார். மற்றவரோ கடலில் நடக்க வைப்பார்... வேறொருவர் வானில் பறக்கவைப்பார்.



தமிழ் நாட்டுக்கு பன்னிரெண்டு மத்திய மந்திரிகள். யாரும் பசி பட்டினியைத் தீர்க்கும் அமைச்சை கேட்டுப் பெறவிரும்பவில்லை. தனது பேரனுக்கு (மாறனின் மகன்) ஆசையாக கருணாநிதி வேண்டித் தந்தது தகவல் தொடர்பு அமைச்சு "சன்நெட் வோர்க்" என்ற பெயரில் (தி.மு.க.வின் சின்னமும் (உதய சூரியன்) ஒன்பது தொலைக்காட்சி அலைவரிசைகளை (தமிழில் மட்டும் நான்கு சேவைகள்) நடத்தியும் ஆசை தீராமல் இந்தியா முழுவதும் தமது "டிவி சாம்ராட்சியத்தை" விஸ்தரிக்க கருணாநிதி செய்த அரும்பணிதான் தயாநிதி மாறனின் மந்திரி பதவி.

இப்போதும் அவரது வளர்ச்சிக்காகத்தான் தேர்தலில் வென்று ஆட்சியமைத்தால் வீட்டுக்கு ஒரு கலர் டிவி இதன் மூலம் "சன்டிவி" நேயர்களை அதிகரித்து விளம்பரம் முதல் சீரியல் வரை சம்பாத்தியமும் பார்த்து- மக்களையும் முட்டாள்களாக வைத்திருப்பதே கருணாநிதியின் அவா!

ஆக மொத்தத்தில் - நமது தொப்புழ் கொடி உறவுகளில் ஒரு பகுதியினரின் அவல வாழ்வு தீர வேண்டுமானால், பேயுடன் கூட வைகோ, திருமாவளவன் போன்றோர் கூட்டு வைப்பது வரவேற்கக்கூடியதே.

நமது நாட்டை நாமே வென்றெடுப்போம். நமது இரத்த உறவுகள் ;அறியாமையினின்றும் வறுமையினின்றும் விடுபட வரும் சட்டமன்றத் தேர்தலிலாவது வழி பிறக்கட்டும்.

* * *

# அச்சுறுத்தும் கொள்ளையர்கள்

யாழ்.குடாநாட்டில் வாழும் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வாழ்க்கை நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் சம்பவங்கள் இதைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

யாழ்ப்பாண மக்களைக் கடந்த இரண்டு வாரங்களுக்குள் உறைய வைத்த அதிர்ச்சியான சம்பவங்கள் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்ற கொள்ளைச் சம்பவங்களே. கடந்த இரண்டு வாரங்களுக்குள் நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் 15 இற்கும் மேற்பட்ட வீடுகளில், பல கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த சொத்துக்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இத்தகைய கொடூரமான சம்பவங்களால் உறைந்து போய் இருக்கின்ற மக்களின் மனநிலை-வாழ்க்கையில் விரக்தியையும், வெறுப்பையும் ஏற்படுத்தி இருக்கின்றன.

கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுகின்றவர்கள் 15 - 20இற்கும் இடைப்பட்ட குழுவாக தம்மை அடையாளம் காட்டிக்கொள்ள முடியாதவாறு - முகத்தை கறுப்புத்துணியால் கட்டியவாறு, வாள்கள், கத்திகள், பொல்லுகள், ஆயுதங்கள், சைக்கிள் செயின்கள் போன்ற பல்வேறு வகையான ஆயுதங்களுடன் வீட்டுக்குள் நுழையும் திருடர்கள், வீட்டுக்காரர்களை மிரட்டியும், வீட்டுக் கதவுகள் யன்னல்களை உடைத்துநொருக்கியும் பெறுமதியான சொத்துக்களைக் கொள்ளையிட்டும் செல்கின்றனர்.



திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுகிறவர்களுக்கு சில வீடுகளில் எதிர்ப்புக் காட்டுகின்ற போது அவர்களை வாளால் வெட்டிக் காயப்படுத்தியும், மோசமான முறையில் தாக்கியும் விட்டுச்செல்கின்றனர். இன்னும் சில இடங்களில் திருடர்கள் புகுந்த வீட்டுக்காரர்களின் அவலக் குரல் கேட்டு அயலவர்கள் வர முயற்சிக்கின்ற போது அவர்களை வழி மறிப்பதற்கென வீதியில் ஒரு குழுவை ஆயுதங்களுடன் நிறுத்திவிட்டுத்தான் தமது களவு வேட்டையைத் திருடர்கள் அரங்கேற்றி வருகின்றனர்.

இவ்வாறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களின் தொல்லை கடந்த இரண்டு வாரப் பகுதிகளில் ஆனைப்பந்தி, மணல்தரை, திருநெல்வேலி, நல்லூர், சட்டநாதர் வீதி, சங்கிலியன் வீதி போன்ற பல இடங்களில் கொள்ளையர்கள் வீடுபுகுந்து அட்டகாசம் புரிந்து திருட்டுச் சம்பவங்களை நிறைவேற்றிவிட்டுச் சென்றிருக்கின்றனர்.

ஆனைப்பந்தி சந்திக்கு அண்மையில் இருக்கின்ற வர்த்தகரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அதிகாலை 1.40 மணியளவில் வீட்டார் உறக்கத்திலிருக்கும் போது திருடியுள்ளனர். இந்தச் சம்பவம் நடந்த அதேதினம் மணற்தரை வீதியில் உள்ள வீடொன்றினுள் அதிகாலை வேளை புகுந்த திருடர்கள் கொள்ளையிட்டுச் சென்றனர்.

இந்தச் சம்பவங் கள் நடைபெற்று இரண்டு தினங்கள் முடிவதற்குள் திருநெல்வேலிப் பகுதியிலுள்ள மூன்று வீடுகளில் ஒரே இரவில் கொள்ளையர்கள் முகத்தை கறுப்புத்துணியால் கட்டியவாறு கூரிய ஆயுதங்கள், பொல்லுகள், சகிதம் வீட்டினுள் புகுந்து கதவு, யன்னல்களை உடைத்து ஒவ்வொரு அறையாக சல்லடை போட்டு அங்கிருந்த நகைகளையும், பணத்தையும் கைத்தொலைபேசியையும் மற்றும் சில பொருட்களையும் எடுத்துச் செல்லும்வரை மற்றைய குழுவினர் வீட்டில் இருந்தவர்களை சத்தம் போடமுடியாதவாறு ஆயுத முனையில் பயமுறுத்தி வைத்திருந்தனர். சொத்துப்போனால் போகட்டும், உயிர்தப்பிக் கொள்வோம் என்ற அச்சஉணர்வில் எவரும் சத்தம் போடாது இருந்தது - திருடர்களுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது.

**அருள்**

மேலும், ஒரே இரவில் அருகருகே உள்ள மூன்று வீடுகளில் கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டிச்சென்றுள்ளனர். அதேவேளை, மற்றுமொரு வீட்டினுள் புகுந்து வீட்டின் கதவு யன்னல்களை அடித்து நொருக்கி விட்டுச் சென்றுள்ளனர்.

இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் நடைபெறுவதைக் கட்டுப்படுத்துமாறு யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாருக்கு மக்கள் முறைப்பாடு செய்திருக்கின்றனர். பொலிஸில் முறைப்பாடு செய்தபோதும் அவர்கள் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்ற உண்மையைப் புரிந்து கொண்டவர்கள்போல் திருடர்கள்- திருநெல்வேலி சம்பவம் நடைபெற்று இரண்டு இரவுகள் கூட ஆகாத நிலையில் - நல்லூர் சட்டநாதர், சங்கிலியன் வீதிகளில் அமைந் துள்ள ஆறு வீடுகளில் அதிகாலை 2.50 மணியளவில் வீட்டிலுனுள் புகுந்த ஓர் கும்பல் தமது கைவரிசையைக் காட்ட - மற்றொரு கும்பல் தடுக்க வருவோரை பந்தாடுவதற்காக வீதியில் ஆயுதங்களுடன் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கவே வீட்டுக்கூரை ஓடுகள், சீலிங்கைப் பிரித்து எண்ணம்போல் தமது வேலையை நடத்திச் சென்றனர். அதேவேளை- கொள்ளையர்களை விரட்டுவதற்கு கூக்குரல் எழுப்பியவரும், அந்தச் சத்தம்கேட்டு வந்த அயலவர்களும் வாள்வெட்டுக்கு இலக்காகினர்.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகிறது. இங்கு வாழ்கின்ற மக்கள் எத்தகைய பிரச்சினைகளையும் எதிர்நோக்கவில்லை என தென்னிலங்கை அரசியல்வாதிகள் பொய்யான பிரசாரத்தைச் செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதற்கென அளவுக்கு அதிகமான பொலிஸாரையும், அவர்களின் பாதுகாப்புக்கென படையினரையும் கடமையில் ஈடுபடுத்தி இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டு வருகின்றன.

பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிடுகின்ற தகவல்களின்படி பொலிஸாரும், படையினரும் யாழ்ப்பாணத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றமை உண்மைதான்.

ஆனால், அவர்கள் மக்களின் பாதுகாப்புக்காக அல்ல என்பதை புரிந்துகொள்ள மறுக்கின்ற நிலை இன்று பொதுமக்களிடம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களால் மக்கள் இரவு 7 - 8 மணிக்குள் வீடுகளுக்குள் முடங்கி விடுகின்றனர். சில அவசர தேவைகளுக்குக் கூட வெளி யில் வரமுடியாது பயினரின் அச்சுறுத்தல் காணப்படுகின்ற இந்த நேரத்தில்- திருடர்கள் மட்டும் எப்படி தமது வீரச்செயல்களை அரங்கேற்றி வருகிறனர் என்றுதான் புரியவில்லை.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை எந்தச் சந்தியிலும், ஒவ்வொரு மூலை முடுக்கிலும் படையினர் காவலரண் அமைத்தும், காவல் கடமையிலும் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றனர். அதனைவிட பொலிஸார் வீதிப்பாதுகாப்பு கடமையில் நேரத்துக்கு நேரம் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு இருக்கையில்- திருடர்கள் மட்டும் முழத்துக்கு முழம், சந்திக்குச் சந்தி நிற்கின்ற படையினரின் கண்ணில் சிக்கிக்கொள்ளாமல் எவ்வாறு தப்பிக்கொள்கிறார்கள் என்பது புரியாத புதிராக உள்ளது.


திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கும், பொலிஸாருக்கும், படையினருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற இத்தகைய கொடூரமான கொள்ளைச் செயல்களை தடுத்து நிறுத்தி - அமைதியைப் பொலிஸாரும், படையினரும் ஏற்படுத்துவர் என நம்பும் நிலையிலும் யாழ்.குடாநாட்டு மக்கள் இல்லை என்பதே உண்மை.

☆ ☆ ☆

# மீண்டும் பழைய நேரம்

இன்று மக்கள் புதிய உலகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிற நிலையில்- இலங்கையர்களாகிய நாம்மீண்டும்பழைய நிலைக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது.



ஆம்! நேற்றுத் தொடக்கம் புதிய வருடத்தன்று அரை மணி நேரம் முன்னோக்கி நகர்த்தப்பட்டிருந்த (புதிய நேரம்) மணிக்கூட்டு நேரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிபார்சின் அடிப்படையில் பழையபடி பின்னோக்கி அரை மணித்தியாலயம் நகர்த்தப்பட்டு- நேற்றுத் தொடக்கம் பழைய நேரத்தைக்கடைப்பிடித்து வருகிறோம்.

1996 ஆம் ஆண்டு நாட்டில் பெரும் வரட்சி ஏற்பட்டது. மழை பொய்த்ததால் நீர்த்தேக்கங்களில் நீர் வற்றத் தொடங்கியது. இதனால் நீரால் பெறப்பட்டு வந்த மின்சாரம் நாடு பூராகவும் தடைப்படும் அபாய நிலை தோன்றியது. நாடே இருளில் மூழ்கும் நிலை ஏற்பட்டது. இதற்கு விடிவு காண்பதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் 1996 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையின் பழைய நேரம் ஒரு மணித்தியாலத்தால் முன்னகர்த்தப்பட்டது.

இந்த நடவடிக்கைகளுக்கு பல தரப்புகளில் இருந்தும் எதிர்ப்பும் ஆதரவும் இருக்கின்ற நிலையில்- இந்தப் புதிய நேரமாற்றத்தால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். உத்தியோகத்தர்கள் விடிவதற்கு முன்பே வேலைக்குச் செல்ல வேண்டிய நிலை இருந்தது. மாணவர்கள் அரைகுறை உறக்கத்தில் இருந்து மீண்டு அவசர அவசரமாக பாடசாலைக்குப் போகவேண்டி ஏற்பட்டது. மொத்தத்தில் மக்கள் எல்லோரும் அதிகாலையில் இருள் விலகுவதற்கு முன்பு தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக மின்சாரச் சிக்கனத்தை நோக்காகக் கொண்டு ஒரு மணித்தியாலம் முன் நகர்த்தப்பட்ட மணிக்கூட்டு நேரத்தை அதேஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் அரை மணித்தியாலமாக குறைக்கப்பட்டது.

உலகில் இப்படியான நேர மாற்றம் இரண்டாம் உலகப் போரின் பின்னர் அமெரிக்கர்களால் 1952 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கடிகார நேரத்தைபழைய நிலைக்கு நகர்த்துவது பற்றி ஒரு மாணவன் கருத்துத் தெரிவிக்கையில் -

நான் சொன்னால் நம்புங்கள். கடுமையான இருட்டு ஒரு வெளிச்சமும் இருக்காது. என்னால் எதையும் பார்க்கக்கூட முடியாதுள்ளது என்று புதிய நேரத்தைக் கடைப்பிடித்த காலத்தைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார். பிள்ளைகள், தொழிலாளர்கள் அனைவருக்கும் இது ஒரு நல்ல விடயம். இந்தச் செயற்கையான நேர அளவுக்குள் எல்லா விடயங்களையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இப்போதுகூட புதிய நேரத்தால் எமது மதகுருமார் மிகவும் சிரமம் இருப்பதாகக் கூறுகிறார்கள். என்று ஒரு பிரபல அரசியல்வாதி தமது ஆதங்கத்தை வெளியிட் டுள்ளார்.

நான் நினைக்கிறேன். இந்தப் புதிய நேரமாற்றத்தின் பின்புதான் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதியில் தான் சுனாமி நிகழ்ந்துள்ளது. பெரும்பாலும் இலங்கையர்களால் பின்பற்றப்படும் சோதிட முறையை சீர் குலைக்க வைத்துள்ளது.

அத்தோடு சோதிட அடிப்படையில் பூமி தற்போதைய நிலையில் இருந்து 500 மைல்கள் கிழக்கே நகர்ந்து விட்டது. அது வங்களாதேசத்துக்கு நேராக வருகிறது என்று மதத்தலைவர் ஒருவர் நேற்றுடன் முடிவுக்கு வந்த புதிய நேரத்தின் விளைவுகள் இது வெனக் குறிப்பிட்டார்.

ஆனால் பிரபல விஞ்ஞான புனைகதை எழுத்தாளரும், விஞ்ஞானியுமான ஆதர் சி.கிளார்க் புதிய நேரம் பழைய நிலைக்கு நகர்த்தப்பட்டதற்கு தனது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளார். இது பற்றி அவர் கருத்துத்தெரிவிக்கையில் - புதிய நேர அமுலால் நாட்டுக்குள் எந்த விதமான வேறுபாட்டையும் காணமுடியவில்லை. இங்கிலாந்தினுள்ளேயும் எந்த மாற்றமும் இல்லை. வெளியில் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளும்போது தான் இந்த அரை மணித்தியாலம் எரிச்சலை ஏற்படுத்துகிறது என்றார்.




இதனால் பழைய நேரத்தை ஆதர் சி.கிளார்க் கடுமையாக எதிர்க்கின்றார். இவர் 15 வருடங்களாக இலங்கையில் வாழ்ந்து வருபவர்.

**முரளி**

கிரீன்வீச் நேரத்திலிருந்து இன்று தடம் புரண்டு அரைமணி நேரத்தால் தாமதித்து நேர வளையத்துக்குள் திரும்புவது மடத் தனமானது என்று பத்திரிகைகளில் தனது கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

☆ ☆ ☆

## இலங்கை வரலாற்றில் நேரமாற்றங்கள்

இலங்கையில் நியம நேரம் மாற்றப்படுவது இதுதான் முதற்தடவை என நினைக்கிறீர்களா? இல்லவே இல்லை. இது எட்டாவது தடவை என்றால் நம்புவீர்களா?

அது தான் உண்மை.

| | | |
|---|---|---|
| 1880 ஜனவரி 01 | - | கிறீன்வீச் நேரம் + 5.20 |
| 1906 ஜனவரி 01 | - | கிறீன்வீச் நேரம் + 5.30 |
| 1942 ஜனவரி 05 | - | கிறீன்வீச் நேரம் + 6.00 |
| 1942 செப்ரெம்பர் 01 | - | கிறீன்வீச் நேரம் + 6.30 |
| 1945 ஜனவரி 16 | - | கிறீன்வீச் நேரம் + 5.30 |
| 1996 மே 25 | - | கிறீன்வீச் நேரம் + 6. 30 |
| 1996 ஒக்ரோபர் 26 | - | கிறீன்வீச் நேரம் + 6.00 |
| 2006 ஏப்ரல் 14 | - | கிறீன்வீச் நேரம் + 5.30 |

# துணைப்படைகள் - - ஓர் அறிமுகம் -

சிவ ஒளி



மீண்டும் மீண்டும் இலங்கை அரசாங்கம்மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கின்ற மிகமுக்கியமான விடயமாகவும், சமாதான நகர்வுகளை முன்னெடுப்பதற்குரிய பிரதான தடையாகவும் விளங்குகின்ற விடயம் துணைப் படை விவகாரமாகும்.

இலங்கைத் தீவில் 1980 களின் நடுக்கூற்றோடு தோற்றம்பெற்ற துணை இராணுவக் குழுக்கள் - 2006 இல் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான மிகமிக பாதகமான காரணிகளாக விளங்குவதால், சர்வதேச சமூகத்தின் அதிக கவனத்துக்கு உட்பட்டுள்ளன.

ஆனால், சர்வதேச சமூகத்தின் அதிக வனம் என்பது - முற்றுமுழுதாக துணைப்படையினரை இல்லாதொழிப்பதாக அமையாது என்பது உறுதி. ஏனெனில், துணைப்படையினரின் செயற்பாடுகள் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளுக்கு எந்தளவுக்கு நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் இருக்கின்றன என்பதைப் பொறுத்தே அவர்களின் நகர்வுகள் முன்னெடுக்கப்படும்.

ஆகவே, இலங்கைத்தீவில் இருக்கும் துணைப்படை விவகாரமானது சர்வதேச சமூகத்துக்கு சவால் விடக்கூடியதொன்று அல்ல என்பது சர்வதேசத்துக்குப் புரியும்.

ஆதலால் இலங்கை அரசாங்கம் வெளிப்படையாக துணைப்படையினர்மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கின்ற அதேவேளை, மறைமுகமாக துணைப்படையின் செயற்பாட்டுக்கு ஏதோ ஒரு வழியில் ஊக்குவிப்பு சக்திகளாக சர்வதேச சமூகம் இருந்துவருகிறது.

இதனூடாகத் தேவையேற்படுமிடத்து விடுதலைப் புலிகளுக்குக் கடிவாளம் இடலாம் என்கிற திட்டமும் உள்ளது. அதேவேளை, இலங்கை அரசாங்கத்தையும் துணைப்படையினர் விவகாரத்தை வைத்து மிரட்டுவதனூடாக தனது நலனுக்கு ஏற்றவகையில் வளைத்துப்போட முயல்கிறது.

இதனூடாக நாம் ஒரு முடிவுக்கு வரலாம். யாதெனில், சர்வதேச சமூகத்தினூடாகவோ அல்லது இலங்கை அரசாங்கத்தாலோ துணைப்படை விவகாரமானது நீடிக்கப்போகிறதே தவிர, நீங்கப் போவதில்லை.

இல்லையெனில் உதிரிகளாக இருந்த குழுக்கள் உலுக்கும் சக்திகளாக வளர்ந்திருக்கமுடியுமா? அதனால், ஆயுதங்களை அகற்றுவதற்கான தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக வெளிக்காட்டுவதற்கு அதி உச்சப் "பாசாங்குகளை"க் காட்டுவார்கள்.

துணைப்படையினரை அகற்றுவதற்கான ஒரேவழி - பேரினவாதிகள் கூறுவதைப்போல் விடுதலைப் புலிகளே துணைப்படையினருக்குப் புரியும் மொழியில் நடவடிக்கையில் இறங்கவேண்டும். இதனூடாகத்தான் முற்றுமுழுதாக தமிழர் தாயகப் பகுதியிலிருந்து துணைப்படையினரை வெளியேற்ற - இல்லாதொழிக்க முடியும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

துணைப்படை விவகாரமானது வட அயர்லாந்து பிரச்சினையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததோடு, வட அயர்லாந்து போராளிகளுக்கும் அதன் அரசியல் பிரிவான சின் பெய்னிற்கும் (Sinn Fein) கடும் நெருக்கடிகளைக் கொடுத்து வந்தது.

இதன் பின்னணியிலேயே வட அயர்லாந்து போராளிகள் (Irish Republic Army - IRA) தமக்கு எதிராக நெருக்கடிகளைக் கொடுத்துவந்த துணைப்படையினரை இலக்குவைக்கத் தொடங்கினார்கள்.

IRA இன் இலக்குகளாக துணைப்படையினரின் சிரேஷ்ட கட்டளையிடும் அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தார்கள். இலக்குதாரிகளைத் தெரிவுசெய்த பின் அவர்களை அழித்தொழிக்கும் போர் நுட்பங்களைக் கையாண்டார்கள்.

இதனூடாகத்தான் IRA இற்கு எதிராக தீவிரமாகச் செயற்பட்ட முக்கிய இராணுவ துணைப்படைகளின் அதிகாரிகளான Uister Defence Association (UDA) இன் ஜோன் மக் மிக்கேல், ஜோ பிறந்தி, றேமன்ட் எல்டர் மற்றும் றேஸ்மொல் வுட்ஸ் ஆகியோரும் Uister Volunteer Force (UVF) இன் லெஸ்லி டலாஸ் மற்றும் ரிறீவே கிங் ஆகியோரும் கொல்லப்பட்டதோடு அந்தக் கொலைகளின் விளைவுகளும் பெரிதாக்கப்பட்டன.

துணைப்படை ஒழிப்பு விவகாரத்தில் கணிசமான வெற்றியை அடைந்த பின்னர்தான் 1994 இல் (IRA) சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தது.

உலகளாவிய ரீதியில் துணைப்படையினரின் மரபு ரீதியற்ற இராணுவம், கூலிப் படைகள், ஒட்டுப்படைகள் (Para-military, Auxcilary Forces, Mercenary Groups) என்ற அடிப்படையில் சட்டரீதியான படையியல் கட்டமைப்புகளுக்கு அப்பால் செயற்படுகின்ற பிரிவுகள் உள்ளன.

இவை அரசாங்கப் படைகளிடமும், சுதந்திரப் போராளிகளிடமும் இருந்துவந்தன. இந்தக் குழுக்களை நன்மையான விடயங்களுக்கும் தீமையான விடயங்களுக்கும் பயன்படுத்த முடியும். இருப்பினும், இன்றைய காலப்பகுதியில் இரகசிய அழித்தொழிக்கும் நடவடிக்கைகளிலேயே துணைப்படையினர் செயற்பட்டு வருகின்றனர்.

துணைப்படையானது 1892 இற்கும் 1914 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இங்கிலாந்தில் தோற்றம்பெற்றது. ஆங்கிலமொழி அமைப்பைச் சார்ந்த இங்கிலாந்தின் உள்ளூர் தேவாலயங்கள் இளைஞர் அமைப்புக்களைத் திரட்டி சமய அறிவுறுத்தல்களையும், இராணுவப் பயிற்சிகளையும் வழங்கின. முதன்முதலாக 1892 இல் Church Lods Brigade (CLB) தேவாலயமே துணைப்படையென்ற கட்டமைப்பை உருவாக்கியது. இதனைத் தொடர்ந்து 1896 இல் கத்தோலிக்க கடெற்படையும், 1900 இல் மெதடிஸ்த காவலர்களும், 1907 இல் பிறெஸ் வைற்றெறியன், நியு பவுன்ட் லான்ட், கைலான்டேர்சும் உருவாக்கப்பட்டன. இதில் அங்கம் வகித்த துணைப்படையினர் ஒழுக்க ரீதியானவர்களாகவும் உடல் வளரீதியாக மேம்பட்டவர்களாகவும் திகழ்ந்தார்கள். இவர்களுக்கு உதாரணமாக அன்றைய பிரித்தானிய இராஜ்ஜிய படையினர் விளங்கினார்கள். இதன் மூலம், துணைப் படையின் தோற்றுவாயை தெரிந்து கொள்ளலாமே தவிர, இதனுடைய உருவாக்கத்தையும், செயல்நோக்கத்தையும் எந்த ஒரு கட்டத்திலும் இலங்கைத் தீவிலுள்ள துணைப்படையினரோடும் அவர்களின் செயல் நோக்கோடும் ஒப்பிட முடியாது.

துணைப்படை விவகாரத்தில் கவனிக்க வேண்டிய மற்றுமொரு விடயம் என்னவெனில், பல்வேறுபட்ட அமைப்புகளிலிருந்தும் திரட்டப்பட்ட உறுப்பினர்கள் துணைப்படையில் அங்கம் வகிப்பார்கள். அவர்களில் சிலர் தகவல் சேகரிப்பவர்களாகவும், சிலர் தாக்குதல்களில் நேடியாக ஈடுபடுபவர்களாகவும் இருப்பார்கள். இவ்வாறான தரப்புகளை ஒன்றிணைத்து அவர்களிடம் இருந்து பெறும் தகவல்களுக்கு அமைவாக தாக்குதல் நடவடிக்கைகள், திட்டமிட்டு மேற்கொள்ளப்படும். இதில் திட்டமிடலுக்கும் கட்டளைக்கும் பொறுப்பான அதிகாரியொருவர் செயலாற்றுவார். சாதாரண உறுப்பினர்களும் சரி, அதிகாரிகளும் சரி, வெவ்வேறு பெயர்களிலும் உருவமாற்றங்களிலும் செயற்படுவதோடு - தமது செயற்குழு (Active Group) வின் பெயரிலும் மயக்க நிலையை அல்லது மாயையை உருவாக்குவார்கள். உதாரணமாக வட அயர்லாந்தில் Ulster Defence Association - UDA, Ulster Freedom Fighters - UFF, Loyalist Volunteer Force - LVF ஆகிய மூன்று அமைப்புகளுமே துணைப் படையினராக உண்மையில் செயற்பட்ட போதும் - The Red Hand Defenders (RHD) The Orange Volunteers (OV) என்ற பெயர்களையே வெளித்தெரியும் வண்ணம் பயன்படுத்தினார்கள். இதனை பிரித்தானிய அரசாங்கம் ஆதாரபூர்வமாக வகைப்படுத்தி வெளிப்படுத்தியது. இதன் பிற்பாடே 22 பெப்ரவரி 2003 இல் UDA 12 மாத கால போர் நிறுத் தத்தை அறிவித்தது. 30 ஒக்டோபர் 2005இல் LVF தனது இராணுவ நடவடிக்கைகளை கைவிடுவதாக அறிவித்தது.

இலங்கைத் தீவிலும் துணைப்படையின் செயற்பாடுகள் மாயை நிலையை தோற்றுவிக்க முயன்று தோற்றுப்போனாலும் - இன்னும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதாவது, உண்மையில் விடுதலைப்புலிகளை தன்னால் தனித்து அழிக்கமுடியாது என்பதை நன்குணர்ந்த இலங்கை அரசாங்கங்கள் - வெவ்வேறு இயக்கங்களில் இருந்த அல்லது உதிரிகளாக இயங்கிய தமிழ்பேசும் இயக்கங்களை ஒன்றிணைத்தன. உதிரிகளான இயக்கங்களுக்கும் சரி, இலங்கை ஆளும் சக்திகளுக்கும் சரி விடுதலைப் புலிகளை தனித்து நின்று அழிக்க முடியாது என்பது நன்குபுரியும்.

ஆதலால்தான், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இரு தரப்புகளும் இணைந்து கத்திக்கு மேல் நடக்கும் ஒரு முயற்சியில் இறங்கியுள்ளன. இந்த ஒட்டுக் குழுக்களை வழிநடத்தும் பொறுப்பு இலங்கை இராணுவ புலனாய்வுத் துறையிடமே உள்ளது. உண்மையில் எந்த ஒரு கட்டத்திலும் தனித்து நின்று விடுதலைப்புலிகள் மீது தாக்குதல்களை நடத்தக்கூடிய வலுவோ, துணிவோ ஒட்டுப் படைகளுக்கு இல்லை. ஒட்டுப்படைகளின் இயக்கு சக்தியாக இலங்கையின் இராணுவ புலனாய்வுத்துறையே விளங்குகிறது. பல சந்தர்ப்பங்களில் ஒட்டுப் படைகளால் புலிகள் மீது தாக்குதல் நடத்த முடியாமல் போனதுண்டு. இதனைத் தொடர்ந்தே ஒட்டுப் படைகள் என்ற பெயரில் இராணுவ புலனாய்வுத்துறையே தாக்குதல்களை மேற்கொண்டது. சில சந்தர்ப்பங்களில் ஒட்டுப்படைகளும் இராணுவ புலனாய்வு துறையும் இணைந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறான சவால் நிறைந்த சந்தர்ப்பங்களில் புலிகளும் மிக நுணுக்கமான பதில் நடவடிக்கைகளில் இறங்குகின்றனர். IRA அமைப்பு UDA, UVF இன் சிரேஷ்ட அதிகாரிகளை கொன்றதாக மேலே குறிப்பிட்டிருந்தேன். உதிரிகளாக உள்ள ஒட்டுப்படைகளை தட்டிசெல்வதிலும் பார்க்க, ஒட்டுமொத்தமாக அவர்களை வழிப்படுத்தி கட்டளையிடும் அதிகாரிகளை கொன்றொழிப்பதனூடாக துணைப்படையினரின் நெருக்குவாரங்களைக் குறைக்கலாம். அல்லது துணைப்படைக்குள் இருந்து தீவிரமாக செயற்படுபவர்களை குறிவைக்கலாம். போராட்டத்தின் போக்கிற்கேற்ப புலிகள் கூட துணைப் படையை அமைக்கலாம். அல்லது அமைத்திருக்கக்கூடும்.

இலங்கையில் இயங்குகின்ற விசேட அதிரடிப் படையானது (Special Task Force - STF) ஒரு துணைப்படையே. இதுபோல் விடுதலைப் புலிகளும் தமது வரையறைகளுக்கு ஏற்ப துணைக் குழுக்களை அமைக்க / அமைத்திருக்கக்கூடும். எது?



எப்படியோ? 12/04/2006 அன்று மாலை மட்டக்களப்பில் சுடப்பட்ட மேஜர் குமார என்ற புலனாய்வுத் துறையின் அதிகாரி மட்டக்களப்பில் புலிகளுக்கு எதிராக ஒட்டுப்படைகளை செயற்படுத்துவதில் முன்னின்று செயற்பட்டவர். அடுத்து கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகளான லெப்.கேணல் முத்தலிப், லெப்.கேணல் நிஸ்வி மீடின் போன்றோரும் புலிகளுக்கு எதிராக ஒட்டுப்படைகளைக் கொண்டு நிழல் யுத்தத்தை மேற்கொள்வதில் தீவிரமாகச் செயற்பட்டவர்கள். அடுத்து, இலங்கை இராணுவ புலனாய்வுத்துறையின் முதுகெலும்பு போன்று செயற்பட்டவரும் புலனாய்வு துறைக்கே உரிய பாணியில் பெயரையும், வேசத்தையும் மாற்றி திரிந்தவரான புளொட் மோகன் மற்றும் புளொட் மோகனுக்கு அடுத்தபடியாக புலிகளுக்கு எதிராக முனைப்புடன் செயற்பட்ட தருணத்தில் பொறலஸ்கமுவவில் சுட்டுக்கொல்லப்பட்ட துஷ்யந்தன் போன்றோர் ஒட்டுப்படையில் அல்லது துணை இராணுவ குழுக்களில் முன்னின்று தீவிரமாக செயற்பட்டவர்கள். இது தவிர, துணைப்படையின் பல செயற்பாடுகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட்ட தாக்குதல் சம்பவங்களும் உண்டு.

ஒட்டுப்படைகளின் இராணுவ புலனாய்வுத்துறையுடனான உறவுதான் புலிகளுக்கு எதிராக நீண்டகாலமாக இலங்கை படைகள் நின்று பிடிக்க பேருதவி புரிந்துள்ளது. அத்துடன், ஒட்டுப்படைகள் என்ற ஒன்று இன்று செயற்படுவதற்கான அடித்தளமாகவும், முதுகெலும்பாகவும்இராணுவ புலனாய்வுத்துறையே பங்களிப்பை வழங்கி வருகிறது.

ஆகவே, மேற்குறிப்பிட்ட பயன்களை பரஸ்பரம் அனுபவித்து வரும் ஒட்டுப்படைகளும், இராணுவ புலனாய்வுத்துறையும் - அதற்கான வளங்களை வழங்கி வருகின்ற ஆட்சியிலுள்ள அரசாங்கங்களும் ஒட்டுப்படைகள் இல்லாமல் போவதை எந்த ஒரு கட்டத்திலும் விரும்பாது? சமாதானத்துக்கு மூச்சுப் போனால் என்ன? மூச்சு வந்தால் என்ன? ஒட்டுப்படைகளை முற்றுமுழுதாக தமிழர் தாயகப்பகுதியை விட்டு அரசாங்கம் அகற்ற மாட்டாது. அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளிலிருந்து செயற்படும் ஒட்டுப்படைகளுக்கு மறைமுகமாக ஆதரவு அரசாங்கம் வழங்கி வருவதில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. சமாதானம் மீது உண்மையான பற்றும், நம்பிக்கையும் இருந்தாலே ஒட்டுப்படைகளை அகற்ற முடியும். ஆனால், சமாதானத்துக்கும் அப்பால் புலிகளை அழிக்க வேண்டும் என்பதிலேயே ஆட்சி பீடம் முனைப்புடன் செயற்படுகிறது. சர்வதேச சமூகத்தின் ஒட்டுப்படை விவகாரம் தொடர்பான இலங்கை மீதான அழுத்தம் ஒருவகையில் கண் துடைப்பு அல்லது ஆழமான, உண்மையான கண்டனம் அல்ல.

இது இலங்கை அரசாங்கத்துக்கும் புரியும். ஆகவே, அதற்கு தகுந்த மாதிரியான சுத்துமாத்து நடவடிக்கைகளையே அரசாங்கம் மேற்கொள்ளும்.

ஆனால்,ஒட்டுப்படைகளுக்கு எதிராக விடுதலைப்புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறிப்பாக, சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு ஆதாரபூர்வமாக ஒட்டுப்படைகளின் செயற்பாடுகளை கொண்டு சென்றமை அரசாங்கத்துக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை, விடுதலைப்புலிகளின் ஆதாரபூர்வமான இந்த நடவடிக்கைதான் சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கம் மீது ஒட்டுப் படை விவகாரத்தில் அழுத்தத்தை பிரயோகிக்க தூண்டியது. இதனால் மிரண்டு போன அரசாங்கம் முழுப்பூசினிக்காயை சோற்றுக்குள் மறைக்க முற்படுகிறது.

அதன் முக்கிய ஒரு கட்டமாகத்தான் ஒட்டுப்படைகளை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் போலவும், சட்டரீதியான இராணுவம் போலவும் காட்ட முயல்கிறது. அவசரம் அவசரமாக கருணா குழுவுக்கு மட்டக்களப்பில் அரசியல் காரியாலயம் திறந்ததுவும், முஸ்லிம்களுக்கான தனியான படைப்பிரிவு என்பதுவும், ஒட்டுப்படைகள் விவகாரத்தை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கையே! அரசியல் என்பது மக்களுக்கானது.

அவ்வாறான அரசியலை இலங்கை இராணுவத்தின் அதிகூடிய பாதுகாப்புடன் அதி உயர் பாதுகாப்பு வலயத்திலா மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான தடைகள் நிறைந்த கட்டத்தில் சமாதானம் எப்படி பிரசவம் செய்ய முடியும்?

* * *

சிறுகதை

# புத்தெழுச்சி

நமது ஈழநாடு 3ஆம் ஆண்டு கலை, இலக்கிய போட்டிகளில் முதலாம் பரிசு பெற்ற சிறுகதை.

எம்.சந்திரகாந்தா
(வெள்ளவத்தை)

தேயிலைக் கொழுந்தைத் தழுவி வரும் மாலை நேரக் கூதல்காற்று; கொழுந்து மடுவம் கலகலப்பாக இருந்தது. மடுவத்தின் மத்தியில் போடப்பட்டிருந்த மேசையின் மேலே வரவுப்பதிவுப் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு அன்று வேலைக்கு வந்தவர்களுக்குப் பெயர் போட்டுக் கொண்டிருந்தார் கண்டக்டர். அவரைச் சுற்றி நிற்கும் கங்காணிமார் சிலர் அன்று வேலை செய்தவர்களின் பெயர்களை அவரிடம் கூறிக் கொண்டிருந்தனர்.

அலுவலகத்திலிருந்து பெட்டிக்காரன் அப்போதுதான் மடுவத்தை வந்தடைந்தான். கடிதம் ஏதாவது தமக்கு வந்திருக்கிறதா என்று அறிவதற்கு வந்திருந்தவர்கள் கூட்டமாகக் கண்டக்டரைச் சூழ்ந்து கொண்டனர். வரவைப் பதிந்து முடித்த கண்டக்டர் பெட்டியைத் திறந்து: அன்றைய தபாலில் வந்திருந்த கடிதங்களை ஒவ்வொன்றாக எடுத்து விலாசத்தை வாசித்து உரியவர்களிடம் கொடுத்தார்.

கொழுந்தெடுக்கும் பெண்களைக் கூட்டிக் கொண்டு முத்தையா கங்காணி அப்போது தான் அங்கு வந்து சேர்ந்தார். மலையுச்சியில் காலை முதல் வெயிலில் கொழுந்து எடுத்திருந்த பெண்கள் களைத்துப் போயிருந்தார்கள். அங்கு வெண்ணிலாவும் கூடையை முதுகிலிருந்து இறக்கிவிட்டு நின்றிருந்தாள். அண்மையில் தான் அவளுக்குப் பெயர் பதியும்"வயது வந்தது. முதலில் அவள் மலையில் வேலை செய்யப் பதிய விரும்பவில்லை.

க.பொ.த பரீட்சையில் அந்தத் தோட்டத் தொழிலாளர் மத்தியிலிருந்து முதன் முறையாக சிறப்பாகச் சித்தியடைந்தவள் அவள் தான். எனினும், நகரப்பாடசாலைக்குச் சென்று மேற்படிப்பு படிக்கும் வாய்ப்புக் கிட்டாமைக்கு அவளது குடும்ப வறுமையும், தந்தையின் அக்கறையீனமுமே காரணமாக இருந்தன.

சின்ன வயதிலிருந்தே வெண்ணிலா படிப்பில் வலு சுட்டி. அப்போதிருந்த யாழ்ப்பாண சட்டம்பியார் இதைப் பெற்றோரிடம் கூறியிருக்கிறார். படிப்பை மறித்து கொழும்பில் ஒரு வீட்டுக்கு வேலைக்காரச் சிறுமியாக அவளை அனுப்ப நினைத்த மாயாண்டிக்கு எவ்வளவோ சொல்லி, அவளைத் தொடர்ந்து படிக்க வைத்த மாணிக்கம் வாத்தியாரை வெண்ணிலா அடிக்கடி நினைத்துக் கொள்வாள். ஆடிக் கலவரத்தில் பஸ்ஸில் பயணம் செய்த அவரை இறக்கி நடுவீதியில் பெற்றோல் ஊற்றிக் கொழுத்திய அந்தக் கலவர நினைவுகளின் சுவடுகளை அவள் இன்னமும் மறக்கவில்லை.

அவர் இருந்திருந்தால் அவளை உயர் படிப்புப் படிக்கக் கல்லூரிக்கு அனுப்ப ஆலோசனை கூறியிருப்பார். அவளது உயர்தரக் கல்வி தடைப்பட்டுப் போயிருந்தாலும் அவள் சாதாரண தரத்தில் பெற்ற பெறுபேறுகளினால் ஆசிரியத் தொழிலுக்கு விண்ணப்பிக்க முடிந்தது.

சின்னவயதிலிருந்து அவளோடு ஒன்றாகப் படித்த முரளி கிருஸ்ணனும் சாதாரண தரத்தில் ஓரளவு திருப்தியான பெறுபேறுகளைப் பெற்றிருந்தமையால் தோட்ட சுப்பவைசர் வேலைக்கு விண்ணப்பித்திருந்தான்.

ஆசிரியர் வேலைக்கும் சுப்பவைசர் வேலைக்கும் விண்ணப்பித்திருந்தவர்களுக்கு நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தமையால் வெண்ணிலாவும் முரளியும் கடிதங்களை எதிர்பார்த்திருந்தார்கள். எனவேதான் நமது பெயர்கள் வாசிக்கப்படுகிறதா என ஆவலோடு பார்த்திருந்தனர்.

கடிதங்கள் வழங்கப்பட்டு முடிந்த போது தனக்குக் கடிதம் வரவில்லை என்பதை அறிந்ததும் வெண்ணிலாவின் கருமுகம் ஓடிக் கறுத்து இன்னும் இருண்டு போய்விட்டது. இதற்கிடையில் கொழுந்துகளை நிறுக்கத் தொடங்கவே பெருமூச்சுடன் இவளும் கொழுந்து நிறுக்கும் வரிசையில் இணைந்து கொண்டாள்.

முரளியும் ஏமாற்றத்தோடு நண்பர்களோடு உரையாடிக் கொண்டிருந்தான். கடந்த மாதம் வேலைக்கு மனுப்போடும்படி கடிதம் வந்ததும், அதைக் கண்டக்டர் வாசித்துக் காட்டியதும், உடனேயே கனவுகாண ஆரம்பித்ததும் நினைவுக்கு வந்தது.

"நம்ம தோட்டத்துக்குப் புதுசா சுப்பவைசர் வேலைக்கு ஆளுங்களை எடுக்கப் போறாங்களாம். அதற்கு விருப்பமுள்ள க.பொ.த சாதாரண தர பரீட்சையில் பாசானவங்களை மனுப்போடச்சொல்லி மாவட்டக் காரியாலயத்தில் இருந்து பெரிய துரைக்கு கடிதம் வந்திருக்கு. இதைத் துரை நமக்கு அனுப்பியிருக்காரு" எனக் கூறி கண்டக்டர் மீண்டும் மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டார்.

அப்படீங்களா? நம்ம தோட்டத்திற்கு வேலை பார்க்க இனிமே ரொம்பப் பேரு வருவாங்க போலிருக்கே? என மகிழ்ச்சியுடன் கூறிவிட்டுத் தலையாட்டினார் தலைவர்.

அப்போது கண்டக்டரின் அருகே வந்த முரளி "ஐயா... நம்ம தோட்டத்திலேயும் படிச்ச பொடியங்கள் சில பேர் இருக்காங்க. நாங்களும் அப்பிளிக்கேசன் போடலாமுங்களா?" எனக் கேட்டுவிட்டு கண்டக்டரின் முகத்தைப் பார்த்தான்.

"ஆமா முரளி... அரசாங்க வேலையென்னதால படிச்சவங்க எல்லாரும் தான் மனுப்போடலாம்... நீ கூட போடலாம்..."

"என்னாங்க ஐயா அப்படிச் சொல்லுறீங்க? நம்ம தோட்டத்தில உள்ள பொடியள் மனுப்போட்டா அரசாங்கத்தில வேலை கொடுப்பாங்களா? என்று கேட்டு விட்டு ஏளனமாகச் சிரித்தார் தலைவர்.

'தோட்டத்தில் உள்ளவங்களுக்கு சலுகை செஞ்சு கொடுக்கணுமெண்ணு தானே அரசாங்கத்தில் சொல்லியிருக்கு...'

'ஆ...'

'அதனால கட்டாயம் தோட்டத்தில இருக்கிற படிச்ச பொடியங்களுக்கு வேலை போட்டுக் கொடுப்பாங்க....' என்று உறுதியான குரலில் கூறிவிட்டு கண்டக்டர் தனது வேலையில் கவனம் செலுத்தத் தொடங்கினார்.

இதற்கிடையில் கொழுந்து நிறுத்து முடிந்த பெண்கள் ஒவ்வொருவராக வந்து பேர் போடத் தொடங்கினர். முரளியின் கண்கள் மேசையருகே நின்றிருந்த வெண்ணிலாவை ஏக்கத்தடன் பார்த்து நின்றது. அப்போது அவளது பார்வையும் முரளியின் பக்கம் திரும்பியது.

அவன்அப்போது அவளைப் பார்த்து புன்னகைக்கவே அவள் நாணத்துடன் குனிந்து கொண்டாள். அவளது இதழ்களிலிருந்தும் ஒரு புன்னகை மலர்ந்தது. புறப்படும் நேரம் வந்ததும் முரளி அவளிடம் கண்களால் விடைபெற்றுக் கொண்டான். அவள் ஏக்கத்துடனும், ஒருவித இனம்புரியாத தவிப்புடனும் அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவனது நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து ஒரு பெருமூச்சு வெடித்தது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆதலினால் தோட்டத்தில் விடுமுறை நாள். யாரும் வேலைக்குப் போகவில்லை தொழிலாளர்கள் தத்தமது சொந்தவேலைகளைக் கவனிப்பதில் முனைந்திருந்தனர். பெண்களில் சிலர் தமது வீட்டைப் பெருக்குவதில் முனைந்திருந்தனர். இன்னும் சிலர் பீலிக்குச் சென்று குளிப்பதிலும், ஆடைகளைத் துவைப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். சில பொறுப்புள்ள ஆண்கள் தமது வீட்டு மரக்கறித் தோட்டங்களில் வேலை செய்து கொண்டிருந்தனர்.


மேட்டுலயத்துத் தொங்கல் காம்பராவில் வெண்ணிலா அறை நிலத்தைச் சாணியால் மெழுகிக் கொண்டிருந்தாள். அவளது தாய் மாரியாயி வீட்டுப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு துலக்குவதற்காகப் பீலிக்குச் சென்று கொண்டிருந்தாள். இஸ்தோப்பு வாங்கிலில் அமர்ந்திருந்த ஏகாம்பரம் தான் வாசித்துக் கொண்டிருந்த பத்திரிகையை மடித்து வைத்து விட்டு வெண்ணிலாவின் காம்பராவை நோக்கினான். சிறிசுகள் முற்றத்தில் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

லயத்து வாசலுக்கு வந்த ஏகாம்பரம் உள்ளே எட்டிப் பார்த்தபடி 'வெண்ணிலா' என்று மெதுவாக அழைத்தான்.

பார்வையை உயர்த்திய வெண்ணிலா கடுகடுப்பாக நோக்கியபடி 'என்ன?' என்று வெடுக்கென்று கேட்டாள்.

'ஏன் கோவிக்கிறே நிலா? எனக்கு உன்னில் எவ்வளவு பட்சம் தெரியுமா..? கடதாசி கொடுத்தேன் ஏன் நீ பதில் தரல்ல....'

'அதான்... உனக்கு முன்னாலேயே கிழிச்சு வீசினேனே?.. எனக்கு உன்னைப் பிடிக்கல... இனிமேல் இப்படியெல்லாம் கேட்டு வராதே.....'



'அதான் ஏன் புடிக்கலை?...'

'புடிக்கலைன்னா புடிக்கலை தான்.....' அவள் சீற்றத்துடன் கூறியபடி எழுந்தாள். ஏகாம்பரத்துக்கு ஏக்கமாகப் போய்விட்டது. ஏமாற்றத்தோடு வெளியே வந்தான்.

இதுவரையும் மரக்கறித் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த வெண்ணிலாவின் அண்ணா இராமையா களைப்புடன் லயத்துக்கு வந்து தோட்டத்திலிருந்து கொண்டு வந்த மரக்கறிகளைச் சுவர் ஓரமாக இருக்கும் செலவுப் பெட்டியின் மேல் வைத்தான். நெற்றியிலே சிந்திக் கொண்டிருந்த வியர்வையை ஒரு துவாயினால் எடுத்துத் துடைத்துக் கொண்டு 'தேநீர் போடுறியா?' என்று வெண்ணிலாவிடம் கேட்டான்.

இதுவரை நேரமும் வீட்டை மெழுகிக் கொண்டிருந்த வெண்ணிலா எழுந்து வெளியே வந்து கைகளைக் கழுவிய பின் தேநீர் தயாரித்தாள்.

தேநீரோடு வந்தவளைப் பார்த்த இராமையா 'நிலா நீ ரீச்சர் வேலைக்கு மனுப் போட்டியே எம்.பி மாரைப் போய்ச் சந்தித்தால் தான் வேலை கிடைக்குமென்று கங்காணி யார் சொன்னாரு. டெலன் தோட்டத்தில சில பேருக்கு வேலை கிடைச்சிருக்காம்'

அவள் ஆவலோடு அண்ணனை நிமிர்ந்து பார்த்தாள். 'நாளைக்கு அந்திக்கு எம்.பியின்ர காரியாலயத்திற்கு உன்னையும் கூட்டிண்டு போகச் சொன்னாரு'

வெண்ணிலாவுக்கு உள்ளம் எல்லாம் பூரித்தது.

மாலையில் அண்ணனோடு பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்துக்குச் சென்ற போது அவர் அங்கு இருக்கவில்லை. காரியதரிசியும் சில கையாட்களும் தானிருந்தார்கள். வரவேற்பு மேசையிலிருந்த பெண் அவளது சான்றிதழ்களைக் கேட்டு வாங்கிப் பார்த்தாள்.

'இந்த ரிசல்ட்டுக்கு கட்டாயம் வேலை கிடைக்கும். புதன் கிழமை எம்.பி வருவார். இப்ப காரியதரிசியைப் பார்த்துவிட்டு போங்க... நீங்க இதில உட்காருங்க..' என இராமையாவை நோக்கிச் சொன்னாள்.

காரியதரிசி தன் அறைக்கு வந்த வெண்ணிலாவை குறுகுறுவென்று நோக்கினான். 'அழகாயும், வலு கெட்டிக்காரியுமாக இருக்கிறியே... கெட்டித்தனமாக நடந்துக்கிட்டா நியமனம் கிடைக்கும்... உங்க தோட்ட பள்ளிக் கூடத்திலேயே வெற்றிடமிருக்கு.... புதன் சான்றிதழ்களைக் கொண்டு வா.... பாதை தெரியும் தானே அண்ணனை மினைக்கெடுத்தாத...'

வெண்ணிலாவுக்குப் புரிவது போலவு மிருந்தது. புரியாதது போலவும் இருந்தது. அவள் வீட்டுக்குத் திரும்பியபோது லயத்து மகளிரை ஒன்றிணைத்து கொழும்பிலிருந்து வந்திருந்த பெண்ணிய அமைப்பைச் சேர்ந்த சந்திரமுகி அம்மா கூட்டம் நடத்திக் கொண்டிருந்தார். வெண்ணிலாவை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

'கனிவோடு அவளை நோக்கிய சந்திரமுகி' கெட்டிக்காரி. இந்தக் கஷ்டமான சூழலிலிருந்தும் படிச்சு சிறப்பாக பாஸ் பண்ணியிருக்கியே மேலே படிச்சிருந்தா பட்டதாரியாகக் கூட வந்திருக்கலாம். சரி பரவாயில்லை உன்னைப் போன்ற படித்த பெண்கள் தான் தோட்டத்திலுள்ள பெண்களின் நிலையை உயர்த்தப் பாடுபடனும் என்றார்.

'என்னால இயன்றதைச் செய் வேனம்மா...' என்று நம்பிக்கையோடு கூறினாள் வெண்ணிலா.

'கட்டாயம் செய்யணும். இன்று பெண்கள் எல்லா இடங்களிலும் முன்னேறி வருகிறாங்க ஆனா மலை நாட்டில் இன்னமும் பெண்கள் அடிமையாகத்தான் இருக்கிறாங்க.'

'யாருடைய அடிமையாக அம்மா?' என்று புரியாமல் கேட்ட மாரியாயியைக் கனிவோடு நோக்கினாள் சந்திரமுகி.

'இன்று மலையகப் பெண்கள் தாங்கள் அடிமைப் பட்டிருப்பதையே தெரியாதவர்களாக இருக்கிறார்கள். பெண், ஆணைப் போலவே சகல உரிமைகளையும் பெறுவதற்கு உரிமையுள்ளவள். பெண்கள் சமூகத்தில மாத்திரமன்றி குடும்பத்திலும் அடிமைப்பட்டே இருக்கிறார்கள். சிறுபிள்ளையிலிருந்தே பெண்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகின்றது. உணவு, சுகாதாரம், கல்வி அனைத்திலுமே பெண் புறக்கணிக்கப்படுகிறாள். மணமான பின்பு கூட குடும்ப வேலைக்காரியாக, போகப் பொருளாகத்தான் ஆண்கள் பெண்களை நோக்குகிறார்கள்.

பெண்ணுடைய அபிலாசைகளை யாரும் பொருட்படுத்துவதில்லை. இந்த அடிமை நிலையிலிருந்து நாம் விடுபட ணும். எமது உரிமைகளை நிலைநிறுத்த நாம் போராடணும்... போராடாமல் உரிமைகளைப் பெற முடியாது'

"குடும்பங்களைப் பிரிக்க கொழும்பிலிருந்து வந்திருக்கிறாக..." மீனாட்சிப் பாட்டி முணுமுணுத்தாள்.

சந்திரமுகி தொடர்ந்து உரையாற்றினார். "இப்போது முதற் கட்டமாக பெண்கள் விழிப்படையணும். தம்மைத்தாமே உணரனும். மகளிர் அமைப்பு ஒன்றை நீங்க உருவாக்கணும். நான் மாசாமாசம் வருவேன். இப்போது உங்க மத்தியிலிருந்து ஒரு தலைவியைத் தெரிவு செய்யணும்...."

வெண்ணிலாவையே எல்லோரும் தலைவியாகத் தெரிவு செய்தனர். "நான் சின்னப்பெண்ணுங்க" என்று தயங்கிய வெண்ணிலாவைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தி சில ஆலோசனைகளையும், அறிவுறுத்தல்களையும் கூறி விட்டுச் சென்றாள் சந்திரமுகி.

அடுத்த புதன்கிழமை எம்.பியின் காரியாலயத்திற்குச் சென்ற வெண்ணிலா, அங்கே சீதா என்று இன்னொரு பெண்ணும் வந்திருப்பதைக் கண்டு தைரியமுற்றாள்.

அன்றும் எம்.பி வரவில்லை. காரியதரிசி தான் நேர்காணலுக்கு அழைத்தான். சான்றிதழ்களை வெளியே எடுத்த வெண்ணிலாவைத் தடுத்தான்.. 'அவசியமில்லை நான் அன்று சொன்னது புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். வெளியே தெரியவராது. மதியம் நீ வீடு திரும்பலாம். ஒத்துழைத்தால் அடுத்த வாரம் நியமனம் நிச்சயம்.." வெளிப்படையாகவே கேட்டான் காரியதரிசி.

வெண்ணிலாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டுவந்தது. விருக்கென்று எழுந்து வெளியேறிய அவளது முகத்திலை எள்ளும் கொள்ளும் வெடித்துக்கொண்டிருந்தது. வீட்டிற்குத் திரும்பிய வெண்ணிலா, இது என்ன உலகம் என்று சலித்துக் கொண்டாள்.

மறுநாள் முரளியைச் சந்தித்த போது அவன் ஆவலோடு, எம்.பீயிடம் சென்று வந்தது பற்றியும், ஆசிரிய நியமனம் பற்றியும்

(X பக்கம் பார்க்க)

# புலனாய்வுப் பார்வை


**தனது போட்டியாளர் குறித்து சேகரித்துக் கொள்ளும் முழுமையான தகவல்களிலேயே எந்தவொரு புலனாய்வு சேவை அல்லது, அரசியல் மற்றும் போர்த் தலைவர் ஒருவரின் பயனுள்ள முடிவுகள் தங்கியுள்ளதாக சன்சூ என்ற புகழ்பெற்ற சீனப் போர்வீரரின் யுத்த கலை என்ற நூலின் வாசகமாகும்.**

சன்சூ பூர்வ வரலாற்று யுகத்தில் வாழ்ந்த போர் வீரன். அவன் போர்க் கலையை உலகுக்கு அறிமுகப்படுத்தி வழங்கியவனென்ற மகிழ்ச்சிக்கு பாத்திரமாகின்றான். சன்சூ இந்த உலகைவிட்டு பிரிந்து ஆயிரம் வருடங்கள் கடந்துவிட்டாலும், நவீன போர்ச் செயற்பாடுகளினூடே அவனது கல்வி பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அவை ஆராயப்படுகின்றன. பயிற்றுவிக்கப்படுகின்றன.

சன்சூ தெரிவிக்கும் விதமாக போட்டியாளர்கள் குறித்த பூர்வ அறிவை சேகரிக்க வேண்டுமெனில் - வேவு மற்றும் புலனாய்வுச் சேவையை நடத்த வேண்டும். அத்துடன், நட்சத்திரங்களுக்கமைய செய்யப்படும் கணக்கிடுதல் போரின்போது செல்லுபடியாகாது என்கிறார்.

நவீன இராணுவங்களில் இரகசிய வேவு மற்றும் புலனாய்வுச் சேவைகளில் சுலபமாக ஈடுபடமுடியும். அந்த நடவடிக்கைகள் புதிய தொழில்நுட்பங்களுடன் இணைக்கப்பட்டு வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன. எந்தவொரு நிலைமையின் கீழும் ஒரு உளவாளியின் பணி மற்றும் பொறுப்பு என்பவற்றை குறித்த இடத்தில் வைத்து கவனிக்கக் கூடாது. அவன் காண்கிறான், கேட்கிறான், தீர்மானிக்கிறான். அதன்படி அவசியமான தகவல்களை பெயர்த்து உரிய இடத்துக்கு அனுப்புகிறான்.

இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக விளங்குவது விடுதலைப் புலிகளின் பலம் மிக்க நிலப்பகுதியை கண்டறிவதற்காக 1994 இல் கொள்வனவு செய்யப்பட்ட ஆகாய விமானமாகும். இந்த விமானம் UAV என அறிமுகப்படுத்தப்பட்டது. ஆளில்லாமல் செயற்படுத்தப்படும் விமானம் UAV என்ற மூன்று எழுத்துக்களால் குறிப்பிடப்படுகின்றது. இதன் விரிவாக்கம் (Unmanned Areal Vehicle) ஆகும்.



இஸ்ரேலிடம் பல பில்லியன் ரூபா பணம் செலுத்தப்பட்டு இந்த விமானங்கள் படையினருக்கு பெறப்பட்டது. ஆனால், இந்த விமானங்கள் எடுத்த புகைப்படங்கள் போர் நடவடிக்கைகளுக்கு அதிகளவில் கை கொடுக்கவில்லை.

தற்பொழுது அவற்றில் பல அழிந்துவிட்டன. இதில் பெரும்பாலானவை புலிகளின் பகுதிகளில் மர்மமாக மறைந்து போயின. அவற்றுக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து இதுவரை நாம் அறியோம். இதன்மூலம் தொழில்நுட்பங்கள் கூடுதலாக பலனளிப்பதில்லை என்பது தெளிவாகிறது. மாறாக, வீரம் செறிந்த புலனாய்வுக் கொள்கையை இலங்கை அரசு தயாரித்திருந்தால் போட்டியாளர் குறித்த அதி உயர்ந்த பூரணமான தகவலைப் பெற முடிந்திருக்கும். ஆனால், அரசு துரதிஷ்டவசமாக இதுவரை அது குறித்த போதியளவு முயற்சியை காண்பிப்பதாகத் தெரியவில்லை.



தோல்வி கண்ட தொழில்நுட்பம் - UAV

தகவல்களை சேகரித்துக் கொள்வது புலனாய்வு சேவையின் பிரதான பணியாகும். நாட்டின் பாதுகாப்புக்கு இருக்க வேண்டிய முக்கியமான தேவையாகயுள்ளது. தகவல்களை சேகரிக்கும் பணியாகும். இந்த நடவடிக்கைகள் பரந்த ரீதியில் வளர்ச்சி அடைவதை முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களின் பின்பே காணக்கிடைத்தது.

இலங்கையில் கெரில்லா போர்முறையே நிலவியது. மரபு சார்ந்த போர்முறையை விட கெரில்லா போரை எதிர்கொள்வதற்கு உயர்ந்த பட்ச முன்னறிவு அல்லது தூரநோக்கு தேவைப்படுகிறது. இதுவரை விடுதலைப் புலிகள் பெற்றுள்ள வெற்றிகளின் பின்னால் இருப்பது அவர்களின் இரகசியப் புலனாய்வு சேவையாகும்.

பொட்டம்மானின் தலைமையின் கீழ் உள்ள இரகசிய புலனாய்வுப் பிரிவு தேசிய ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் பரவியுள்ள ஒன்றாகும். சர்வதேச ரீதியிலும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு செயற்பட்டு வருகிறது.

புலனாய்வுப் பிரிவுகள் பயன்படுத்துகின்ற உபாயங்களை கண்டறிவதற்கான வழிமுறைகளாக பல்வேறு விதமான புத்தகங்கள், பிரசுரங்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நன்றாக புத்தகங்கள், பிரசுரங்களை வாசிப்பவர். அவர் புத்தகங்களிலுள்ளவற்றை தனது செயற்பாடுகளின் மூலம் பரீட்சித்துப் பார்ப்பார். அதில் ஏற்படுகின்ற சிக்கல்களுக்கு அவரே தீர்வினைப் பெற்றுக்கொள்வார்.

எந்தவொரு யுத்த அமைப்புக்கும் அத்தியாவசியமான பிரிவு புலனாய்வு சேவையே ஆகும். எனவே, விடுதலைப் புலிகளின் தலைவர் தனது இரகசிய புலனாய்வுப் பிரிவை பலமுள்ளதாக்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

**இரகசிய புலனாய்வுச் சேவைகளின் ஆரம்பம் என்ற தலைப்பில் சுசந்த செனிவிரட்ண என்ற முன்னாள் இராணுவ அதிகாரி லங்காதீப நாளிதழில் எழுதிய கட்டுரை.**

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு நான்கு முக்கிய பிரிவுகளை உள்ளடக்கியது. முதலாவது வேவு(SPY) அமைப்புக்குத் தேவையான தகவல்களை இந்தப் பிரிவு தங்கள் தலைமைத்துவத்துக்கு வழங்கும்.

இரண்டாவது பிரிவு - போட்டியாளர்களின் தகவல்களைக் கண்டறிவது. விடுதலைப் புலிகள் தன்னை சித்திரவதைப் படுத்தினார்கள் எனத் தெரிவித்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர் படையினரிடம் சரணடைவார். அதன் போது இவர் படையினருக்கு வழங்கும் தகவலுக்கமைய விடுதலைப் புலிகளும் அதற்கு பிரதிபலிப்பை காண்பிப்பர். சரணடைந்தவர் காண்பிக்கும் இடம், விடுதலைப் புலிகள் கைவிட்ட முகாமாக இருக்கலாம். இந்த முறை மூலமாக சிறிது சிறிதாக படை அதிகாரிகளின் மனங்களை வெற்றி கொள்வதற்குத் தேவையான தகவல்கள் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படும். இந்த இரட்டை முகவர்கள் மூலம் விடுதலைப் புலிகளுக்குப் பாரிய தகவல்கள் வழங்கப்படும்.

மூன்றாவது பிரிவு புலனாய்வுப் பிரிவின் கீழ் இயங்கும். இந்தப் பிரிவின் மூலம் எதிரிகளின் கொலைத் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

நான்காவது இந்த அனைத்துப் பிரிவுகளுக்கும் பயிற்சி வழங்குவதற்கான விசேட பயிற்சிப் பிரிவாகும். இதன்படி புதிய உத்திகள், வழிமுறைகளைப் பரீட்சித்துப் பார்த்து தகவல்களை சேகரிப்பதற்கான முழுமையான பயிற்சி வழங்கப்படும்.

(மிகுதி அடுத்த வாரம்)

**தமிழில்**
**நாடோடி**

# ஐ.நா. செயலாளர் பதவியும் ஜயந்த தனபாலவும்

உலகில் நடக்கும் யுத்தங்கள், இனங்களிடையே ஏற்படும் மோதல்கள் மற்றும் பலபிரச்சினைகளை அணுகி, ஆராய்ந்து ஒரு தீர்வினை எட்டி அங்கு சமாதானம் ஏற்படுத்துவதே ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கம் ஆகும். இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் ஏற்பட்ட அழிவுகளை மனித குலத்திலிருந்து நீக்குவதற்கு தோற்றுவிக்கப்பட்டதே இந்த அமைப்பாகும்.

இந்த அமைப்பின் கௌரவ பதவியாக இருப்பது செயலாளர் நாயகம் பதவியாகும். தற்பொழுது இந்தப் பதவியில் இருக்கும் கொபி அனானின் பதவிக்காலம் இந்த ஆண்டுடன் முடிவடைகிறது.

இந்தப் பதவிக்கு பலர் போட்டியிட இருந்தாலும், தென்னாசியாவைச் சேர்ந்த ஒருவருக்கே வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இலங்கை தனது பிரதிநிதியாக ஜயந்த தனபாலவை பிரேரித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தனது ஆட்சிக் காலத்தில் ஜயந்த தனபாலவை களத்தில் இறக்கி, அவருக்கு ஆதரவு கோரும் முகமாக பல நாடுகளுக்கு விஜயம் செய்திருந்தார்.

இலங்கையின் பிரதிநிதி ஒருவரை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளராக நியமிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தகுதி பெற்றுள்ளதோ என்று இன்று சர்வதேச அரங்கில் ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது.

இலங்கை இதற்கு தகுதி பெற்றுள்ளதா? உள்நாட்டுப் பிரச்சினையில் கடந்த ஐந்து தசாப்தங்களாக சிறுபான்மை மக்களின் உரிமைகளைக் கொடுப்பதில்லை என்பதற்காக யுத்தம் புரிந்து வருகிறது. சமாதானத்துக்கான யுத்தம் என்ற போர்வையிலும் கடந்த காலங்களில் அறுபதாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களை விமானக் குண்டுகளாலும், ஷெல்களாலும் காவுகொண்டு சரித்திரம் படைத்துள்ளது.

பொன் கொழிக்கும் பூமியாக இருந்த தமிழர் நிலங்களை இன்று பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அபகரித்து அந்த நிலங்களில் நாகதாழி, எருக்கலை, நாயுருவி ஆகியவை இலங்கை இராணுவத்துடன் ஆக்கிரமித்துள்ளன. இந்த இலட்சணத்தில் இலங்கை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவிக்கு தகுதி உடையதா என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

ஆரம்பத்தில் ஐக்கிநாடுகள் சபையில் அதிகாரியாகக் கடமையாற்றிவிட்டுப் பின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க காலத்தில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு எட்டும் என்று எண்ணப்பட்டு சமாதான செயலகத்தின் பணிப்பாளராய் இவர் கடமையாற்றியவர். தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முக்கிய ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சமாதான செயலகத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் பேரினவாத சிந்தனை கொண்ட அரசியல்வாதிகளுக்கு சமாதானம் பற்றிப் போதித்திருந்தாரானால் - உண்மையிலேயே இவர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கு தகுதியுடையவர் என்று சிங்களவர் மத்தியில் மாத்திரமல்ல, தமிழ் மக்கள் மத்தியிலும் ஏதோபித்த ஆதரவு பெற்றிருக்கலாம். இதனை அவர் செய்தாரா? இவரின் கடந்த காலச் செயற்பாடுகள் மூலம் பேரினவாதத்துக்கு சமாதானத்தின் பெயரால் பச்சைக்கொடி காட்டியவர்.

கடந்த காலங்களில் ஐக்கிய நாடுகள் செயலாளர் பதவிகளில் புகழ்பெற்று விளங்கிய ஹமர்சீல்ட், யுதாண்ட் போன்ற செயலாளர் நாயகர்கள் போல் உலகில் சமாதானத்தை நிலைநாட்டும் உன்னத பதவிக்கு உள்நாட்டிலேயே என்ன பங்களிப்பைச் செய்திருந்தார் என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

இன்று இலங்கையில் தமிழர் மனங்களில் கசப்பு ஏற்பட்டது போன்று உலகளாவிய ரீதியிலும் இவர் நியமனத்துக்கு எதிராக குரல் எழுப்பப்பட்டு வருகிறது.

ஆசிய நாட்டவர் ஒருவருக்கு இந்தப்பதவி வழங்கலாம் என்ற முயற்சிக்கு இன்று அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. இந்த நிலையில், ஜப்பான் கூட கிழக்கு ஐரோப்பிய பிரதிநிதி ஒருவருக்கு இந்தப்பதவி ஏன் வழங்கக்கூடாது என்று போர்க்கொடி உயர்த்தி உள்ளது.

இந்த நிலையில், போலந்து நாட்டவரான முன்னாள் ஜனாதிபதி அலெக்ஸ்சாண்டர் க்வாஸ் நிவிஸ்கியை அமெரிக்கா முன் நிறுத்துவதாகும்.

கிழக்குப் பிராந்தியத்தில் அல்பேனியா, ஆர்மேனியா அஜர்பைஜான், பெலாரஸ், பொஸ்னியா, ஹெர்ஜகோவினா, பல்கேரியா, குரோசியா, செக்குடியரசு, ஜோர்ஜியா, ஹங்கேரி, லத்வியா, லிதுவேனியா, ரஷ்யா, ஸ்லோவாக்கியா, சுலோவேனியா, ருமேனியா



ரஷ்யா, மசிடோனியா போன்ற 20 நாடுகள் உள்ளன. அத்தோடு, அமெரிக்க சார்பான சர்வதேச நாடுகளிடம் இந்தப் போட்டிக்கு ஆதரவு தெரிவிக்க அணிவகுத்து நிற்கின்றன.

இதேவேளை, ஜப்பான் தனிப்பட்ட ரீதியிலும் ஜயந்த தனபாலவை ஆதரிப்பதில்லை என்று தெரிவித்துள்ளது. பூகோள ரீதியாக தென்கொரியாவுக்கு ஆதரவளிப்பது ஜப்பானின் நோக்கமாகும்.

தென்கொரியாவின் வெளிநாட்டு அமைச்சர் பான் - கீ - மூன் என்பவரை ஜப்பான் போட்டியின் போது ஆதரிக்கவுள்ளது.

இதற்குச் சர்வதேச பிரச்சினைகள், சீனாவின் இராணுவ பலம் அதிகரிப்பு, ஜப்பானின் மனமாற்றத்துக்குப் பின்புலமாக உள்ளது.

இந்தப் பின் புலத்தில் இலங்கையும் தனது பிரசார யுத்தத்தை ஆரம்பித்துள்ளது. அண்மையில் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீரவும், ஜயந்த தனபாலவும் பிரசாரம் செய்வதற்காகப் பிரிட்டன் சென்றிருந்தனர்.

ஆசியப் பிராந்தியத்துக்கு தாய்லாந்துப் பிரதிப் பிரதமர் மந்திரி சுர்கியட் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் பதவிக்கு முன்னிலைப் படுத்த இருக்கிறார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை மூன்று ஐரோப்பியர்கள், ஒரு ஆசியர், ஒரு லத்தீன் அமெரிக்கர், இரண்டு ஆபிரிக்கர்கள் இந்தப் பதவியை அலங்கரித்துள்ளனர். இந்தப் பதவியில் இலங்கையைச் சேர்ந்த ஜயந்த தனபாலவை தெரிவு செய்வதற்கு இலங்கை அரசு சிறுபான்மை மக்களின் - முக்கியமாக தமிழர் மனங்களில் சமாதான விதைகளைத் தூவுவதற்கு முயற்சியெடுக்குமா?

**நரேன்**

பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு விடுவது போன்ற உள்நாட்டில் தமிழர்களுக்கெதிராக வன்முறைகளைத் தூண்டிவிட்டு, அதன் மூலம் நாடாளுமன்றில் பதவிகளை தக்க வைப்பதற்குச் சர்வதேச சமூகம் தொடர்ந்து ஆதரவளிக்காது என்பதற்கு ஜயந்த தனபாலவின் ஐக்கிய நாடுகளின் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கான போட்டி மூலம் இலங்கை அரசாங்கம் பாடம் கற்குமா?

காலம் தான் பதில் சொல்லும்.

## காலம் ஆகி வந்த கதை

வாழ்வின் வதைபடலையே சொல்லிச் சொல்லிக் காலம் கழிவதா? சோம்பிக்கிடப்பதா? இனிமையாக ஏதும் இல்லையா? இந்தக் காலம் இனித் திரும்பி வராதோ என்ற ஏக்கம் வரவில்லையா? வசந்த காற்று வீசவில்லையா? சுகந்தமாக ஏதும் ஆகவில்லையா? மழை பெய்த காலம் என்று வந்ததில்லையா? கொளுத்தும் வெய்யிலில் சோளகம் குளிர்ந்ததில்லையா?

ஏதுக்கும் நான் "இல்லை" என்று ஏதும் பதில் சொல்லமாட்டேன். எல்லாக் கேள்விகட்கும், "இருந்தது" என்று பதில் சொல்வேன். "ஒரு காலம் இருந்தது" என்று மேலும் ஒரு வரி சேர்ப்பேன். வசந்த காற்று வீசியது. சுகந்த காலம் வந்தது. மழை பெய்தது. சோளகம குளிர்ந்தது. எல்லாம் ஒரு காலம். பிறகு ஏதும் ஆகவில்லை-எல்லாம் சோகத்தில் ஆழ்ந்தது.

என்னை அன்பு கொண்டு ஆதரிக்க அம்மா இருந்தா. கருணை கொண்டு காத்திருக்க அப்பா இருந்தார். படுக்கை அறையில் போடப்பட்ட ஸ்பிறிங் கட்டிலில் வெய்யில் காலத்தில் வேர்வை என்று விலகி விலகி, படுத்தாலும் மழைக்காலத்தில் குளிருக்கு நானும் அக்காவும் கட்டிப்பிடித்துக் கொண்டு படுத்தோம். அக்கா கலியாணம் முடித்த பிறகும் அப்பிடி என்னுடன் படுத்தா. நான் பள்ளிக்கூடம் வெளிக்கிட என் முகத்துக்கு அப்பாமல் அளவா பவுடர் பூசினா. உச்சி பிரித்து தலை இழுத்தா. விபூதி எடுத்து நெற்றியில் சின்னக்குறி இழுத்தா. நான் சிரிக்க கன்னத்தில் குழிவிழ கன்னத்தை ஆசையாக் கிள்ளினா. கன்னத்திலை கொஞ்சினா. பொத்தான் இல்லாத சேர்ட்டை நான் போட ஊசி எடுத்து வெளியாலை தெரியாதவாறு பொத்தான் இருக்கிற இடத்திலை குத்தியும் விட்டா.

"ரவி இப்ப நல்ல வடிவா வாறான்" என்று நிர்மதியக்கா சொல்ல அக்கா

பெருமிதமாகச் சிரித்த போது அக்காவுக்கு மூத்தவன் பாபுவும், இளையவன் கோபியும் பிறந்து விட்டனர். அக்காவுடன் பாபுவும் கோபியும் தான் படுத்தனர் என்பது போக, அப்பாமல் கையிலை கொஞ்சமாய் கொட்டி பவுடர் பூச எனக்குத் தெரிந்து விட்டது. நேருக்கு உச்சி பிரித்து தலை இழுக்க எனக்குத் தெரிந்துவிட்டது. விபூதி பூசுவது விசர்வேலை என்பதும் புரிந்து விட்டது. பெட்டைகள் என்ன நைக்குங்கள்?

சேர்ட்டுக்கு பட்டின் இல்லாதபோது அக்கா அதைத் தைத்துத்தாறா. அவ்வளவுதான்.

**குறுநாவல்**

# என் கண்ணல்லவா நீ



அல்ல, அவாவின் கிறீமை நான் எடுத்து முகத்துக்குப் பூசுகிற போது கண்டும் காணாமல் இருக்கிறா. ஓடிக் கொலோனை எடுத்து சேர்ட்டில் தெளிக்கிற போது வீடு முழுக்க மணத்தாலும், ஒன்றும் மணக்காத மாதிரி இருக்கிறா. நல்லாப் படிக்கிறியோ? கவனமாப் படி என்று விசாரிக்கிறா. மேலும் நான் கொப்பி, பேனை வாங்க சில்லறையும் தாறா.

வீட்டின் முன் அறையை எனக்காக ஒதுக்கினேன். மேசை விரித்தேன். அலுமாரியில் புத்தகம் அடுக்கினேன். மேசையில் படிக்கத் தேவையான புத்தகங்கள், கொப்பிகள், பேனை, பென்சில், மேலும் தேவையான சாமான்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டுக் கிடந்தன. மூன்று நேரத்துக்கு சாப்பாட்டுக் கோப்பையும், விடிகாலையிலும், பகல் பதினொரு மணி போலையும் பொழுது படவும் தேத்தண்ணிக் கோப்பையும் மேசைக்கு வந்தன.

அறைக்குள் கட்டில் போட முயன்றேன். அப்பா விடவில்லை. பாம்புப் பயம் என்றார். அந்த அறைக்கு சீற் போட்டிருக்கு. சீற்றுக்கால பாம்பு வந்து விட முடியாது. வீட்டுக்குள்ளை ஓடுதான். அங்குதான் பாம்பு வாறது சுகம். இது பாம்பு பயம் அல்ல. பேய்ப் பயமும் அல்ல. பேய்ப்பயமும் எனக்கு கொஞ்சம் கொஞ்சமாக போய்க் கொண்டிருக்கு. இது வேறேதோ பயம்.

எத்தினை மணியானாலும் நான் வீட்டினுள் சென்று படுக்க வேண்டும். அப்பதான் அப்பாவின் அம்மாவின் பயம் போகும். அவர்கள் நித்திரையில் நிம்மதி வந்து சேரும். நான் சாமம் போல கதவு திறந்து உள்ளே போய்ப் படுத்தேன். விடியப்புறத்தில் அப்பா எழுப்பினார். மேசைமுன் குந்த அப்பா முட்டைக் கோப்பி தந்தார்.

முன் அறையின் யன்னல் திறந்தால் உடன் துளசி மாடம் தெரியும். சுற்றி திருநீற்றுப் பச்சை மரங்கள் தெரியும். அதன் மணம் வருமாப்போல இருக்கும். துளசி மாடமும் அம்மாளின் ஒரு வடிவம் தான் என்று அப்பா சொன்னார். எனக்கு அப்படி ஒன்றும் தெரியவில்லை. நான் பொழுதுபட்ட ஆறுமணிப் பூசைக்கு அம்மாள் கோயிலுக்கு அடிக்கடி போனேன். எனக்கு எதையும் செய்துதா என்று அம்மாளைக்கேட்பதில்லை. கேட்டுக் கேட்டு அலுத்துப் போனேன் என்றல்ல. அவளின் முன் கண்மூடி நிற்பதில் ஒரு சுகம். அவள் தீர்த்தம் குடிப்பதில் ஒரு திருப்தி. விபூதி, சந்தனம், பூசுவதில் ஒரு புனிதம். அம்மாள் என்றால் எனக்கு கொள்ளை ஆசை.

வெறிமிகுந்த அன்பு. என் தெய்வம் அவள் தேவதை அவள். சக்தி அவள் எனக்கு எல்லாமே அவள். அவள் மூக்கைப் பிடிக்க வேண்டும். தலையை தடவ வேண்டும். கன்னம் கடிக்க வேண்டும், அவள் கை பிடித்து கனக்க கதை பேசவேணும். என் மகாசக்தி அவள்!

எனக்குப் படிக்க நிறைய இருந்தது, இலகுவா இருந்தது. எந்த நேரமும் படித்தேனல்லன். ஆனால், படிக்கிற நேரத்தில் படித்தேன். இரவாகிறபோது கட்டாயம் படித்தேன். பிறகு அன்றைய நாளின் நிகழ்வுகளை டயறியில் குறித்து விட்டுப்படுத்தேன்.

என்னிடம் அழகிய - லயிக்கக்கூடிய இனிய கனவு போன்ற இரகசியங்கள் இருந்தன. பிறர் அறிந்தால் நான் வெட்கப்படத்தக்க, கூச்சப்படத்தக்க இரகசியங்கள் அவை. டயறியை அம்மா பார்க்கமாட்டா. கதவு திறந்திருந்தால் அப்பா சிலவேளை பார்க்கலாம். எனவே, ஒருவருக்கும் விளங்காத பாசையில் நான் டயறி எழுதினேன். அதற்காக பாசை உருவாக்கினேன். அப்படிச் சொல்லக்கூடாது. நானும் பராபரனும் சேர்ந்து உருவாக்கின பாசை அது. வேறொரு தேவைக்காக உருவாக்கியது.

ஆறாம் வகுப்பு படிக்கிற போது நானும் சிவமும் ஒரு பாசை உருவாக்கினோம். மரம் என்றால் பகும். வேம்பு என்றால் மதகி. வேப்பமரம் என்றால் பகுமதகி. இப்பிடி புதிய சொற்களை நானும் சிவமும் செய்தோம். அக்கா கோள்மூட்டி என்று தான் நெக்கிறேன். அப்பா அதை அறிந்து விட்டு கிணற்றடியில் இதரை வாழை மரத்தின் கீழே வைத்து ஏசினார். நீங்கள் என்னடா தமிழை அழிக்கப் போறியளாடா? தெலுங்கு, மலையாளம், கன்னடம் எல்லாம் இப்படித்தான். தமிழில், இருந்து வந்தது. நீங்களும் ஒரு புதுப்பாசையைக் கண்டு பிடிச்சு தமிழை அழியுங்கோ.

அப்பா திட்டி விட்டுப் போன பிறகு மாமாவுக்கு விசர். நாங்கள் தமிழை அழிப்பமே! என்று சிவம் முணுமுணுத்தான். ஆயினும், தமிழை அழியவிட அவனும் விரும்பவில்லை. நானும் விரும்பவில்லை.பாசை உருவாக்கவில்லை.

ஆனால், நானும் பராபரனும் உருவாக்கின பாசை வேறு. அது தமிழை அழிக்காது அ,ஆ என்கின்ற உயிர் எழுத்துக்களுக்கு 1,2 என்று போட்டோம். க்,ங் என்ற மெய்யெழுத்துக்களுக்கு யுஇட என்று போட்டோம். நந்தினி சிரித்தாள். எண்டதை ர்றைபЗ சுЗ உЗ டЗ பப2 என்று எழுதினேன். அப்படி நான் டயறியில் குறித்தேன். நந்தினி சிரிக்கிறதே அன்றைய பொழுதுக்கு சொகுசாக இருந்தது. சொர்க்கமாக இருந்தது.

என்னைப் பார்த்து எந்தப் பெண்ணும் அப்போது சிரித்ததில்லை. தூரத்தில் என்னைக் கண்டவுடனேயே மூஞ்சியை நீட்டினார்கள் என்று சொல்லலாம். என்னைப் பார்த்து முதல் அன்பாகச் சிரித்தவள் நந்தினி. கதைத்ததும் கூட அவள்தான். ரவி என்று பெயர் சொல்லிக் கூப்பிட்ட வேறொரு பெண் கூட அவளே! எழுபத்தேழு எலக்சனிலை வோட்டுப் போட எனக்கு வயது ஆகவில்லை. ஆயினும், காலமை ஆறு மணிப் பூசைக்கு அம்மாள் கோயிலிலை போய்க் கும்பிட்டிட்டு சீனன் கலட்டிப் பள்ளிக் கூடத்திலை பூத் திறக்கப் போய் கள்ள வோட் போட்டேன்.

நான் கள்ளவோட் போட்டிருக்கத் தேவையில்லை. அம்மாளைக் கூடக் கும்பிட்டிருக்கத் தேவையில்லை. தந்தை செல்வாவின் தொகுதி இது. தமிழீழத்துக்காக சர்வஜன வாக்கெடுப்பு இந்த எலக்சன் எண்டு சொல்லியிருக்கினம். நல்ல மஜோரிட்டியோடை வெண்டால் அடுத்த தைப்பொங்கலுக் குள்ளை தமிழீழம் எண்டும் சொல்லியிருக்கினம். அதுக்கு யாரும் வெல்லுவது கஷ்டமே. ஆனாலும், தமிழீழம் கிடைக்க வேணுமெண்ட வெறி. அஞ்சுவோட் போட்டன்.

கணேசமாமா வீட்டிலை வேணு அண்ணை தேசிக்காயாலை பூசின மையை தேய்ச்சு தேச்சு அழிச்சுவிட சிறீகாந்தனண்ணை ஆராற்றையோ பேரிலை துண்டுகளைத் தந்துவிட போய்ப் போய்ப் வோட்டுப் போட்டேன். பொலிஸ் வந்ததிலை அஞ்சு வோட்டோடை நிப்பாட்டிட்டேன். மத்தியானம் பொலிஸ் ஜீப் வந்த போது மடாரென்று மேசை இடிக்க வேணு அண்சையாச் சிரிச்சிருக்காட்டிலும் நான் அஞ்சு வோட் போட்டிருப்பேன். ஆனால், அவள் அப்பிடிச் சிரிச்சது தந்த சந்தோசம் மிகக்கூட. அன்று முழுக்க சிலிர்த்து சிலிர்த்துப் புளுகிக் கிடந்தேன். அம்மாளைக் கும்பிட்டிட்டு வந்து கியூவிலை நிக்கிறன். பொம்பிளைகளின்ரை கியூவிலை பாத்தால் நந்தினி! என்னைக் கண்டு வாயிலை கைவைச்சு ஆவெண்டு சிரிச்சாள். ஓகோ கள்ளவோட்போடப் போறியோ? என்கிற மாதிரி தலையை ஆட்டினாள். கண்ணையும் ஆட்டினாள்.

அவள் சிரித்தால் கன்னத்தில் றோஸ் நிறமா மினுங்கும். நான் அப்படி ஒன்றும் தலையை ஆட்டவில்லை. எடி குட்டிப் பெட்டை என்று ஆசையாச் சிரிச்சன். அவளும் கள்ளவோட் போடத்தான் வந்திருக்கிறாள். பயங்கரக்கள்ளி!

இரவு எலக்சன் முடிவு கேட்க றேடியோவைப் போட்டிட்டு இருந்தம். சாமம் போலை புதுவெள்ளம் எண்டு புதுப்பாட்டுக்கள் போட்டிச்சினம். அந்தப்புரத்தில் ஒரு மகராணி... எண்ட பாட்டு வந்தது. எனக்கு நந்தினியின் ஆவெண்டு சிரிச்ச முகம் திரும்பத்திரும்ப வந்தது.

**இரவி அருணாசலம்**

நானும் கண்ணை மூடிச் சிரிச்சன். பிறகு வந்த அம்மாள் கோயில் பூங்காவனத்துக்கு றொலைக்ஸ் லவுட்ஸ் பீக்கரிலை அந்தப் பாட்டுப் போனது ஏனோ மனசு வெதும்பி வந்தது.

மேசைக்கு முன்னாலை நான் படிச்சுக் கொண்டிருக்க சோளகம் தான் அள்ளிக் கொண்டு வந்தது அந்தப் பாட்டை. பிறகு எனக்கு ஒன்றுமாய் ஏறவில்லை. யன்னலுக்குள்ளால் வெளியில் பார்க்க ஒன்றுமில்லை. வெளி இருட்டாக இருந்தது. கொப்பியை மூடினேன். டயறியைத் திறந்தன். மனங்கலங்கினதை எழுதினன். அம்மா கோப்பையைக் கொண்டு வந்து மேசையிலை வைச்சா மரக்கறியில் புட்டு மணத்தது.

*(இன்னும் வரும்.....)*

## எங்கே நாங்கள் போகிறோம்?



கந்தோருக்கு வந்த நேரத்தில் இருந்து அந்த யுவதி அப்படி இருப்பதும், இப்படி இருப்பதும் பின் திரும்பி இருப்பதுமாக ஒரு அந்தரநிலையில் கதிரையில் அமர்ந்திருந்தாள்.

நானும் அந்த யுவதி ஏன் அப்படி நடந்து கொள்கிறார் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அந்த யுவதியின் முன்னால் மூன்று நான்கு ஆண் அதிகாரிகள் இருப்பதும், அவர்களுக்கு நேரே குட்டைச் சட்டை போட்டிருப்பது காரணம் என்றாலும், அவளுக்கு எரிச்சலூட்டவில்லை.அவள் முன்னால் உள்ள ஆண் அதிகாரிகளுக்கே அவளது நிலையைக் கண்டு எரிச்சலைக் கொடுத்தது.

அவளுக்கு அருகில் இருந்த சக பெண் உத்தியோகத்தர் அவளைப் பார்த்துக் கேட்டாள்.

"மிஸ் கந்தோருக்கு இப்படியான சட்டை போடுவது அநாகரிகமல்லவா"

"இஞ்ச பாருங்கோ! அது என்ர சுதந்திரம். நான் எப்படியும் வருவன், போவன். அதைக் கேட்க நீங்கள் யார்?" என்று ஒரு போடுபோட அந்தப் பெண் மௌனியாகி விட்டாள்.

**கனகு**

இன்றைக்குப் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு எமது பெண் பிள்ளைகள் சாறிகள், பாவடை சட்டை போட்டு வலம்வந்த கலாசாரம் குட்டைச் சட்டையால் குழி தோண்டிப் புதையுண்டு போகிறதோ?

இதன் காரணமாகவோ சென்னையில் உள்ள இரண்டு உயர் நிலைக் கல்லூரிகளுக்குள்ளும், கதிர்காமக் கோவிலுக்குள்ளும் குட்டைச் சட்டை அணிவது தடை செய்யப்பட்டுள்ளதோ தெரியவில்லை.

## என்னைத் துரத்திய அவள்

ஐயய்யோ....
அம்மா பேசப்போகிறா
அந்தி சாய்ந்து
அரை நாழியாச்சு
அவசர அவசரமாய் நடந்தேன்
என்மனதில் ஏதோ ஒன்று கூறிற்று
வேக நடையை தளர்த்தாமலே
திரும்பிப் பார்த்தேன்!

அவள்என்னைதுரத்துவது போல்
பயத்தின் பந்துகள் வயிற்றுக்குள்
உருண்டோடின
உடனடியாக வீடு சென்று
என் அறையினுள் சென்று
உடைமாற்றினேன்
கண்றாவி! அங்கேயும்
யன்னலினூடே எனைபார்த்து

கண் சிமிட்டினாள்
இழுத்து யன்னலை அடித்து
சாற்றினேன்
அப்பாடா! என்றவாறு கொட்டாவி
விட்டு அண்ணாந்து படுத்தேன்
அதிசயம் அங்கேயும் அவள்
அழகான புன்னகையில்
கண்சிமிட்டினாள்

என் முகட்டு கூரையின்
ஊடே
எட்டி எட்டி என்னைப்
பார்த்தவள்
அழகு மதியவள்
வெண்நிலா– வானத்தின்
பொன்நிலா– பெண்நிலா

நிதுசி

# கவிதைப் படிகள்

## உங்களுக்கு மட்டும்...!

ஏன் பிறந்தோம்???
தெரியும் முன்னமே
தேடி வருகிறது மரணம்!
தெரிய வராது காரணம்!
உங்கள் விசைகளில்....
எங்கள் உயிர்கள்!
கணப்பொழுதுகளில்



சன்னம் பாய்ந்து
சல்லடையாகும் தேகம்!
பிணங்கள் குவியும்!!!
நிணம் வடிந்து நாறும்!!!
நிதம்
உலகில் உமை
நியாயப்படுத்துங்கள்!
எங்கள் சவக்கிடங்குகள் மேல்
எழுக உம் காவிகள்!
தொடை என்புகளால்
தோரணவாயில் அமையுங்கள்!
மண்டை ஓடுகளை
மறந்துவிடாதீர்...
அவை உம் பிச்சா
பாத்திரமாகட்டும்!
எம் அவலக்குரல் மேவி
எங்கும் ஒலிக்கட்டும்
உங்கள் 'பிரித்' ஒலி! – அது வரையில்இது
உங்களுக்கு மட்டும்!!!

-மணிபல்லவன் -

## எம் பட்டணம்

பட்டணம் போய் படித்தால்
எட்டலாமுயர் பதவியென்று
விட்டுவிட்ட தாயே
கெட்டுவிட்டதம்மா – எம் பெருநகர்!

எட்டுத்திக்கிலும் முட்டுப்பட நிக்குது
எட்டிப் பார்த்தால் முறைத்துப் போகுது!
தட்டிக்கூட கதைக்குது - இப்படியே
விட்டுவிட்டால் தலைவலி தானுனக்கு!

முட்டிக்கால் தெரியும் கட்டையாடை
இழுத்துவிட இருகை போதுமா?
இருந்தும்
இழுத்து விடுவார்கள்!
உடலுக்கு உள்ளொன்றும் மறைக்கா
ஒற்றையாடை – இவ்வளவுமா?
எவ்வளவோ உண்டு!

சில்லென்று சிரிப்பு - ஏன்னென்று
பார்த்தால்
கையில் "செல்"லொன்று சிலிர்ப்பு!
வந்துவிடு, வந்திட்டம், பழைய இடம்
முடிந்திட்டுது கதை! – இனி
இவர்கள் கதை வேறு!

மெல்லியதாய் சிரிக்கும்
பண்புள்ளதென ஆடையும்
அறிவுறுத்தும் – கொப்பியணைத்து
நடக்கையில்...
படிக்கும் பிள்ளையென மகிழுமெம் மனது!
அந்தோ...! – அதுவும்
ராஜாவுக்குள் வந்து
ஒரு மூலையில் ஒதுங்கும்!

நம்பி அனுப்பும் தாயே - இதையறிந்தால்
வெம்பி யுன்மனம் புழுங்கும்! – அள்ளி
காசனுப்பும் கனடாத்தம்பியின்
கையும் கணக்குப் பார்க்கும்!

யாரென்ன சொல்லியும் திருந்தார் – பார்
பார்க்குமா என் வரவு – செலவென
பரிகசிப்பர்! – நாளையவர் வாழ்வதனை
ஊருலகு பரிகசிக்கும் – அதறியார்
இவர்களே...!

நெற்கொழுதாசன்
வல்வை

## என்னுடையவைகள் பற்றி....

சுமைகளுக்குள்
சுமைகள்
சுமக்கப்படும்
நரகவாசல்களின்
வெளியேறுதலின்
நெருங்குதலாய்!

மீளுகைக்குள்
நீளுகையாகும்
துயர்களின்
அங்குரார்ப்பணம்!

எனக்குள்
ஏற்றப்படும்
சுமைகளுக்குள்
சுவீகரித்துக் கொள்ளப்படும்
என்னுடையவைகளின்
சுமைகள்!

என்னை
நானே
ஏறெடுத்துப் பார்க்கும்
வலிகள் தங்கிய
அந்த நிமிடங்கள்
என் துயரத்தின்
அகராதியாயிருக்கும்!

எது பற்றியும்
அலுத்துக் கொள்ளாமலும்
அலட்டிக் கொள்ளாமலும்
எதிர்காலம்
என்னை வரவேற்கும்
இன்முகத்துடன்!!!

– கு.பா.தீபச்செல்வன் –

## "வல்லமையொரு நாள் வாழ்வு தரும்!"

எங்களிரவுகள்...
இன்றும் நிலைத்திருக்கிறது
நேற்றிருண்ட பொழுதின்றும்
நீண்டபடி செல்கிறது.
நிசியிலெங்கள் வானத்தில்...
நின்றொளிரும் நிலவும்
ஊமையாகி உருகி நிற்க
இரவுகளின் 'ஆயுள்'
முடிவிலியாய்.... மாறிற்று.


மணித்துளிகள் ஒவ்வொன்றும்
மரணத்தை வரவேற்க,
மனச்சுமையோடுலவும் 'வாழ்வு'
மண்ணிலெமக்காய் ஆயிற்று.

ஓலங்களிங்கு உருப்பெருத்து
காலங்களைத் தனதாக்கி
காத்திருப்பின் வாசலிலே...
கட்டியெமை வைத்திற்று.

கனவுகளும் நினைவுகளும்
காலத்தை வெல்வது போல்
இருக்கிறது; அந்த
நிஜத்தின் நிழலதனில்
நின்று நிமிருவதாய்.....
'நெஞ்சு' உரங்கொள்கிறது.
வரலாறாய் ஆன பெரும்
'வல்லமையாய்' அவ்நிஜத்தை
வாரியணைத்து நிற்கிறோம்.

'இழந்துபோன வாழ்வு'
எங்களுக்காயாக,
வல்லமையொருநாள்
வென்று வரும்; இங்கு
விடிந்திடுங் காலையில்
வாழ்வு தரும்...!

சு.க.சிந்துதாசன்



## உறவுகள்

பணத்துக்காய் விற்கப்பட்டு
பணத்துக்காய் ஒன்று சேர்ந்து
பாசவலைகளை அறுத்து
பணவலைகளால் பின்னப்படும்
ஓர் இனமிது.
வறுமையின் போது விரிசல்களும்
செல்வத்தின் போது கூடல்களுமாய்
மந்தாரமாய் வீசும்
மேகம் இது.

அமலி – இளவாலை.

## நதி தேடும் இதயம்

நதிதேடும் பாதையில் நான் நடக்கும் போது– உன்
புத்தாடை என் கண்ணில் – மலர் தூவ

நீ வருகின்ற பாதை முன் தரையின்றி – பஞ்சுகள்
படிகின்ற படிக்கட்டுக்களாகி வர

உனது இதழ்கள் என்னைக் கண்டதும் – சில்லரித்துப்
போக உனது மனம் என்னை ஏற்கும் என்று மௌனமாக

என் இதயத்தின் துடிப்பு உனக்கு ஏக்கம் தர
நீ எங்கு இருக்கின்றாய் உனது முகவரி அங்கு
இருக்கிறது என்று நான் அறிய

உனது இதயத்தில் நான் எனது வாழ்க்கையை
ஆரம்பித்து படிக்கட்டுகள் – ஆக்கி
உன்னோடு வாழ என்றுமே என் இதயத்தில்
நெஞ்சம் ஏங்கிக்கொண்டு இருக்கிறது – நீ
எப்ப என்னை காணுவாய்

–வித்தகி–

## காத்திருப்பேன்

காதல்....
அது கைகூடும் போது
கதையாகிறது.
பிரிந்தேகும் போதுதான்
காவியமாகிறது.

காதலர்களே.... உங்கள்
காதலின் ஆழத்தை கண்டுகொள்ள
உறவுகளை அதிகரித்து
உறங்கி விடாதீர்கள்.
மனதால் இணைந்து
உடல்களால் பிரிந்த போதுதான்
உண்மைக் காதலின்
உருவம் தெரியும்.
அழியாத அன்பின் ஆழம் புரியும்.
அதன்பின் இணையும் உங்களைப்
பிரிக்க
அகிலத்தில் எவரும்
இருக்க மாட்டார்கள்.
உள்ளன்பாய்
உணர்ந்த காதல்
உடல்கள் அழிந்த பின்னும்
உலாவரும் சூரியனாய்!
கவிதை படியேறி
களித்திருந்த பொழுதுகள்
ஏனோ என்னுள்ளே...
ஊற்றெடுக்கும் உற்சாகம்
தாலாட்டும் தலைகோதும்
தமிழ் மலர்ந்து மணம் வீசும்
திசை நோக்கி என் சிரம் தாழும்
காத்திருப்பேன் மீண்டும்
கவிதைப் படியேறி
களித்திருக்கும் பொழுதுக்காய்!

எம். விலாசினி

## மரம் காட்டும் மனிதம்



அபிதவன்
அச்சுவேலி

இயற்கை, இழப்புக்களுக்காய்
இழவு காத்திருப்பதில்லை
சோகத்தின் வடுக்களை,
துடைத்துக் கொள்கிறது – மிக
துரிதமாய்.
நிஜத்தில் கசப்பிருந்தும்,
நிழல்களுக்கு 'சக்கரை'
பூசிக் கொள்கிறது பூமி
சோகங்கள், சுமைகளுக்கு
முலாம் பூசி பசுமையாய்
சிரித்துக் கொள்கின்றன
இயற்கையின் இளவல்கள்.

இலைகளின் பச்சிருப்புக்காய்,
தம்மையே உருக்கும்
பனித்துளியின் தியாகம்!
வேர்களின் முதுமையில் – தம்
இளமையைக் கரைக்கும்,
பீஷ்ம விழுதுகள்!

மரண நேரம் அறிந்தும்
மற்றவர்க்காய் மகிழ்ந்திருக்கும்,
பூக்களின் பூரிப்பு!
அந்தியோடு அந்திமமென்று,
தெரிந்திருந்தும்,
பூக்க மறுக்காத பூஞ்செடிகள்!
கை விட்டுப் போகும்
பூக்களை எண்ணிப்
புலம்பிடாத காம்புகள்!
வெம்மையின் வாட்டமோ,
மழைத்துளிக் கொண்டாட்டமோ,
வெளித்தெரியாத வேர்கள்!
கிழங்கானதும், கிளறப்படுவதை,
அறியாமல்....
வளர்ந்துயர்ந்து,
வானம்பார்க்கும்,
வருங்கால நினைப்பில்
பாத்தியில் பரவப்பட்டிருக்கும்,
பனையின் வித்துக்கள்!
வெட்டப்பட்டு வீழ்த்தப்படமுன்
விதைகளை வீழ்த்தி
வம்ச விருத்திக்கு
அவசரப்படும்,
மரங்களின் துடிப்பு!
மரணத்திலும் மற்றவர்க்காய்,
வாழ்வதிலும்... – தன்
சோகம் மறைப்பதிலும்
சுயநலம் மறப்பதிலும்
மரங்களைப் போலிருங்கள்,
போதும் !

## இரண்டு கவிதைகள்

எல்லையற்ற வானத்தில்
ஒற்றை நிலவின் தனிமை
யாரிட்ட சாபம்?

ஓநாய்களின் இராஜ்ஜியத்தில்
ஆடுகளின் குரல் ஒலிப்பதில்லை.
ஆடுகளுக்கான குரலும்
பிழைப்பதில்லை.
ஆதலினால்,
நான் துயரற்றேன்.
நெகிழ்ந்த தனிமையும் துயரற்றது.

எனது பாடல்களைத் திருடினீர்கள்.
எனது குரலைத் திருடினீர்கள்.
எனது கனவு வழிகளையும்
அடைத்தீர்கள்.
நல்லது தோழர்களே
உங்களை எஜமானர்கள்
ஆசீர்வதிக்கட்டும்.



உடைக்கப்பட்ட அன்பின் முனையில்
வடிந்த குருதியெங்கும் படிந்திருக்கிறது
உங்கள் துரோகத்தின் நிழல்.

ஒரு குண்டு மணியளவானதல்ல
அன்பு
மேலுமது
வானம் போன்றதுமல்ல.

ஞாபகச்சிலுவையில்
அறையப்பட்டுள்ளன
கடந்த காலத்தின் போலி முகங்கள்

தோழர்களே!
புறாக்களை வேட்டையாட
துப்பாக்கிகளெதற்கு?
உங்கள் புனைவுகளால்
புதியதொரு கணத்தை உருவாக்காதீர்!

நமது துயரங்கள்
உங்கள் மகிழ்வுகளாகட்டும்.
நமது சுமைகள்
உங்கள் சுகங்களாகட்டும்.
நமது காயங்கள்
உங்களைச் சிலிர்ப்புறச் செய்யட்டும்.
நமது கண்ணீர்த்துளிகள்
உங்களில் புன்னகையாய்
விரியட்டும்.

ஆயினும்,
அறிக என் தோழர்களே...!

ஆலவட்டங்கள் பற்றிய
கனவுகளுடன்
உங்களால் நனையாமல் செல்ல
முடியாது
மழை நாளொன்றில்.

பொய்களையும்
புகார்களையும் மட்டுமேற்கும்
ராஜ செவிகள்
உதறுமொரு நாளில்
உங்கள் மகிழ்வுகளையும்,
துக்கங்களையும் பகிர
எங்கு செல்வீர்கள்?

### வானவில் தோன்றும் பொழுது

பெய்தோய்ந்த பெருமழையில்
முழுதும் நனைந்த காகமொன்று
தன்னையுலர்த்தியபடியிருக்கிறது.

இறகு சிலுப்ப
சிதறும் நீர்த்துளிகளொவ்வொன்றிலும்
வானவில்லின் முகங்கள்.


மழையின் பேரில்
வருத்தமேதும் கொள்ளாக் காகம்
தொடர்ந்தும் பறக்கும்
தன்பாட்டில்.

மழை
மீண்டும் வரலாம்.
வராமலும் விடலாம்.

யோ. கர்ணன்

# கண்ணாடிப்பூக்கள்

**வெ.நாகநாதன்**
மருத்துவபீடம்



ரம்மியமான இளமைப் பருவம் அது; வண்ணாத்துப் பூச்சியின் சிறகின் கீழ் வாரமெல்லாம் வசித்திடக் கேட்கும். மெல்லிய காற்றின் சங்கீதம் காதுக்குள் மெல்லிசையாய் ஒலித்திடக் கேட்கும், இதயச் சிறகை உரக்க விரித்து காதல் வானில் இதமாய்ப் பறக்கக் கேட்கும்; சிறகசைத்து காற்றில்... பூமலரும். பூ மலர... வண்டின் வருகை கண்டு பூ மெல்ல நகும். வண்டு தேனை உண்டு பூவை விட்டு மெல்ல நகரும். வாடிய பூ – சமூகத்தின் கரடுமுரடான தரையில் பட்டு கண்ணாடிப் பூவாய் சில்லென்று சிதறிப் போகும்.

பொதுவாக யௌவனப் பருவமானது – 13 – 19 வயதுக் குட்பட்டது.இதனை ஆங்கிலத்தில் Teenage என்று அழைப்பர். இந்தப் பருவத்தில் பெரிதும் உளரீதியான, உடல்ரீதியான முதிர்ச்சியைப் பெண்கள் கொண்டிருப்பதில்லை. இதனால் இந்தப் பருவத்தில் இவர்கள் தாயாகும்போது அதிகமான அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அனேகமாக இவர்கள் தாயாவதுகூட ஒரு திட்டமிட்ட செயற்பாடாக அமையாது. தவறுதலான செயலாகவே அமைந்து விடுகிறது. அத்துடன், இவர்கள் தங்கி வாழ்பவர்களாகவும், போதிய உளவலிமை அற்றவர்களாகவும். கல்வியைத் தொடர்பவர்களாகவும் மற்றும் சமூகத்தின் கூர்மையான பார்வைக்குள் தவறாது சிக்கிக் கொள்பவர் களாகவும் அமைகின்றனர். இவர்கள் உடல் ரீதியாகப் பெரிதும் முதிர்ச்சியடைந்திருப்பதில்லை.

இவர்களின் கருப்பை வளர்ச்சி, இடுப்பு என்பின் தன்மை என்பனவும் கர்ப்பத்தைக் காக்கும் தகவு அற்றதாகவும், பிரசவத்துக்கு ஏற்புடையதல்லதாகவும் காணப்படுகிறது.

இதனால் இவர்களுக்குப் பொதுவாக மருத்துவ கருவிகளைப் பயன்படுத்தியே பிரசவிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்படுகிறது. இதனால் தாய்க்கும் சேய்க்கும் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம்.

அத்துடன், இவர்கள் பிரசவத்துக்கு ஒத்துழைக்கும் தன்மையும் மிகக்குறைவாகவேயுள்ளது.

இவை மட்டுமல்லாது இவர்களின் மனநிலை– ஒத்துழைப்பின்றிய தன்மைகளினாலும், போசாக்குக் குறைபாடுகள் காணப்படுவதாலும், (வேண்டாத கர்ப்பம், கர்ப்பம் பற்றிய போதிய அறிவின்மை) இவர்கள் ஆரோக்கியமான குழந்தைகளைப் பிரசவிக்கத் தவறுகின்றார்கள். அத்துடன், கர்ப்பவதிகள் (கிளினிக்) பிணி ஆய்நிலையத்துக்குக் கிரமமாகச் செல்லாது விடுவதாலும், அங்கு வழங்கப்படும் போசாக்கு மாத்திரைகளை உட்கொள்ளாது விடுவதாலும், வைத்திய ஆலோசனையை செவிமடுக்கவும் தவறுவதால் இவர்களின் குழந்தைகளின் நலம் பாதிப்படைய சாத்தியக் கூறுகள் மேலும் அதிகமாக உள்ளன.

இந்தச் செயற்பாடுகளால் குறைபிரசவங்களுக்கும், காலம் தவறிய பிரசவங்களுக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கின்றன. தவிர, இவர்கள் தாயாகும்போது மேலும் சில சிக்கல்கள் ஏற்பட சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது.அதாவது – குருதிசார் உபாதைகள் (P.P.H, PIH) சிறுநீர்த்தொற்று, அமையம் தவறிய கருத்தங்கல் (Ectopic Pregnancy). அதிபரவாந்தி (Hyperemisis gravidarum) என்பனவாகும்.

அத்துடன், இவர்கள் கருப்பை புற்றுநோய்க்கு ஆளாகவும் சாத்தியக்கூறுகள் உள்ளன, மற்றும் யௌவனப் பருவத்தில் கர்ப்பம் தரித்தல் ஏற்புடையதல்லாத ஒரு விடயம் என்றே கூற வேண்டியுள்ளது. இவை தவிர, யெனவனப் பருவ கர்ப்பம் தரித்தல்–தவிர்க்கும் முறைகளாலும், குற்றவியல் கருச்சிதைவுகளாலும் (Criminal abortion)– தாய் மரணம் போன்ற பாரதூரமான விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்

☆ ☆ ☆ ☆ ☆

## புத்தெழுச்சி....

கேட்டபோது வெண்ணிலாவுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

இரண்டு வாரங்களுக்குப் பின்னர் அவர்களது தோட்டப் பாடசாலைக்குச் சீதா ஆசிரியையாக வந்திருந்த போது வெண்ணிலா உடைந்து போனாள்.

அடுத்த வாரம் தோட்டத்து சுப்பவைசர் வேலைக்கு சில சிங்கள இளைஞர்களும், வேறு தோட்டத்திலுள்ளவர்களும் நியமனம் பெற்று வந்த போது முரளியும் இடிந்து போனான்.

வெண்ணிலா தொடர்ந்தும் கொழுந்து பறிக்க தினமும் மலையேறிக் கொண்டிருந்தாள். மாதம் ஒன்று கழிந்தபோது சந்திரமுகி மீண்டும் வந்தார். வெண்ணிலா தனக்கு நடந்த அநீதி பற்றிக் கூறிக் கண்கலங்கினாள்.

‘‘கவலைப்படாதே இதற்காகத்தான் நாம் பெண்ணிய அமைப்புகளை உருவாக்கி வருகிறோம். நீதிக்காக நிச்சயம் போராடுவோம். அடுத்த வாரப் பத்திரிகையிலே நான் இதுபற்றி எழுதுகிறேன். அத்தோடு எம்.பியையும் சந்தித்து நியாயம் கேட்போம். பெரும்பாலும் எல்லா இடங்களிலும் இடைத்தரகர்களின் மோசடிதான் அதிகமாயிருக்கு’’ என்று அவளைத் தேற்றினார் சந்திரமுகி.

அன்றைய பெண்ணிய அமைப்பின் கலந்துரையாடல்களின்போது பல விடயங்கள் ஆராயப்பட்டன. எல்லாப் பிள்ளைகளையும் பதினோராம் வகுப்புவரை படிக்க வைக்க வேண்டும் எனவும், கல்வி என்பது சிறுவர்களுக்கான உரிமை என்பதையும் சந்திரமுகி வலியுறுத்தினார். குறுகிய கால சுயலாபங்களைக் கருதி, பிள்ளைகளைப் பாடசாலைக்குப் போகவிடாமல் வீட்டில் மறிக்கக் கூடாது எனவும், சிறுவயதில் வீட்டு வேலைக்காரச் சிறுமிகளாக அனுப்பக்கூடாது எனவும் வலியுறுத்தி, இதனால் பிள்ளைகளுடைய எதிர்காலம் பாழடைந்துவிடும் எனவும் எடுத்துரைத்தார்.

இறுதியாக பெண்ணிய அமைப்பின் செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடிவிட்டு செய்யவேண்டிய சில விடயங்கள் பற்றி அறிவுறுத்திவிட்டு சந்திரமுகி விடைபெற்றார். வெண்ணிலாவின் மனதின் ஒரு மூலையில் நம்பிக்கை ஒளி பிறந்தது. மகளிர் மேம்பாட்டிற்காக உழைக்க வேண்டும் என்று மனதில் உறுதியெடுத்துக் கொண்டாள்.

கூட்டம் முடிந்து வெளியேறிய வெண்ணிலாவுக்காக வெளியே காத்திருந்தான் முரளி. அவனைக்கண்டதும் இவளது மனதில் தென்றலடித்தது. சிரித்தபடி அவளை எதிர்கொண்ட முரளி “உனது நியமன விடயம் பற்றி சந்திரமுகி அம்மாவுடன் கதைப்பதாகச் சொன்னாயே, ஏதாவது நல்ல முடிவு கிடைக்குமா?” என்று கேட்டபடி அவளை ஆவலோடு நோக்கினான் முரளி.

“கிடைக்கலாம்.. கிடைக்காமலும் போகலாம். ஒரு வேளை கிடைக்காமல் போனாலும் எனக்குக் கவலையில்லை. பெண்ணிய மேம்பாட்டிற்காகச் செயற்படப் போகின்றேன். இதுவே என்னுடைய இலட்சியம்...” ஒருவித உறுதியுடன் கூறியவளைப் பெருமிதத்துடன் நோக்கினான் முரளி.

வெண்ணிலா நாணத்தோடு சிரித்தாள். “நீங்களும் படித்த இளைஞர்களும் ஒன்று சேர்ந்து அமைப்பு ரீதியில் செயற்படணும். உங்களுடைய பிரச்சினைகள் பற்றி நேரடியாக எம்.பியுடன் சந்திச்சுக் கதையுங்க... எந்தவொரு பிரச்சினையையும் மேலிடத்திற்கு கொண்டு போனால்தான் தீர்வு வரும்!

அவள் சொல்வது நியாயம் என்று முரளிக்குப்பட்டது. ‘கடமையைச் செய், பலனை எதிர்பாராதே’ என்ற கீதையின் வாசகம் நினைவுக்கு வந்தது.

மலையின் ஏற்றத்தில் லொறி ஒன்று விரைந்து ஏறிக்கொண்டிருந்தது. சிறிது நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்த முரளி தனது பார்வையை மீண்டும் வெண்ணிலாவின் பக்கம் திருப்பினான். முன்னரைப்போலல்லாமல், இப்போது அவள் அவனை தைரியமாக நோக்கவே, அவளிடம் கேட்க வந்தது அவன் தொண்டைக் குழிக்குள்ளேயே நின்றது.

‘‘என்ன பலமாக யோசிக்கிறீங்க?” என்று கேட்டாள் வெண்ணிலா “இல்ல... நம்ம விசயம்...?’’ தயங்கியபடி கூறினான் முரளி.

முதல்ல நாம நம்மை ஸ்திரப் படுத்திக் கொள்ளணும். அப்புறம்தான் எல்லாம். கிணற்று நீரை ஆற்று வெள்ளம் கொண்டுபோய் விடாது. நாம உறுதியாக இருந்தா சரிதாங்க.” வெண்ணிலா சிரித்தாள். இருவரும் உரையாடியபடியே சிறிது தூரம் நடந்து சென்று - பின் விடைபெற்றார்கள். புத்தெழுச்சி மனதில் பொங்க ஒரு புதிய நம்பிக்கை ஒளி நெஞ்சில் நிறைந்திருந்தது.

# பேசப்படும் எழுத்து



வாசிப்புப் பழக்கம் கொண்ட சமூகம்– தமிழ் சிந்தனைகளின் எல்லையில் நின்று தன்னை விட்டுக் கொடுக்காது பயனுள்ளதாக மாற்றம் பெறும் போது அந்த உலகம் தனக்கான ஒரு இடத்தினை பெற்று விடுகிறது.

கூடுதலான வாசகர்களைக் கொண்ட தேடலின் பயனாக புதியதொரு சிந்தனைகளின் அடிப்படையில் ஒரு சமூகம் தன்னை வெளிப்படுத்தி நிற்கின்ற போது கூடுதலான புத்தகங்களையும் வெளியிட முடியும். அதனூடாக கூடுதலான வாசகர்களையும் பெறமுடியும்.

கவிதைத் தொகுப்பாக இருக்கலாம். அல்லது சிறுகதைத் தொகுப்பாக இருக்கலாம் அல்லது பொதுக்கட்டுரைத் தொகுப்பாக இருக்கலாம். அல்லது பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கும் ஆக்கங்களாக இருக்கலாம். எதுவானாலும் வாசகர்களின் விமர்சனப் பார்வையில் விழும்போதுதான் - அத்தகைய ஆக்கத்தின் பெறுமதி தெரியவருகிறது.

ஒரு தொகுப்பின் தேவை அதன் சமூகத்தின் பார்வை, உள்ளடக்கம் போன்ற கருத்து மட்டத்தில் நோக்குகின்ற போதும் கூடுதலான வாசகர்களின் பார்வையாளரைக் கொண்டதாக அமையும் போதும் அத்தகைய தொகுப்பு பேசப்படுகின்றது.

ஒரு எழுத்தாளன் தன்னை திருப்திப்படுத்தும் விடயங்களில் கூடுதலாக ஈடுபட்டாலோ அல்லது பிறர் விடயங்களின் பார்வையில் கூடுதலாக ஈடுபாட்டாலோ தனது எழுத்துக்களில் சரியானதொரு முடிவினை பெறமுடியாமல் தொடர்ந்து எழுதிக்கொள்ள வைக்கின்ற போதுதான் - அவன் எழுத்துக்கள் எல்லோரின் கவனத்துக்குள்ளும் கையாளப்படுகிறது.



ஒவ்வொரு எழுத்தாளனும் ஒவ்வொரு கண்ணோட்டத்தில் எழுதுகின்ற போதும் அதன் பார்வை கடைசியில் ஒன்றாகத்தான் இருக்கிறது. இதன் விளைவு வாசிப்புப் பழக்கத்தாலும் ஏற்படலாம். உனது எழுத்து நடை இன்னொரு எழுத்தாளரின் நடையைப் போன்றது என்று கூறும் போதுதான், அந்த எழுத்தாளன் புதிதாக ஒன்றையும் எழுதவில்லை என்பது புலனாகிறது.


ஒவ்வொருவரும் ஒவ்வொரு சுவையைப் பழக்கிக் கொண்டதால் தான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எழுத்தாளனின் எழுத்து பிடிக்கிறது. ஆகவே, எழுதுகின்ற அனைத்து எழுத்தாளனுடைய எழுத்துக்களும் ஏதோ ஒரு விதத்தில் எமக்கு பயனுள்ளதாகத்தான் அமைகின்றன.

வாசகனின் கூடுதலான தேடல் ஒரு எழுத்தாளனின் எழுத்தினை கூட்டி விடுகிறது எனலாம். வெளிவருகின்ற அன்றைய நாளேடோ அல்லது புத்தகத்தின் அடையாளமோ இல்லாமல் போய்விடுகின்ற சூழல் இங்கே கூடுதலாக காணப்படுகின்றது. வாசகனைக் குறைசொல்வதா அல்லது எழுத்தாளனை குறை சொல்வதா என்று பார்த்தால்– இன்னும் எவ்வளவோ தூரம் நாம் வளரவேண்டும் என்பது தெரிகிறது. வாசகனின் தேடலுக்கு அமைய ஒரு எழுத்தாளன் எழுத முடியாது. ஒரு எழுத்தாளனின் எழுத்துக்கமைய ஒரு வாசகன் உருவாக முடியாது. இன்றைய காலம் எதை முக்கியத்துவப்படுத்துகின்றது என்று பார்த்து ஒரு எழுத்தாளன் தன்னை தயார்படுத்தி எழுதுகின்றபோது பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது.

ஒரு எழுத்தாளனும் அவனது புத்தகமும் என்று பார்த்தால் அவனது செயற்பாடும் எழுத்தும் ஒரே விதமாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. ஆனால், அவனது செயற்பாடும் எழுத்தும் ஒரே விதமாக இருக்கின்ற போதுதான்– அந்த சமூகத்தில் எழுத்தாளனுக்குரிய மதிப்பும் அவனது எழுத்துக்குரிய பெறுமதியும் தெரிய வருகிறது.

விமர்சனப் பார்வையில் ஒருவரால் மட்டும் கணிப்பிட முடியாத ஒரு புத்தக்கத்தின் அவசியம் பலரால் பேசப்படுகின்ற போதும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுகின்ற போதும்தான் அந்த எழுத்தாளனுக்குத் தனது எழுத்தில் என்னென்ன மாற்றங்களை கொண்டுவர வேண்டுமென்று சிந்திக்கத் தூண்டுகின்ற வினைத்திறமை காணப்படுகின்றது.


தனது சுயவிருப்பில் சுதந்திரமாக எழுதுகின்ற எழுத்தாளனுக்குப் பின்னணி ஒன்று இருக்கின்றது என்று சொன்னால் அவனது எழுத்துக்குரிய மரியாதை இல்லாமல் போய் விடுகிறது. அதாவது, அழுத்தம் கொடுக்கின்ற சந்தர்ப்பத்தில் அந்த எழுத்தாளன் இப்படித்தான் எழுத வேண்டும் என்று சொன்னால் அதற்குத் தன்னை உட்படுத்தி எழுதாமல் தனக்கென வைராக்கியம் கொண்டு சமூகத்தின் விடுதலையின் தேடலை எழுதுகின்ற போதுதான் அந்த எழுத்தாளனும் அவனது எழுத்துக்களும் பேசப்படுகின்றன.



**செல்வா**


# ஹொலிவூட் பார்வை

## Hills have Eyes




**H**ills Have Eyes முழுக்க முழுக்க இரத்தம் தோய்ந்த, மர்மம் நிறைந்த வன்முறை திரைப்படம். 1977 இல் Wescraven எழுதிய நாவலை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திரைப்படம் எடுக்கப் பட்டுள்ளது. எனினும், திரைப்படம் இந்தக்கால தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப கிராஃபிக்ஸ் காட்சிகள் கொண்டுள்ளது.

இளம் இயக்குநரான அலக்ஸான்ரே அஜா திரைப்படத்தை இயக்கியுள்ளார். ஓர் அமெரிக்கக் குடும்பம் பாலைவனம் ஒன்றினுள்





இரத்ததாகம் கொண்ட அதிசய பிராணிகளிடம் சிக்கி அல்லாடுவதே படத்தின் கதை. இந்தப் பகுதியில் முன்பு அரசாங்கம் நடத்திய அணு வெடிப்பு பரிசோதனையால், இந்தப் பகுதி சுரங்கத் தொழிலாளர்கள் குணம் மாறி, வடிவம் மாறி இரத்த வேட்கையுடன் அலைவதாகப் படம் காட்டுகிறது.

படத்தின் மர்மம் மெல்ல மெல்ல வளர்வது படத்தின் விறுவிறுப்புக்கு உதவுகிறது. அந்த விநோத மனிதர்களால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த சிறிய பெண் குழந்தை தூக்கிச் செல்லப்பட்டு விடுகிறது. ஏனையோர் தம் உயிரைக் காக்க படாதபாடு படுகின்றனர். பொறுப்பற்ற மனிதர்களில் செய்கையால் ஏற்படும் விளைவு, மீண்டும் மனிதர்களையே தாக்கும் என்பதே படம் சொல்லும் செய்தி.

நம்பமுடியாத காட்சிகள் சில இருப்பினும், படம் நகர்த்தப்படும் விதம் விறுவிறுப்புக்குப் பஞ்சம் வைக்கவில்லை. டிஜிற்றல் சவுண்ட் சிஸ்டத்தின் மூலம் எடுக்கப்பட்ட காட்சிகளால் தியேட்டர்களில் இருந்து படம் பார்ப்பவர்களுக்கு நெஞ்சு திக்திக் என அடிக்கும். இருதயநோயாளிகள் இந்தப் படத்தைப் பார்ப்பது உகந்தல்ல என அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

இயக்குநர் தன்னால் எவ்வளவுக்குப் புதுமையைப் புகுத்த முடியுமோ அவ்வளவுக்குப் புகுத்தியிருக்கிறார். மனிதர்கள் அதாவது கண்டுபிடிப்பாளர்களுக்கு இது ஒரு எச்சரிக்கை செய்கின்ற ஒரு படம். நல்ல ஒளிப்பதிவும், இயற்கைக் காட்சிகளும் படத்துக்கு இருக் கின்ற பிளஸ் பொயின்ட்ஸ். அதிகமாகக் காட்டப்படுகின்ற கிராபிக்ஸ் காட்சிகள் சில இடங்களில் தெவிட்டுகின்றது.




## கடல் நீரோட்டங்கள் பூமியின் வானிலையை எந்த வகையில் பாதிக்கும்




ஆழ்கடலில் அதாவது - கடலுக்கு அடியில் நீரோட்டங்கள் ஓடுகின்றன. பூமியில் ஆறு ஓடுவது போல கடலுக்குள் ஆறுகள் நீரோட்டம்போல ஓடுகின்றன. இந்த நீரோட்டங்கள் நிலம் அல்லது காற்றை விடவும் கூடுதலான ஆற்றலுடன் தண்ணீரின் வெப்பநிலையை மாற்றுகிறது. இதனால் கடல் நீர் சூடாவதாக இருந்தாலும் சரி அல்லது குளிர்ச்சி அடைவதாக இருந்தாலும் சரி இரண்டுமே மெதுவாகவே நடைபெறும்.

பூமியில் இருந்து சூரியனால் ஈர்க்கப்படும் வெப்பத்தில் பாதி கடற்பரப்பில் இருந்துதான் எடுக்கப்படுகிறது. இதனால் கடல் பகுதிகளைவிட நிலப்பகுதியில் வெப்பநிலை அதிகமாக இருக்கும். அதேசமயம் கடற்பரப்பில் இருந்து ஏராளமான வெப்பம் நிலப்பகுதிக்கு வெளியேற்றப்படுகிறது. இதன் மூலம் பருவகால மாற்றங்கள் ஏற்படுகின்றன.

பூமியின் மத்திய ரேகையை ஒட்டிய இடங்களில் இருந்து தோன்றும் நீரோட்டங்கள் அதிக சூடாகவும், துருவப் பகுதிகளில் இருந்து தோன்றும் நீரோட்டங்கள் குளிர்ச்சியாகவுமிருக்கும்.

## நெஞ்சுவலி ஏன்?



**40** வயதுக்கு உட்பட்டவர்களுக்கு நெஞ்சு வலி ஏற்படுவதற்கு இரப்பைப் புண்தான் முக்கிய காரணம். இந்த வகை நெஞ்சுவலியை இனம் கண்டு கொள்வது மிக எளிது. நெஞ்சுக் குழிக்குள் வலி தோன்றுவது, வயிறு வலிப்பது, புளித்த ஏப்பம், வாந்தி, நெஞ்செரிச்சல், வயிறு உப்புசம் போன்ற கோளாறுகள் துணைசேர்ந்துகொள்வது இந்த நெஞ்சுவலியை நமக்குத் தெளிவாக உணர்த்திவிடும்.

அமீபா கிருமிகளால் உண்டாக்கும் கல்லீரல் அழற்சி நோய் பித்தப்பைக் கற்கள் கணைய அழற்சி, சிறுகுடலில் துளைவிழுதல் போன்ற நோய்களின் போதும் நெஞ்சில் வலி ஏற்படுவது உண்டு. மேலும் இந்த வலியின் போது காய்ச்சல், வாந்தி, வயிற்று வலி போன்றவையும் ஏற்படுவதுண்டு.

நெஞ்சில் அடிபடுவது, எலும்பு முறிவு, இரத்த உறைவுபோன்ற காரணங்களும் நெஞ்சுவலிக்குப் பாதை அமைக்கும். மார்பு தசைகளில் அழற்சி ஏற்படும்போது தசைப் பிசகு உண்டாகும் போதும் நெஞ்சுவலி ஏற்படுவது மிக சாதாரணம். மார்பு சிறிது அசைந்தால்கூட இந்த நெஞ்சுவலி கடுமையாகும்.

## ரத்த அழுத்தத்தைக் குறைக்கும் குடும்ப பாசம்



**சி**காகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி காக்லி - குடும்பத்தில் அதிக நேரம் செலவழிப்பவர்களிடமும், நண்பர்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுதைப் போக்குவர்களிடமும் இரத்த அழுத்தம் குறைவாகக் காணப்படுகின்றது என்று ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளார். அதாவது - தனிமையில் இருந்து மனதை அலட்டிக் கொண்டு புலம்பித் தவிப்பவர்களுக்கு இயல்பாகவே இரத்த அழுத்தம் அதிகரித்து விடுகிறது என்பதுதான் இந்த ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது.

'உளவியலும் மூப்பும்' என்ற ஆய்விதழில் இது தொடர்பாக இந்த ஆய்வைச் செய்தவர்கள் கட்டுரை வெளியிட்டுள்ளனர். அதில் இது தொடர்பாக ஏற்கனவே நடந்த ஆய்வுகளின் முடிவுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், தனிமை ஏற்படுத்தும் உடல் நலச் சிக்கல்கள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் மட்டும் 50 வயதுக்கும் மேற்பட்ட 90 இலட்சம் பேர் உள்ளனர் என்றும், இவர்களில் பலர் தனித்து விடப்பட்டிருப்பதாகக் கருதுவதாகவும் இந்தஆய்வறிக்கை குறிப்பிடுக்கிறது. சிகாகோ பகுதியில் வசிக்கும் 229 பேரிடம் இது தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டன. நமது அன்றாட வாழ்வில் நட்பும், குடும்பமும், சமூக உறவுகளும் மிக முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்றும் இந்த ஆய்வு வலியுறுத்துகிறது. இளைஞர்கள் வளர வளர குடும்பத்தின் பிடியிலிருந்தும், நட்பு வட்டத்தின் பிடியிலிருந்தும் விலகிச் செல்ல நேரிடுகிறது. அது நாளடைவில் உறவுகளில் தேக்க நிலையை உருவாக்கி மெல்ல தனிமையை உருவாக்கிவிடுகிறது. 50 களில் தனிமையை எட்டுபவர்களுக்கு முதலில் இரத்த அழுத்தும் அதிகரித்து அது இதய நோய்களை உருவாக்கி விடுகின்றன என்றும் வலியுறுத்துகின்றது இந்த ஆய்வு.

## எதுக்கும் உஷாராக இருப்போம்



**அ**ன்றாட வாழ்க்கையில் செல்போன்கள் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. எங்கு போனாலும் விதவிதமான ரிங்கிங்டோன்கள் காதில் ரீங்காரமிடுகின்றன.

இது ஒரு புறமிருக்க செல்போன்களால் புற்றுநோய் வருமா? வராதா? என்று விஞ்ஞானிகள் பட்டிமன்றம் அளவுக்குப் புள்ளி விபரங்களை வைத்து அலசிக்கொண்டு இருக்கிறார்கள். செல்போன் தயாரிப்பில் முன்னணியிலுள்ள நாடுகளில் ஒன்றான பின்லாந்தில் இது தொடர்பான ஆய்வுகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தற்போது மூளையிலுள்ள பாதுகாப்பு வசதிகள் மற்றும் அவற்றைச் செல்போன் கதிர் வீச்சுக்கள் எந்தளவில் பாதிக்கும் என் பது பற்றி ஆய்வுகள் நடந்தது. பொதுவாக மனித மூளையில் இயற்கையிலேயே ஒருபாதுகாப்பு கவசம் உள்ளது. இது நம்முடைய மூளையை பாதிக்கும் ஆபத்தான பொருட்களை இரத்த ஓட்டத்துடன் கலந்து மூளைக்குள் புகுந்து விடாமல் தடுக்க இயற்கையாக ஒரு பாதுகாப்பு அமைப்புள்ளது.

இந்த நிலையில் செல்போன் கதிர் வீச்சுக்கள் இந்த இயற்கை அமைப்பில் சேதம் உண்டாக்குவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்தது. அடுத்து இத்தாலி நாட்டு விஞ்ஞானிகள் இது பற்றி ஆராய்ந்தனர். அப்போது நமது உடம்பில் இருக்கும் சாதாரண செல்களை செல்போன் கதிர்வீச்சானது தாக்குவதோடு, புற்றுநோய் ஆபத்தையும் ஏற்படுத்தி விடுவது தெரியவந்தது. இது தவிர செல்போனில் நீண்ட நேரம் பேசுபவர்களுக்கு ஒரு வித சோர்வும், தலைவலியும் வருவதாகத் தகவல்கள் வெளியானது. இதை அடிப்படையாகக் கொண்டும் ஆய்வுகள் நடந்தன. அதில் செல்போன் கதிர் வீச்சுக்கும் இது போன்ற அசௌகரியங்களுக்கும் தொடர்பு இருப்பது தெரிய வந்தது. மேலும் இந்த அசௌகரியங்கள் புற்று நோய் தாக்குவதற்கான ஆரம்ப அறிகுறியாகக்கூட இருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.


## அதிக வருமானம்



**அ**ப்பாடா! தொலைக்காட்சி நிலையத்தில் செய்தி வாசிக்க இவ்வளவு சம்பளமா என்று பலரையும் வியக்க வைத்திருப்பவர் பிரபல செய்தி வாசிப்பாளர் காட்டி க் கோரிக். இவர் அமெரிக்காவில் உள்ள என்.பி.சி.என்ற தொலைக்காட் சியில் செய்தி வாசிப்பாளராக இருந்து வருகிறார். ஒரு ஆண்டுக்குச் செய்தி வாசிக்க இவர் வாங்கும் சம்பளம் 61 கோடி ரூபாவாகும். உலகிலேயே செய்தி வாசிக்க அதிக சம்பளம் வாங்குபவர் காட்டிக் கோரிக் என்று உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்திருக்கிறார்.

யாழ்.குடாநாட்டில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்குரிய புதிய இடங்களை வழங்க படைத்தரப்பு மறுத்து வருவதால் - கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் மிகவிரைவில் ஸ்தம்பிக்கும் நிலை உருவாகலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டை இராணுவத்தினர் ஆக்கிர



மித்த 1995ஆம் ஆண்டு காலப்பகுதி முதல் ஏராளமான கண்ணிவெடிகள் புதைக்கபட்டன. இதனால் இராணுவத்தினரால் அந்த இடங்கள் கைவிடப்படும்போது அவற்றுக்குள் சிக்கிப் பல பொதுமக்கள் உயிரிழந்ததுடன், அங்கவீனர்களாகவும் நேரிட்டது.

அத்துடன், யாழ்.குடாநாட்டில் ஏராளமான கண்ணிவெடிகளை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்படும். இது இவ்வாறிருக்க, கண்ணிவெடிகளைப் பயன்படுத்துவதை தடைசெய்யும் ஒட்டாவா பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடாததால் கண்ணிவெடிகளைஅகற்றுவது குறித்த திட்டத்துக்கான நிதியுதவியை இந்த வருடத்திலிருந்து இடைநிறுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

2008ஆம் ஆண்டுக்குள் கண்ணிவெடிகளை முற்றாக அழிப்பதற்கான தீர்மானத்தை இலங்கை நிர்ணயித்துள்ளபோதும் - ஒட்டாவா பிரகடனத்தில் கைச்சாத்திடாததால், நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் பாதிக்கப்படுமென ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி ஒருவர் எச்சரித்துள்ளார்.

உலகிலே கண்ணிவெடிகளால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை இனங்காணப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக உள்நாட்டு யுத்தம் காரணமாக வட-கிழக்குப் பகுதியே அதிகம் பாதிக்கப்பட்டதெனலாம்.

கண்ணிவெடிகள் என்பது மனித பாதுகாப்புத் தொடர்பான விடயமென்பதால் - 147 நாடுகள் ஒட்டாவா பிரகடன்த்தில் கைச்சாத்திட்டுள்ள நிலையில், இலங்கை உட்பட பல ஆசிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

இலங்கை இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத போதும், மனிதாபிமானப் பணிகளை மதித்து நடப்பதாக உறுதியளித்துள்ளது. ஆனால், இந்த ஒப்பந்தத்தில் இலங்கையை கைச்சாத்திடுமாறு ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்து வருகிறது. இந்தநிலையில், இலங்கை ஒட்டாவா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாததற்கு உள்நோக்கம் இருப்பதாக அரசியல் அவதானி கள் தெரிவிக்கின்றனர்.

# கண்ணிவெடிகள் தீராத தொல்லை

நிலப்பரப்பும், கடற்கரையோரப் பிரதேசங்களும் உயர்பாதுகாப்பு வலயம் என்னும் பெயரில் முடக்கப்பட்டு - நெல்வயல்களும், விளைநிலப்பரப்புக்களும் கண்ணி வயல்களாக்கப்பட்டன.

எனவே, நிலக்கண்ணி வெடிகள் குடாநாட்டில் பாரிய பொருளாதார, சமூக விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதோடு, வட-கிழக்கில் கண்ணிவெடிகளால் ஏற்படும் பிரச்சினைகளும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஏராளமான மக்கள் கண்ணிவெடிகள் காரணமாகச் சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாது அவலங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் இதுவரை மிதிவெடிகளில் சிக்கி 260 பேர் காயமடைந்து அல்லது அங்கவீனம் அடைந்துள்ளதாகவும், 21 பேர் உயிரிழந்திருப்பதாகவும் யாழ்.செயலக மிதிவெடி செயற்பாட்டு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆண்டுரீதியாக மிதிவெடியால் யாழ். குடாநாட்டில் பாதிக்கப்பட்டோர் விபரம் -

| ஆண்டு | காயம்/ அங்கவீனம் | உயிரிழப்பு |
|---|---|---|
| 2000 | 32 | 04 |
| 2001 | 81 | 08 |
| 2002 | 65 | 04 |
| 2003 | 46 | 02 |
| 2004 | 18 | 01 |
| 2005 | 18 | 02 |

எனவே, கண்ணிவெடிகளால் ஏற்பட்டுவரும் சேதவிபரங்கள் அதிகரித்துவரும் நிலையில் - படைத்தரப்பின் நடவடிக்கையால் யாழ்.குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றமுடியாத நிலை உருவாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் 307 பிரதேசங்கள் மிதிவெடி அபாயமுள்ளவையாக இனங்காணப்பட்டு அங்கு மிதிவெடி அகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளை முழுமையாக அகற்றி, 2008 ஆம் ஆண்டுக்குள் மிதிவெடி அபாயமற்ற யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையில் மிதிவெடி அகற்றும் நிறுவனங்கள் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றன.

கண்ணி வெடிகளை அகற்றுவதற்குரிய இடங்களை படைத்தரப்பே அரசாங்க அதிபரூடாக கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களிடம் கையளித்து வருகின்றன.

இந்தநிலையில், தற்போது புதைக்கப்பட்ட இடங்களையோ, வரைபடங்களையோ வழங்க படைத்தரப்பு மறுத்து வருவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால், மிகவிரைவில் யாழ்.குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் ஸ்தம்பிதமடையலாம் என்பதால் மனிதநேயப்பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தமது பணியாளர்களை ஆட்குறைப்புச்செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

ஆனால், மேற்படி நிறுவனங்களில் இதுவரை காலமும் களப்பணியாளர்கள் ஒவ்வொருமிதிவெடியையும் அகற்றும்போது தமது உயிரைப் பணயம் வைத்துச் சவாலாக இத்தகைய மனிதாபிமானப் பணியை மேற்கொண்டு வந்தனர்.

எனவே, ஏராளமான இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஒன்று உருவாகுமென சம்பந்தப்பட்ட தரப்பினரால் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் யாழ்.குடாநாடு பாரிய சவால்

அதாவது, இலங்கையில் வட-கிழக்குப் பகுதிகளிலே இராணுவத்தினராலேயே கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், வட கிழக்குப் பகுதிகளில் பொதுமக்களின் வாழ்விடங்களையும், விளைநிலங்களையும் உள்ளடக்கியே உயர்பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டு அவற்றைச்சூழ கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றை அகற்றுவது இராணுவத்தரப்புக்கு முடியாத காரியமாகும்.

அத்துடன், இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஏற்பட்டுவரும் இழுபறிநிலையால் - போர்மேகம் சூழ்ந்து வருவதால் மீண்டும் தமிழ்ப் பிரதேசங்களில் கண்ணிவெடிகளைப் புதைக்க வேண்டிய இராணுவ வியூகம் இலங்கை அரசுக்குத் தேவைப்படுவதாகவும் கருதப்படுகிறது.

இந்தக் காரணங்களால் இலங்கை ஒட்டாவா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடமால் நழுவிக் கொண்டுள்ளது.



ஆனால்,இந்த நடவடிக்கைகள் யாவும் தமிழ் மக்களுக்கு எதிரான பிரச்சினைகளாகவே உள்ளன. எனவே, இலங்கை அரசு ஒட்டாவா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாதது - தமக்கு எதிராக இழைக்கப்படும் அநீதியாகவே தமிழ் மக்கள் பார்க்கின்றனர். யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் நிலக்கண்ணி வெடிகளால் ஏற்பட்டுவரும் இழப்புகள் 60 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக யு.என்.டி.பி - யுனிசெவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தர்சன்


ஆனால், தற்போது கண்ணிவெடிகளை அகற்றப் புதிய இடங்களை வழங்க யாழ்.படைத்தலைமையகம் மறுத்துவருவதானது - யாழ்.குடாநாட்டில் கண்ணிவயல்கள் மேலும் அதிகரிக்கக்கூடும் என்ற அச்சத்தைத் தோற்றுவிப்பதோடு, ஒட்டாவா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாததன் மூலம் இலங்கை அரசு மீண்டுமொரு போர்ச்சூழ்நிலையைத் தோற்றுவிக்கக் கங்கணம் கட்டி நிற்பதாகவே தெரிகிறது.

# டென்மார்க்கில் 5 வாரங்கள்

கடந்த 13.02.2006 முதல் 20.03.2006 வரை டென்மார்க் வெளிநாட்டமைச்சு இலங்கைப் பத்திரிகையாளர்கள் இருபது பேருக்கு ஜனநாயக நடைமுறையில் ஊடகங்களின் பங்கு என்ற தலைப்பில் (Role of the media in democratic process) பயிற்சிப் பட்டறை ஒன்றை டென்மார்க் தலைநகர் கோபன் ஹேகனில் நடத்தியது. இந்தப் பயிற்சி நெறிக்கு இலங்கை முழுவதிலுமிருந்து 750 பேர் விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பதாரிகளில் 125 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, இருபதுபேர் தெரிவு செய்யப்பட்டனர். இதில் பத்து சிங்களப் பத்திரிகையாளர்கள், எட்டுத்தமிழ்ப் பத்திரிகையாளர்கள், இரு முஸ்லிம் பத்திரிகையாளர்கள். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் டென்மார்க் மகாராணிக்கு பெட்டிகள் அனுப்பவும் தவறவில்லை.

டென்மார்க்கில் பெற்ற அனுபவங்கள் சிலவற்றை இங்கு எடுத்துக் கூறுவதன் மூலம் எமது மக்களுக்கும் ஓரளவுக்காவது பிரயோசனப்படும் என நினைக்கிறேன்.

டென்மார்க் ஜனநாயகத்தை நடைமுறையில் கடைப்பிடிக்கும் ஒரு நாடு. இலங்கையும் ஒரு ஜனநாயக நாடு என்றுதான் கூறப்படு




கிறது. ஆனால், இலங்கை ஜனநாயகத்துக்கும், டென்மார்க் ஜனநாயகத்துக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம். டென்மார்க் வெளிநாட்டமைச்சின் இலங்கைக்கான பிரதிநிதியிடம் இலங்கைக்கும் டென்மார்க்குக்குமிடையில் என்ன வேறுபாட்டைக் காண்கிறீர்கள் என்று கேட்டதற்கு நாங்கள் ஒருவரையொருவர் கொலை செய்வதில்லை என பெருமையுடன் பதிலளித்தார். சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் டென்மார்க்கில் பாதுகாப்பு வலயம் ஏதாவது உள்ளதா என்று கேட்டபோது, டென்மார்க்கில் பாதுகாப்பு வலயம் எதுவும் இல்லை என புன்னகையுடன் பதிலளித்தார். இதை நாங்கள் நேரடியாகவும் கண்டுகொண்டோம்.

எம்மை டென்மார்க் பாராளுமன்றத்துக்கு அழைத்துச் சென்றபோது எதுவித சோதனைகளும் இடம்பெறவில்லை. வந்த பத்திரிகையாளர்கள் அனைவரும் பாராளுமன்றத்தினுள் புகைப்படங்களை எடுத்துத் தள்ளினர். எனக்கு இலங்கைப் பாராளுமன்றத்தினுள் சென்றபோது பொக்கற்றிலிருந்த பேனாவைக்கூட ஒப்படைத்துவிட்டுச் சென்றது ஞாபகத்துக்கு வந்தது.

இதேபோல் டென்மார்க் அரண்மனையின் வெளிப்புறத்தையும், படம் எடுத்ததுடன், வாயிற்காவலனுடன் இணைந்தும் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். டென்மார்க் அரண்மனைக்கு அருகில் இராணுவ முகாமுள்ளது. நாங்கள் சென்றபோது இராணுவ வீரர்கள் பயிற்சியிலீடுபட்டிருந்தனர். வந்த பத்திரிகையாளர்கள் பல்வேறு கோணங்களில் புகைப்படம் எடுத்தனர். இராணுவத்தினர் தடுப்பார்களென எதிர்பார்த்தேன். அவர்கள் தம்பாட்டில் பயிற்சியிலீடுபட்டிருந்தனர்.

டென்மார்க்கில் பத்திரிகைச் சுதந்திரம் உச்ச அளவில் பேணப்படுகிறது. முகமது நபியின் கார்ட்டூன் விவகாரம் உலகம் முழுவதும் சர்ச்சைக்குள்ளாகியிருந்த வேளையில் தான் - நாங்கள் டென்மார்க் சென்றோம். எட்டு முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் டென்மார்க் பிரதமரைச் சந்தித்து முகமது நபியின் கார்ட்டூன் விவகாரம் குறித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டனர். டென்மார்க் பிரதமர் - அது பத்திரிகை ஆசிரியரின் கருத்துச் சுதந்திரம் எனக் கூறி சந்திக்க மறுத்துவிட்டார். டென்மார்க் 97 வீதம் கிறிஸ்தவர்கள் வாழும் நாடு. நாங்கள் போய் இறங்கிய அன்று கோபன் ஹேகன் போஸ்ட் பத்திரிகை - யேசு விறைத்த ஆண் குறியுடன் காணப்பட்டதாக ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. (Jesus was with an enect penis) இதேபோல் கிவிக்லி என்ற சுப்பர் மார்க்கட் - யேசுவின் படம் பொறிக்கப்பட்ட பாதணிகளை விற்பனை செய்தது. இவை டென்மார்க்கின் கருத்துச் சுதந்திரத்துக்கு சிறு உதாரணங்கள்.

டென்மார்க் வானொலி, தொலைக்காட்சி என்பன முற்று முழுதாக அரச நிர்வாகத்தின் கீழேயே இயங்குகின்றன. எனினும், அரசாங்கத்தைக் கண்டிப்பதற்கோ, விமசிப்பதற்கோ வானொலியோ, தொலைக்காட்சியோ தயங்குவதில்லை. இதற்கு நல்ல உதாரணம் 1987 ஆம் ஆண்டு இலங்கை அகதிகள் விவகாரத்தில் அப்போதைய வெளிநாட்டமைச்சர் இராஜினாமா செய்த சம்பவம். 1987 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து அகதியாகச் சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் இலங்கைக்குத் திரும்பிவந்து இங்கு ஒரு தமிழ்ப்பெண்ணை திருமணம் செய்துகொண்டு டென்மார்க் திரும்பினார். வெளிநாட்டமைச்சர் மேற்படி பெண்ணை டென்மார்க்குக்கு வரவிடாமல் தடுப்பதற்காக சட்டபூர்வமற்ற முறையில் சில வேலைகளைச் செய்தார். டென்மார்க் பயணம் தாமதமானதால் மணமகள் தற்கொலை செய்துகொண்டார்.

டென்மார்க் தொலைக்காட்சி நிருபர் அல்போவுக்கு இந்த விடயம் தெரியவந்தது. அவர் இலங்கைக்கு வ்ந்து

ந.பரமேஸ்வரன்

தற்கொலை செய்துகொண்ட யுவதியின் உறவினர்களைச் சந்தித்து நேரடியாகப் பேட்டி கண்ட பின்னர் டென்மார்க் திரும்பினார். நேரடியாக அமைச்சரிடம் சென்று உங்களது திருகுதாளம் காரணமாக ஒரு அப்பாவிப்பெண் தற்கொலை செய்துவிட்டார். இதற்கு என்ன சொல்கிறீர்கள் என்றார். அமைச்சர் மறுத்தார். உடனே நிருபர் அகதிகளின் வருகையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அமைச்சர் டம்பண்ணிய ஆவணங்களைத் தூக்கி மேசையில் போட்டார். அமைச்சர் திடுக்கிட்டார். இது எப்படி உமக்கு கிடைத்தது என்றார்.

நிருபர் சொன்னார் "பெண்களிடம் வயதைக் கேட்கக்கூடாது, ஆண்களிடம் சம்பளத்தை கேட்கக்கூடாது" என்று சொல்வார்கள். அதேபோல் பத்திரிகையாளர்களிடம் ஆதாரத்தை (Source) கேட்கக்கூடாது என்று நிருபர் அமைச்சரைப் பார்த்து கடுமையான வார்த்தைகளில் சொன்னார். நீங்கள் டென்மார்க் சட்டத்தை மீறிவிட்டீர்கள். நீங்கள் ஒரு கிரிமினல் என்றார். அமைச்சர் தலைகுனிந்தார். மறுநாள் அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்தார். இந்த ஒளிநாடா எமக்கு போட்டு காண்பிக்கப்பட்டது.

சனி, ஞாயிறு இரு தினங்களும் விடுமுறை. விடுமுறை தினங்களில் நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்தோம். நோர்வேயும, டென்மார்க்கும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளன. கழிவுப் பொருட்களை வேறு தேவைகளுக்குப்பயன் படுத்துகிறார்கள்.

(தொடரும்...)